பக்கங்கள் : பன்னிரண்டு + II

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2039 ஆடி 30 வியாழக்கிழமை (14.08.2008) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 261

# சமாதானத்துக்கான ஈடுபாட்டை உலகுக்கு உணர்த்துவதில் தோல்வி

## கோத்தபாய ராஜபக்ஷ ஒப்புக்கொள்கிறார்



கொழும்பு, ஓகஸ்ட் 14

**இனப்பிரச்சினைக்கு நியாயமான தீர்வுகாணும் விடயத்தில் தனக்குள்ள நேர்மையை, சர்வதேச சமூகத்திற்குப் புரிய வைப்பதில் இலங்கை அரசு தோல்வி கண்டுள்ளதாகப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரும், ஜனாதிபதியின் சகோதரருமான கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**

**புலிகளுடன் பேச்சுகளில் ஈடுபடுவது வீண்முயற்சி என்பதால் இலங்கை அரசு புலிகளுடன் ஒருபோதும் பேச்சுகளில் ஈடுபடாது என்றும் அவர் தெரிவித்தார்.**

இந்தியத் தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே.நாராயணன் 'த ஸ்ரெயிட் ரைம்ஸ்' பத்திரிகைக்கு இலங்கை குறித்து வெளியிட்ட கருத்துகள் தொடர்பாக இந்தோ - ஆசிய செய்திச் சேவைக்குத் தொலைபேசி மூலம் தாம் வழங்கிய பேட்டியிலேயே கோத்தபாய ராஜபக்ஷ மேற்கண்டவாறு கருத்து வெளியிட்டிருக்கின்ற ர.

''இலங்கை அரசுப் படைகள் புலிகளுக்கு எதிரான மோதல்களில் வெற்றி பெறலாம். எனினும் ஈழத் தமிழர்கள், இலங்கை அரசின் பக்கத்தில் இல்லாதமையால் அரசினால் யுத்தத்தில் வெற்றிபெற முடியாது'' என்றும் -

''தமிழ்மக்களைப் பொறுத்தவரை அவர்களின் பல்வேறு விடயங்களைத் தீர்மானிப்பதற்கான உரிமை அவர்களுக்கு உள்ளது என்ற உணர்வை அவர்கள் மத்தி யில் இலங்கை அரசு ஏற்படுத்தாத வரை இலங்கையில் வெற்றிபெற முடியாது'' என்றும்-

மேற்படி பேட்டியில் நாராயணன் கூறியிருந்தார்.

இதற்குப் பதிலளித்துள்ள கோட்டாபய ராஜபக்ஷ, இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் எமக்குள்ள நேர்மையை வெளியுலகிற்கு வெளிப்படுத்தி அவர்களைத் திருப்தியடையச் செய்யும் ஒரு விடயத்தில் நாம் தோல்வி கண்டுள்ளோம் எனக் குறிப்பிட்டுள்ளார்.

(11ஆம் பக்கம் பார்க்க)

## கஞ்சிகுடிசாறில் பொறிவெடியில் அதிரடியினர் மூவர் காயம்

கொழும்பு, ஓக. 14

அம்பாறை, கஞ்சிகுடிச்சாறு, வேப்பங்குள காட்டுப் பகுதியில் நேற்றுமுன்தினம் மாலை தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த வேளை, பொறிவெடிகளில் சிக்கிய மூன்று அதிரடிப்படையினர் படுகாயமடைந்தனர்.

அக்காட்டுப் பகுதியில் உள்ள விடுதலைப் புலிகளை அழிக்கும் நோக்கில்

(12 ஆம் பக்கம் பார்க்க)

**புலமைப்பரிசில் பரீட்சை விசேட மாதிரி வினாத்தாள்**

*மேல் மாகாண பிரபல ஆசிரியர்*

**திரு.கி.தவகுலரட்ணம்**

*தயாரித்தது*

உள்ளே I + II ஆம் பக்கங்களில்

## முழங்காவில், கல்விளான் பகுதிகளை மீட்டுள்ளதாகப் படைத்தரப்புச் சொல்கிறது

கொழும்பு, ஓக. 14

முல்லைத்தீவு மாவட்டத்தின் மேற்குப் பகுதியில் கல்விளான் கிராமத்தையும் கிளிநொச்சி மாவட்டத்தின் மேற்குக்கரையோரத்தில் முழங்காவில் பகுதியையும் நேற்றுப் பிற்பகல் படையினர் மீட்டனர் என்று இராணுவத்தரப்பு நேற்று மாலை அறிவித்தது.

கல்விளான் பகுதியில் கடந்த சில தினங்களாக இடம்பெற்ற சண்டையின் பின்னர் அந்தப் பகுதி படையினரின் கட்டுப்பாட்டில் வந்துள்ளது. அங்கு தொடர்ந்து மோதல் இடம்பெறுகின்றது என்றும் இராணுவத் தரப்பு மேலும் அறிவித்துள்ளது.

துணுக்காயில் உள்ள புலிகளின் தளத்துக்கு வடகிழக்கே 4 கிலோ மீற்றர் தொலை

(12 ஆம் பக்கம் பார்க்க)

## போரின் கொடுமை இது...

## பசி தாங்காது பழைய உணவை உட்கொண்ட இடம்பெயர்ந்த 4 சிறுவர்கள் மயக்க நிலையில்

கிளிநொச்சி, ஓக.14

இராணுவ மோதல்கள் காரணமாக மன்னார், தட்சனார் மடுவில் இருந்து பல இடங்களுக்கு இடம்பெயர்ந்து வந்து இப்போது புதுமுறிப்புப் பகுதியில் தங்கியிருக்கும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நான்கு சிறுவர்கள் பசிக் கொடுமையால் பழைய உணவை உட்கொண்ட பின்னர் மயக்க நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலை அதிதீவிர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தட்சனார்மடுவைச்சேர்ந்த புவனேந்திரன் என்பவரின் குடும்பம் பெரியமடு, வெள்ளாங்குளம், ஆணைவிழுந்தான் என்று இடம்பெயர்ந்து வசித்து

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சியில் திரவப்பணத்துக்கு அரச வங்கிகளில் தட்டுப்பாடு

கிளிநொச்சி, ஓக 14

வவுனியாவில் இருந்து திரவப்பணத்தை எடுத்துவர முடியாத நிலை தோன்றியுள்ளதால் கிளிநொச்சியில் பணத்துக்குப் பெரும் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

தனியார் ஒருவர் அரச வங்கியில் இருந்து 50ஆயிரம் ரூபாவுக்கு மேல் பெறமுடியாத நிலை தோன்றியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. கிளிநொச்சி செயலகத்தில் நேற்று நடந்த அத்தியாவசிய தேவைகள் குழுக் கூட்டத்தில் இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டது.

அரச அதிபர் நா.வேதநாயகன் தலைமையில் நடந்த பிரஸ்தாப கூட்டத்தில் கலந்து கொண்ட அரச வங்கிகளின் முகாமையாளர்கள் இந்த விடயத்தை எடுத்துக்கூறினர்.

ஆழ ஊடுருவும் படையினரின் தாக்குதல் காரணமாக தமது வங்கி அதிகாரிகள் வவுனியாவிலிருந்து திரவப்பணத்தை எடுத்து வரமறுக்கின்றனர் என்றும் அவர்கள் குறிப்பிட்டனர்.

திரவப்பணத்தை பாதுகாப்பாக எடுத்து வர முடியாததால் அதற்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகவும் வங்கி அதிகாரிகள் கூட்டத்தில் தெரிவித்தனர்.

கிளிநொச்சி அரச வங்கிகளில் இருந்து ஒருவர் 50ஆயிரம் ரூபாவுக்கு மேல் பெற்றுக் கொள்ள முடியாதவாறு கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளதாகவும் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. (அ-1)

## பஸ்கள் நேருக்குநேர் மோதியதில் பயணிகள் 5 பேர் பலி; 45 பேர் காயம்

கொழும்பு, ஓக. 14

அநுராதபுரத்தில் நேற்று பயணிகள் பஸ்கள் இரண்டு நேருக்கு நேர் மோதியதில் ஐந்து பயணிகள் அந்த இடத்திலேயே உயிரிழந்தனர். சுமார் 45 பயணிகள் காயமடைந்தனர்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## பூந்தோட்டம் அகதி முகாமில் நேற்றும் தீ! தற்காலிக வீடுகள் எண்பது எரிந்து நாசம்!!

வவுனியா, ஓக.14

வவுனியா, பூந்தோட்டம் பகுதியில் அமைந்துள்ள அகதி முகாமில் திடீரென இடம்பெற்ற தீவிபத்தில் 8 மண்டபங்களில் - 80 தற்காலிக குடிசைகள் எரிந்து நாசமாகின.

நேற்று முற்பகல் இடம்பெற்ற இத் தீ விபத்தில் அதிர்ஷ்டவசமாக எவருக்கும் காயம் ஏற்படவில்லை.

இந்தத் தீ விபத்தினால் சுமார் 500 பேர் வரை நிர்க்கதியாகினர். தீ பரவத் தொடங்கியதும் அதனை அணைக்க மக்கள் தீவிர

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கிளாலித் தாக்குதலில் 21 படையினர் பலியானதாக புலிகள் தரப்பு அறிவிப்பு

வவுனியா, ஓக.14

வடக்கின் முன்னரங்க நிலைகளில் ஒன்றான கிளாலிப் பகுதியில் உள்ள இராணுவ நிலைகளுக்குள் கடந்த ஞாயிற்றுக்கிழமை அதிகாலை வேளையில் விடுதலைப் புலிகளின் அணியினர் மேற்கொண்ட அதிரடித் தாக்குதலில் 21 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர் என்று அவர்கள் தரப்பில் நேற்று அறிவிக்கப்பட்டது.

இத்தாக்குதலை மேற்கொண்ட அணியினரில் இரு பெண் போராளிகள் வீரச்சாவடைந்தனர் என்றும் - மற்றைய போராளிகள் தளம் மீண்டனர் என்றும் -புலிகள் தரப்பில் மேலும் அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்த மோதலில் தமக்கு இழப்பு எதுவும் ஏற்படவில்லை என்று படைத்தரப்பினர் ஞாயிறு இரவு அறிவித்திருந்தது தெரிந்ததே. (அ-சி)

## மாகாண மட்ட விளையாட்டுப் போட்டியை 19 ஆம் திகதி முதல் வவுனியாவில் நடத்த ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஓக. 14

வடக்கு மாகாணத்துக்குட்பட்ட பாடசாலைகளுக்கு இடையிலான மாகாண மட்ட விளையாட்டுப் போட்டிகள் எதிர்வரும் 19 ஆம் திகதி வவுனியாவில் ஆரம்பமாக ஏற்பாடாகி உள்ளது.

பாதுகாப்புக் காரணங்களுக்காக இரு தடவைகள் பிற்போடப்பட்ட இந்தப் போட்டிகள் எதிர்வரும் 19 ஆம் திகதி தொடக்கம் 29 ஆம் திகதி வரை வவுனியாவில் இடம்பெறவுள்ளதாக மாகாணக் கல்வித் திணைக்களம் அறிவித்துள்ளது.

இந்தப்போட்டி தொடர்பான அறிவிப்பு

(12 ஆம் பக்கம் பார்க்க)

## குடாநாட்டில் சகல மின்மாற்றிகளுக்கும் 24 மணி நேரமும் படையினர் பாதுகாப்பு

யாழ்ப்பாணம், ஓக. 14

குடாநாட்டில் சகல பகுதிகளிலும் உள்ள மின்மாற்றிகளுக்கு இராணுவப் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

வடமராட்சி, தென்மராட்சி பகுதிகளில் சில மின்மாற்றிகள் மீது தெரியாதோரால் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. மற்றும் சில பகுதிகளில் மின்மாற்றிகள் சேதமாக்கப்பட்டிருந்தன.

அதனை அடுத்து மின்மாற்றிகளுக்கு இராணுவத்தினரின் பாதுகாப்புக்கு ப...

(12 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 16 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தெல்லிப்பழை துர்க்காபுரம்
சைவப்பிரகாச வித்தியாசாலை ஸ்தாபகரின் பேரனார்
பிரம்மஸ்ரீ தி.சுந்தரமூர்த்தி ஐயரின் 16 ஆவது நினைவு நாளாகிய இன்று (14.08.2008) புதன்கிழமை அவரை நினைவு கூருகின்றோம்.

**சு.அன்னபூரணேஸ்வரியும், பிள்ளைகளும்**
*காசி விநாயகர் ஆலயம், தெல்லிப்பழை.*

(சி/554144)

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர் செல்வி அப்புத்துரை சந்திரவதனாவின் பாசமிகு தந்தை
**அமரர் நாகர் அப்புத்துரை அவர்கள்**
15.07.2008 அன்று இறைவனடி சேர்ந்துள்ளார். அவரின் மறைவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**பாடசாலைச் சமூகம்**
**யா/ நெடுந்தீவு சைவப் பிரகாச வித்தியாலயம், நெடுந்தீவு.**

(சி/554143)

## 13 ஆம் ஆண்டு நினைவலைகள்



வையத்துள் அறிமுகம்:
19.10.1935

தெய்வத்தில் சங்கமம்:
08.08.1995

**அமரர் தம்பிராஜா கனகரட்ணராஜா**

திதி:14.08.2008

பாசத்தின் திருவுருவாய் பண்பின் உறைவிடமாய்
எங்களுக்கெல்லாம் அன்பு காட்டி
அரவணைத்த எம் அன்புத்தெய்வமே!
நீங்கள் எங்களை விட்டுப்பிரிந்து
பதின்மூன்று ஆண்டுகள் அல்ல எத்தனை
ஆண்டுகள் தான் சென்றாலும் உங்கள்
நினைவுகள் எங்கள் நெஞ்சங்களை
விட்டு என்றும் மாறாதையா!

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்
அன்பு மனைவி, மைத்துனர்கள், சகோதரிகள்,
மைத்துனிகள், மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

*சந்தையடி, மானிப்பாய்.*

(77193)

## அபிவிருத்தி அதிர்ஷ்டம்
### உத்தியோகபூர்வ முடிவுகள்

1010 நீலம்

வெற்றி இலக்கங்கள்

**31 33 42 49**

கன்னி

**12-08-2008**

செல்லுபடியாகும் தொடர் இல. 4016158 - 4032388

ஜக்பொட் பரிசு ரூபா.2,576,600/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 358,435 | 10/- | 3,584,350/- |
| 2 இலக்கங்கள் | 32,923 | 20/- | 658,460/- |
| 1 இல. + லக்கினம் | 32,593 | 30/- | 977,790/- |
| 2 இல. + லக்கினம் | 2,981 | 100/- | 298,100/- |
| 3 இலக்கங்கள் | 876 | 500/- | 438,000/- |
| 3 இல. + லக்கினம் | 82 | 5,000/- | 410,000/- |
| 4 இலக்கங்கள் | 5 | 100,000/- | 500,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 2,576,600/- | - |
| மொத்தம் | | | 6,866,700/- |
| வெற்றிபெறாத டிக்கட்டுகளுக்கான பரிசு | 5 | 100,000/- | 500,000/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 427,900 | | 7,366,700/- |

**இந்த வெள்ளிக்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 3,376,950/-**

தொடர் இல. 5894766 க்கு மேற்பட்ட சிவப்பு நிற டிக்கட்டுக்கள் 2008 ஆகஸ்ட் 15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சீட்டிழுப்புக்குச் செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் வெற்றி பெறாத டிக்கட்டுகளில் இருந்து ரூபா 100,000/- பரிசு பெறும் சீட்டுக்கள்

| | |
|---|---|
| களுத்துறை | 4029221-0-91 |
| மட்டக்களப்பு | 4029256-8-92 |
| பதுளை | 4021160-9-72 |
| மாத்தறை | 4018568-3-94 |
| பொலன்னறுவை | 4025149-1-[illegible] |

அபிவிருத்தி லொத்தர் சபை
33, சென்.மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03

## நல்லைக்குமரன் மலர் வெளியீடு நாளை

யாழ்ப்பாணம், ஓக.14

நல்லைக்குமரன் மலர் வெளியீட்டு விழா நாளை வெள்ளிக்கிழமை மு.ப. 10 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

சைவசமய விவகாரக் குழுவின் தலைவரும் மாநகர ஆணையாளருமான மு.செ. சரவணபவ தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் ஆசியுரையை நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள், பருத்தித்துறை சாரதா சேவாச்சிரம சுவாமி சித்ரூபானந்தா ஆகியோர் நிகழ்த்துவர்.

யாழ்.அரசஅதிபர் கே.கணேஷ், யாழ். மாநகரசபையின் முன்னாள் ஆணையாளர் சி.வி.கே.சிவஞானம், யாழ். பிராந்திய ஆணையாளர் திருமதி பத்மினி சிவலிங்கம் ஆகியோர் வாழ்த்துரை வழங்குவர்.

யாழ்.விருது பெறும் யாழ்.பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளரும் யாழ்.போதனா வைத்தியசாலை வருகைதரு பொது மருத்துவ நிபுணர்திருமதிஜெயதேவிகணேசமூர்த்திக்கு கௌரவிப்பும் இடம்பெறும்.

மலர் ஆசிரியர் ந.விஜயசுந்தரத்தின் வெளியீட்டுரையும் யாழ்.வைத்தீஸ்வரா முன்னாள் அதிபர் சி.சிவசரவணபவனின் (சிற்பி) ஆய்வுரையும் இடம் பெறும். (1)

## செயலமர்வு

யாழ்ப்பாணம், ஓக. 14

தென்மராட்சி கல்விவலயப் பாடசாலைகளின் தரம் 11 வகுப்புகளுக்குதமிழ் மொழியும் இலக்கியமும் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு நாளை மறுதினம் காலை 8 மணிக்கு சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் நடைபெறுமென வலயக்கல்விப்பணிப்பாளர் கு.பிரேமகாந்தன் தெரிவித்தார்.

**விற்பனைக்கு:** நல்ல நிலையில் உள்ள P-4 ரக கணனி உடன் விற்பனைக்குண்டு. (சகல உதிரிப்பாகங்களுடனும் கூடியது) தொடர்பு: இல. 17, சங்கரப்பிள்ளை வீதி, மானிப்பாய். தொ.பே: 0774210023.

### தேவை

உணவகத்திற்கு சமையலாளர், சப்ளையர், ரீமேக்கர் உடனடியாகத் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.
*லிங்கம் கபே, கண்டி வீதி, (தேசிய சேமிப்பு வங்கி முன்பாக) சாவகச்சேரி.*

**தவறிவிட்டது** மரியமைக்கல் கிருஸ்ணகுமார் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (861772535V) அராலிக்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து செட்டியார்மடம், அராலி வடக்கு, என்னும் விலாசத்துடன் அல்லது 0776848321, 0774058019 என்னும் தொலைபேசிகளுடன் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

**தவறிவிட்டது** பொன்னம்பலம் அருள்குமரன் என்பவரது ஆள் அடையாள அட்டை 840423891V என்னும் இலக்கமுடையது. 09.08.08 சனிக்கிழமை சாவகச்சேரிக்கும் மட்டுவிலுக்கும் இடையில் தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி என்னும் முகவரியில் தந்துதவ்வும். சன்மானம் வழங்கப்படும். (தபாலில் என்றாலும் அனுப்பி வைக்கவும்)

### விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள NPGH XXXX இலக்கம் Dark Green Colour உடைய L.M.L select II ஸ்கூட்டர் விற்பனைக் குண்டு. விலை நேரில் பேசித் தீர்மானிக்கலாம்.
தொடர்பு:2264234

**ராஜா 2** யாழ்ப்பாணம்



60 ஆவது நாளை நோக்கி
20 வரை சகல
வகுப்புகளுக்கும் அரைக் கட்டணம்
கமல்ஹாசன், அசின்
**தசாவதாரம்**
காட்சிகள் 10.30–2.00

### கோழிக்குஞ்சு விநியோகம்

Prima சிவப்பு, வெள்ளை பேட்டுக் குஞ்சுகள், BAHIRA புறொயிலர் குஞ்சுகள் 18.08.2008 திங்கட்கிழமை விநியோகிக்கப்படும்.
பதிவுகளை மேற்கொள்ளவும்.

- ராஜீவ் - நவாலி வீதி, ஆனைக்கோட்டை.
- மதுரா - ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
- திருமகள் களஞ்சியம் - சிவலிங்கப்புளியடி.
- [illegible] - சாவகச்சேரி.
- [illegible] - கல்வியங்காடு.

(77209)

## வாழ்த்துகின்றோம் வாழ்த்துகின்றோம்



முப்பது ஆண்டுகள் எமது
கல்லூரியின் தனித்துவமிக்க
மெய்யியல் பேராசான்

**வே.யுகபாலசிங்கம்**
B.A (Hons), M.A. (Phi)
PG.D.Ed.

அவர்கள் 60 ஆவது
அகவைகாணும் இந்நாளில் அவரை சிறப்புடன்
நீடூழி காலம் வளமுடன் வாழ வாழ்த்துகின்றோம்.

**இயக்குநர், விரிவுரையாளர்கள்,**
**பட்டப்படிப்புகள் கல்லூரி,**
57/18, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

## ஆராதனை அறிவித்தல்

*வண.பேதுருப்பிள்ளை இக்னேஷியஸ் டேவிற்*

**"கர்த்தருடைய பரிசுத்த வான்களின் மரணம் அவருடைய பார்வைக்கு அருமையானது**
**(சங்: 116:15)**



இலங்கை அப்போஸ்தல திருச்சபையில் மேய்ப்பராக ஊழியம் செய்த வண.பேதுருப்பிள்ளை இக்னேஷியஸ் டேவிற் நேற்று (13.08. 2008 ) புதன்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்துவிட்டார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (14.08.2008) வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு மானிப்பாய் வீதி, உடுவிலில் அமைந்துள்ள அப்போஸ்தல திருச்சபையில் நடைபெறும். இந்த அறிவித்தலை சகல சபையின் போதகர்கள், விசுவாசிகள், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*தொடர்புகளுக்கு:*
*021 222 5527*
*0773123835* (77219)

*தகவல்:*
யாழ்.அப்போஸ்தல திருச்சபைகள்.

## மரண அறிவித்தல்கள்

### *பேதுருப்பிள்ளை இக்னேசியஸ் டேவிற்*



செருக்கன் சந்தி, நாரந்தனையைப் பிறப்பிடமாகவும் தற்போது இல.61, குருசோ வீதி, சுண்டுக்குளியை வசிப்பிடமாகவும் கொண்ட பாஸ்ரர் (அப்போஸ்தல சபை) பேதுருப்பிள்ளை இக்னேசியஸ் டேவிற் நேற்று (13.08.2008) புதன்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பேதுருப்பிள்ளை-பிரான்சிஸ்கா தம்பதியரின் அன்பு மகனும் திருமதி டேவிற் ரூத்தின் அன்புக் கணவரும், ஜெறோம் (மரியதாஸ்), யோண்வெஸ்கி (சுவிற்ஸர்லாந்து) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (14.08.2008) வியாழக்கிழமை காலை 7 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டு மானிப்பாய் வீதி, உடுவிலில் அமைந்துள்ள அப்போஸ்தரிக்க சபையில் விசுவாசிகள் ஜெபம் இடம் பெற்ற பின்னர் உடுவில் அப்போஸ்தல சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*இல. 61, குருசோ வீதி,*
*சுண்டுக்குளி.*
*தொ.பே. 0776406910* (77223)

*தகவல்:*
திருமதி ரூத் டேவிற் (மனைவி)
மற்றும் சகோதரர்கள்.

### *மகாலிங்கம் மகாராஜா* (அப்பன்)

[ பழைய மாணவன், கீரிமலை நகுலேஸ்வரா மகாவித்தியாலயம் ]



கீரிமலையைப் பிறப்பிடமாகவும் வத்தளை, மாபொலவை வதிவிடமாகவும் கொண்ட மகாலிங்கம் மகாராஜா (12.08.2008) செவ்வாய்க்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் மகாலிங்கம்- தருமபூபதி தம்பதியினரின் அன்பு மகனும் சிவஞானசுந்தரம் (அப்புலிங்கம்- உரிமையாளர், பட்டப்பிளை மெற்றல் அலுமினியம் இண்டஸ்ரீட், மாபொல, அக்ஷரா றேடிங் சென்ரர், கொழும்பு, கிரித்திகா என்டப்பிறைஸ், யாழ்ப்பாணம்), விஜயகுமார்(சுவிஸ்), விஜயலட்சுமி(ஜேர்மனி), பிரபாகரன் (லண்டன்), ஜெகதீஸ்வரி, சந்திரகலா ஆகியோரின் அன்புச் சகோதரனும், சங்கீதா(சுவிஸ்), குணபாலசிங்கம்(ஜேர்மனி), தேவிகா, முருகையா, தவபாலசிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனரும், சுவிற்ஸர்லாந்தைச் சேர்ந்த பிரவீனா, பிரசன்னா, பிருந்தா, பிரியன், மற்றும் தஷாங்கன், கிருத்திகா ஆகியோரின் சிறிய தகப்பனும், ஜேர்மனியைச் சேர்ந்த பிரவீன், பிரதீபன், ஜீவதன் மற்றும் லோகனா, சர்மிலா ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
மு.ஜெகதீஸ்வரி(சகோதரி),
இலங்கை வங்கி வீதி,
சுன்னாகம் தெற்கு,
சுன்னாகம்.

(77220)

தகவல்:
அப்புலிங்கம்(சகோதரன்),
52/3, ஆனியகந்த வீதி,
நாகொடை, கந்தானை.
T.P: 077 4542223
T.P: 0112230940

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூறு கோடி இந்தியர்களின் கனவை நிஜமாக்கிப் பெருமை சேர்த்த வீரன்



புதுடில்லி, ஓக. 14

பத்து மீற்றர் துப்பாக்கி சுடுதல் போட்டியில் தங்கம் வென்று பெருமை சேர்த்த இந்திய வீரர் அபிநவ் பிந்த்ராவுக்கு இந்திய அரசியல் தலைவர்கள் உட்படப் பல்வேறு தரப்பினரும் வாழ்த்துகளைத் தெரிவித்திருக்கின்றனர்.

''நீங்கள் தங்கம் வென்றதன் மூலம் 100 கோடி இந்தியர்களின் கனவு நனவாகியுள்ளது. இதற்காகப் பெருமையும், மகிழ்ச்சியும் அடைகிறேன்'' - என்று ஜனாதிபதி பிரதிபா பாட்டில் தெரிவித்தார்.

## தங்கம் வென்ற பிந்ராவுக்குத் தலைவர்கள் வாழ்த்து

''உங்க ஷெளுக்கு நாடே வாழ்த் துத் தெரிவிக்கிறது. அதில் நானும் பங்கேற்கிறேன். இந்த அபார சாதனை மூலம் தேசத்தைப் பெருமிதம் கொள்ளச் செய்துள்ளீர்கள். உலக அரங்கில் மேலும் பல சாதனைகள் படைக்க இந்த வெற்றி உங்களுக் கும் மற்ற வீரர்களுக்கும் உத்வேகம் கொடுக்கும் என நம்புகிறேன்'' - என்று வாழ்த்தினார் பிரதமர் மன்மோகன்சிங்.

''உங்களுடைய வெற்றி வளரும் இளம் விளையாட்டு வீரர்களுக்கு ஊக்கத்தையும், நம்பிக்கையையும் அளிக்கும் என்று நம்புகிறேன். மனமார்ந்த வாழ்த்துக்கள்'' என்று தெரிவித்துள்ளார் தமிழக ஆளுநர் சுர்ஜித்சிங் பர்ணாலா.


பிந்தராவின் பெற்றோர்

ஒலிம்பிக்கில் துப்பாக்கி சுடும் போட்டியில் நீங்கள் தங்கப்பதக்கம் பெற்று நாட்டுக்குப் பெருமை சேர்த்துள்ளீர்கள். உங்களின் தனித்திறமையால் சிறப்பாகச் செயற்பட்டு தனிநபர் பிரிவில் முதன்முதலாகத் தங்கப் பதக்கத்தைப் பெற்றுத் தந்துள்ளீர்கள். இன்றைய வெற்றி என்றும் தொடரட்டும் என்று தனது வாழ்த்துச் செய்தியில், தெரிவித்தார் ஜெயலலிதா.

இந்தியஒலிம் பிக் சங்கத் தலைவர் சுரேஷ் கல்மாதி. பெய்ஜிங்கிலிருந்தவாறு தெரிவித்துள்ள வாழ்த்துச் செய்தியில் பிந்ராவின் சிறப்பு, ஒவ்வொரு இந்தியரையும் பெருமையடையச் செய்துள்ளது. ஒலிம்பிக்கில் பங்கேற்றுள்ள இந்தியக் குழுவினருக்கு பிந்ராவின் வெற்றி, மேலும் உத்வேகத்தை ஏற்படுத்துவது நிச்சயம் எனக் குறிப்பிட்டுள்ளார்.

## வாழ்நாள் முழுவதும் இலவச ரயில் பயணம்!

புதுடில்லி, ஓக. 14

'அபிநவ் பிந்த்ரா ரயில்களில் இனி இலவசமாகப் பயணம் மேற்கொள்ளலாம்' என இந்திய மத்திய ரயில்வே அமைச்சர் லாலு பிரசாத் யாதவ் அறிவித்துள்ளார்.

''பிந்த்ராவுக்கு எனது வாழ்த்துக்கள். அவரது சாதனைக்குப் பரிசாக, அவர் வாழ்நாள் முழுவதும் சதாப்தி மற்றும் ராஜதானி உட்பட அனைத்து ரயில்களிலும் முதல் வகுப்பு குளிரூட்டப்பட்ட பெட்டியில் - தன்னுடன் துணையாக வருபவர்களுடன் - இலவசமாகப் பயணம் செய்யலாம்'' என லாலு பிரசாத் தெரிவித்துள்ளார்.

# சாதனை படைத்தும் தங்கம் இல்லை



நீச்சல் போட்டியின் அரை இறுதியில் சாதனை படைத்த சிம்பாப்வே வீராங்கனையால் இறுதிப் போட்டியில் வெள்ளியே வெல்ல முடிந்தது.

ஒலிம்பிக்கில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற 100 மீ. பேக்ஸ்ட்ரோக் நீச்சல் போட்டி அரை இறுதியில் 58.77 விநாடிகளில் இலக்கைக் கடந்து புதிய உலக சாதனை படைத்தார். சிம்பாப்வே வீராங்கனை கிறிஸ்டி கவென்ட்ரி.

இப்பிரிவின் இறுதிப் போட்டி கடந்த செவ்வாய்க் கிழமை நடைபெற்றது. இதில் நடப்புச் சாம்பியனான அமெரிக்க வீராங்கனை நடாலி கொலினுக்கும், சிம்பாப்வே வீராங்கனை கிறிஸ்டி கவென்ட்ரிக்கும் இடையே கடும் போட்டி நிலவியது.

இதில் அமெரிக்க வீராங்களை கொலின் 58.96 விநாடிகளில் இலக்கைக் கடந்து வென்றார். இப்பிரிவில் அடுத்தடுத்த ஒலிம்பிக் போட்டிகளில் தங்கம் வென்ற முதல் வீராங்கனை என்ற பெருமையை இதன் மூலம் கொலின் பெற்றார்.

அரை இறுதியில் உலக சாதனை படைத்திருந்தும், இறுதிச் சுற்றில் 59.19 விநாடிகளில் இலக்கைக் கடந்ததால், கவென்ட்ரி வெள்ளிப் பதக்கத்துடன் திருப்தி அடைய வேண்டியதாயிற்று. இப்போட்டியில் அமெரிக்காவின் மார்கரெட் ஹேல்செர் (59.34 விநாடிகள்) வெண்கலம் வென்றார். இவ்வளவு வலுவான போட்டிக்கிடையே தங்கம் வென்றது பெருமையாக உள்ளது. அதனால்தான் பதக்க மேடையில் குழந்தை போல் அழுதேன் என்றார் கொலின்.

இது ஒலிம்பிக்கில் கொலின் வெல்லும் 3-வது தங்கம் என்பது குறிப்பிடத்தக்கது. (50)

# சேனாநாயக்க வெளியேற்றம்



ஒலிம்பிக் போட்டியில் இலங்கை சார்பாக கலந்து கொண்ட துப்பாக்கி சுடுதல் வீரர் ஈ. எம்.சேனாநாயக்க ஆண்களுக்கான 50 மீற்றர் பிஸ்டோல், தகுதி சுற்று போட்டியுடனேயே வெளியேறினார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற தகுதி போட்டியில் ஈ. எம்.சேனாநாயக்க, பங்கு பற்றிய 45 வீரர்களுள் 36 ஆவது இடத்தைப் பிடித்து தோல்வியை சந்தித்தார். இதில் அவர் மொத்தமாக 545புள்ளிகளை பெற்றார். ஏற்கனவே அவர் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற 10 மீற்றர் ஏர் பிஸ்டோல் போட்டியில் தகுதி சுற்றுடன் வெளியேறியமை குறிப்பிடத்தக்கது.

இதில் நேற்று முன்தினம் நடந்த 50 மீற்றர் பிஸ்டல் துப்பாக்கி சுடுதல் இறுதிப் போட்டியில் தென்கொரியாவின் ஜின் ஜொன்ங் ஹோ வெற்றி பெற்று தங்கப் பதக்கத்தை சுவீகரித்துக் கொண்டார். இதன்போது அவர் மொத்தமாக 660.4 புள்ளிகளைப் பெற்றுக்கொண்டார்.

அத்துடன் வட கொரியாவின் கிம் ஜொங் சூ 660.2 புள்ளிகளுடன் வெள்ளிப் பதக்கத்தை வென்றதோடு, சீனாவின் டான்ங் சொங்லியான் 659.5 புள்ளிகளுடன் வெண்கலப் பதக்கத்தைக் கைப்பற்றினார். (50)

## ஒலிம்பிக் பதக்கப் பட்டியல்

(நேற்றுப் பிற்பகல் வரையானது)

| நிலை | நாடு | தங்கம் | வெள்ளி | வெண்கலம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 1 | சீனா | 14 | 3 | 5 | 22 |
| 2 | அமெரிக்கா | 10 | 8 | 9 | 27 |
| 3 | வட கொரியா | 5 | 6 | 1 | 12 |
| 4 | இத்தாலி | 4 | 4 | 2 | 10 |
| 5 | ஆஸ்திரேலியா | 4 | 2 | 6 | 12 |
| 6 | ஜேர்மனி | 4 | 1 | 1 | 6 |
| 7 | ஜப்பான் | 3 | 1 | 3 | 7 |
| 8 | ரஷ்யா | 2 | 5 | 3 | 10 |
| 9 | பிரிட்டன் | 2 | 2 | 3 | 7 |
| 10 | செக் | 2 | 0 | 0 | 2 |
| 11 | தென் கொரியா | 1 | 2 | 4 | 7 |
| 12 | அஜர்பைஜன் | 1 | 2 | 0 | 3 |
| 13 | நெதர்லாந்து | 1 | 1 | 2 | 4 |
| 14 | சுலோவாக்கியா | 1 | 1 | 0 | 2 |
| 15 | ருமேனியா | 1 | 0 | 2 | 3 |
| 16 | ஸ்பெயின் | 1 | 0 | 1 | 2 |
| 16 | பின்லாந்து | 1 | 0 | 1 | 2 |
| 18 | இந்தியா | 1 | 0 | 0 | 1 |
| 18 | தாய்லாந்து | 1 | 0 | 0 | 1 |

# டைசன் கேவின் இலக்கு 9.6 விநாடிகள்

அமெரிக்க தடகள வீரர் டைசன் கே 100 மீற்றர் போட்டிகளில் த்ங்கப்பதக்கத்தை வெல்வதற்காக 9.6 விநாடிகளை இலக்காக நிர்ணயித்துக்கொண்டுள்ளார். ஒலிம்பிக் போட்டியில் நூற்றுக்கணக்கான தங்கப்பதக்கங்கள் வழங்கப்பட்டாலும் மரதன் மற்றும் 100 மீற்றர் போட்டிகளில் வழங்கப்படும் தங்கம் விசேடமாக கருதப்படுகிறது. 100 மீற்றர் போட்டிகளில் தங்கம் வெல்லும் வீரருக்கு உலகின் அதிவேக வீரர் எனும் பட்டமும் சூட்டப்படுகிறது.



பொதுவாக ஒலிம்பிக் போட்டிகளில் இந்த போட்டியில் வெல்வோர் யார் எனும்எதிர்பார்ப்பு பெரிதாக இருக்கும். இந்தமுறை அமெரிக்காவின் டைசன் கே 100 மீற்றர் போட்டியில் தங்கம் வெல்ல பிரகாசமான வாய்ப்பு இருப்பதாகக் கருதப்படுகிறது.

எனினும் இந்தச் சாதனையை நிகழ்த்த அவர், ஜமாய்க்கா வீரர்களான உசைன் போல்ட் மற்றும் அசாபாபவல் ஆகியோரை வீழ்த்தியாக வேண்டும். தற்போது 100 மீற்றர் போடடிகளில் போல்ட் உலக சாதனை படைத்துள்ளார்.

இந்நிலையில் இருவரையும் வீழ்த்த டைசன் கே 9.6 விநாடிகளில் 100 மீற்றர் ஓட்டத்தை கடக்கவேண்டும் என்று இலக்கு நிர்ணயித்துக் கொண்டுள்ளார். இந்த இலக்கை மனதில் கொண்டே பயிற்சி பெற்றிருப்பதாக அவர் கூறியுள்ளார். (50)

# ஒலிம்பிக் நினைவுகள் 14

27ஆவது ஒலிம்பிக் (2000)

27ஆவது ஒலிம்பிக் போட்டி ஆஸ்திரேலியாவில் சிட்னி நகரில் செப்டெம்பர் 15 முதல் ஒக்டோபர் முதலாம் திகதிவரை நடைபெற்றது.

* 199 நாடுகளில் இருந்து 6,585 ஆண்களும் 4,069 பெண்களும் (மொத்தம் 10,651 பேர்) பங்கேற்றனர். 28 விளையாட்டுக்களில் 300 பிரிவுகளில் போட்டிகள் நடத்தப்பட்டன.

* இப்போட்டியை நடத்த சிட்னியுடன் பீஜிங் (சீனா), பெர்லின் (ஜேர்மனி) இஸ்தான்புல் (துருக்கி), மான்செஸ்டர் (இங்கிலாந்து) ஆகியனவும் போட்டியிட்டன. கடுமையான போட்டிக்கு இடையில் 4 சுற்று வாக்கெடுப்புக்குப் பின்னர், போட்டியை நடத்தும் வாய்ப்பை சிட்னி பெற்றது.

* தொடக்க நிகழ்ச்சி செப்டெம்பர் 15 இல் நடைபெற்றாலும், கால்பந்து போட்டிகள் செப்டெம்பர் 13ஆம் திகதியே தொடங்கின.

செப்டெம்பர் 15 இல் நடைபெற்ற கண்கவர் தொடக்க நிகழ்ச்சியில் 200 பூர்வ குடியினப் பெண்களின் நடனம் பார்வையாளர்களை வெகுவாகக் கவர்ந்தது.

ஆஸ்திரேலியாவின் 17 வயது வீரர் இயான் தோர்ப் 400 மீற்றர் பிரீ ஸ்டைல் போட்டியில் உலக சாதனை படைத்ததுடன் 100 மீற்றர் பிரீ ஸ்டைல் தொடர் நீச்சலிலும் உலக சாதனைபடைத்து அசத்தினார்.

* ஜிம்னாஸ்டிக் குழு போட்டியில் இதற்கு முந்தைய 2 ஒலிம்பிக்போட்டிகளில் வெள்ளியையே வென்ற சீனா ஆண்கள் இம்முறை தங்கம் வென்றனர். உக்ரைன் வெள்ளியும், ரஷ்யா வெண்கலமும் வென்றன.

* படகுப் போட்டியில் இங்கிலாந்தின் ஸ்டீவ் ரெட்கிரேவ் தங்கம் வென்றார். தொடர்ந்து 5 ஒலிம்பிக் போட்டிகளில் தங்கம் வென்றவர்கள் பட்டியலில் ரெட்கிரேவ் இடம்பிடித்தார்.

* ஆடவர் கால்பந்துப் போட்டியில் ஸ்பெயினை வீழ்த்தி ஆபிரிக்க நாடான கேமரூன் தங்கம் வென்று வரலாறு படைத்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்களக் கடும் போக்காளரின் தாளத்துக்கு ஆடுவதை அரசு உடனே நிறுத்த வேண்டும்

## நாடாளுமன்றில் சந்திரகாந்தன் எம். பி. வலியுறுத்து

கொழும்பு,ஓக.14

தமிழ் மக்களை அழித்தொழிப்பதற்காகவே தமிழர் தேசம் மீது யுத்தத்தை அரசு முன்னெடுத்துச் செல்கின்றது. யுத்தத்திற்காக பெருமளவு நிதியை ஒதுக்கி இனவாத, மதவாத அரசியலைப் பலப்படுத்தி நாட்டை படுகுழிக்குள் தள்ளும் செயற்பாட்டையே அரசு செய்து வருகின்றது. ஈழத்தமிழர்களின் இனப்பிரச்சினையை மையமாக வைத்து சிங்கள ஆளும் தரப்புகள் சிங்கள பேரினவாதிகளையும் கடும் போக்காளர்களையும் திருப்திப்படுத்த முனைகின்றன.

- இவ்வாறு அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகாந்தன் தெரிவித்தார்.

கடந்த வாரம் நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற அவசரக்கால சட்ட நீடிப்பு மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

யுத்தத்தையும், உலகசந்தையின் போக்கையும் காரணம் காட்டி ஏழை மக்களை அரசு ஏமாற்றி வருகின்றது. முதலாளித்துவ வர்க்கத்தினர் இலாபங்களை பெற்று வரும் நிலையில் ஏழை மக்கள் தமது வயிற்றை இறுக்கிக் கட்டியவாறு பசி பட்டினியுடன் அரைகுறை வாழ்க்கை வாழ்ந்து வருகின்றனர்.

அரசின் செயற்பாடுகளால் இந்த நாடு சமூக, பொருளாதார, அரசியல் ரீதியில் சிதைந்து சீர்கெட்டுப் போன நாடாக மாறி வருகின்றது. இந்நாட் டில் எதிர்வரும் காலங்களில் எமது மக்கள் பொருளாதார சுமைகளாலும் யுத்தத்தின் கொடூரங்களாலும் கடுமையான வேதனைகளை அனுபவிக்கப் போகின்றனர் என்பது திண்ணம்.

இந்த அரசு இராணுவ நிகழ்ச்சி நிரலை பிர தான அங்கமாக வழிப்படுத்தியுள்ளது. கடந்த இரு வருட காலத்தில் முன்னொரு போதும் இல்லாத அளவிற்கு வாழ்க்கைச் செலவானது எவ்வித கட்டுப்பாடுமின்றி அதிகரித்துச் செல்கிறது. வடக்கு- கிழக்கில் லட்சக்கணக்கான குடும்பங்கள் போஷாக்கின்மையால் வாடி வதங்குகின்றன.

எனவே நாட்டை மீளக் கட்டியெழுப்ப அரசியல்வாதிகளும் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளும் முன்வர வேண்டும். சிங்கள கடும் போக்காளர்களின் பிற்போக்குத்தனமான நிகழ்ச்சி நிரலை நிராகரித்து தமிழ் பேசும் மக்களுக்கு போதிய அதிகாரத்தை பகிர்ந்தளித்து அபிவிருத்தியில் பங்குதாரர்களாக்குவதே சுபீட்சத்துக்கான ஒரே வழி என்பதை சகல அரசியல்வாதிகளும் புரிந்து கொள்ள வேண்டும்.

வடக்கு - கிழக்கில் விவசாய, வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்த பலர் தமது தொழில்களை கைவிட்டு வீடுகளில் முடக்கப்பட்டுள்ளனர்.இதனால் விவசாயத்தில் ஈடுபடுவதற்கு ஏற்ற சூழலோ, பொருளாதார வசதிகளோ இல்லாதிருக்கின்றது. போதுமான வருமானம் இன்மையாலும் அதிகரித்துச் செல்லும் செவினங்கள் காரணமாகவும் இவர்கள் மிகவும் மோசமாக பாதிக்கப்பட்டுள்ளனர். வேலை வாய்ப்பின்றியும், வருமானம் ஈட்டும் மார்க்கங்களின்றியும் மக்கள் பெரும் கஷ்டங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

**தேர்தலுக்குப் பின்னர் கிழக்கில் சாணுக்கொரு சோதனைச் சாவடி**

கிழக்கில் மாகாணசபை தேர்தலுக்கு பின்னர் சோதனைச் சாவடிகள் சாணுக்கொன்று முழத்திற்கொன்றாக அதிகரிக்கப் பட்டிருக்கின்றன. உதாரணமாக மட்டக்களப்பு நகரில் இருந்து அக்கரைப்பற்று வரை செல்லும் நெடுஞ்சா லையில்15 இற்கும் மேற்பட்ட சோதனைச் சாவடிகள் அமைக் கப்பட்டுள்ளன. இவ்வீதி சோதனைச் சாவடி களால் கிழக்கு மக்கள் படும் வேதனைகள் கொஞ்ச நஞ்சமில்லை.

சில சோதனைச் சாவடிகளில் தமிழர்கள் தனிமைப்படுத்தப்பட்டு தனியாகப் பதிவு செய்யப்படுகிறார்கள். சில பஸ்கள் வழிமறிக்கப்பட்டு,படையினரால் சோதனையிடப்படும்பொழுது தமிழர்கள் இருக்கின்றார்களா எனக் கேள்வி எழுப்பப்படுகிறது. அவை அப்பட்டமான மனித உரிமை மீறல்கள் மாத்திரமல்ல, தமிழர்களை அவமானப் படுத்தும் கேவலமான செயலா கவே கருத வேண்டியுள்ளது.

வடக்கு - கிழக்கில் ஜனநாயகம் செத்துப் போய் பல ஆண்டுகள் ஆகிவிட்டன. இந்த விடயங்களை வெளிக்கொண்டு வரும் ஊடகவியலாளர்களை இனந்தெரியாத ஆயுதக்குழுவினர் தொடர்ந்தும் அச்சுறுத்தி வருகின்றனர். இதனால் ஊடகச் சுதந்திரம் முற்றாக பாதிக்கப்பட்ட நிலை காணப்படுகின்றது.

எனவே நாட்டின் அரசியல், பொருளாதார, சமூக மட்டங்களில் தோன்றியுள்ள பிரச்சினைகளுக்கு நியாயமானதும் காத்திரமானதுமான தீர்வுகளை விரைவாக ஏற்படுத்தி, சிங்கள அரசின் மீது தமிழ் மக்கள் கொண்டுள்ள வெறுப்பையும் ஆத்திரத்தையும் இல்லாமல் செய்வதற்கு ஆக்க பூர்வமான நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டுமென கேட்டுக் கொள்கின் றேன்.- என்றார். (சி)

### வலிகாமம் வலயத்தில் பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களை நியமிக்க நடவடிக்கை

வலிகாமம் கல்வி வலய பாடசாலைகளில் நிலவும் ஆங்கில ஆசிரியர்களது வெற்றிடங்களை நிரப்புவதற்கு ஒப்பந்த அடிப்படையிலான பகுதிநேர ஆங்கில அசிரியர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

விண்ணப்பிப்போர் அடிப்படைத் கல்வித் தகைமையாகஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சையில் ஆங்கிலத்தில் அதிவிசேட சித்தி பெற்றிருப்பதுடன் ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையிலும் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். மேலதிகமாக எழுத்துப்பரீட்சையொன்றிலும் தேற்றுதல்வேண்டும்.

தகுதியுடையோர் எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்னதாக இதற்கான விண்ணப்பத்தினை சுயமாகத் தயாரித்து வலயக் கல்விப் பணிப்பாளர், வலயக் கல்வி அலுவலகம், சுன்னாகம் என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கும் படி வலயக் கல்வி[illegible] கேட்டுள்ளார்.(203)

---

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



| தோற்றம் | மறைவு |
| --- | --- |
| 09 | 15 |
| 01 | 07 |
| 1931 | 2008 |

### திருமதி நாகரத்தினம் நடராசா

கடந்த 15.07.2008 செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்த எங்கள் குடும்ப ஒளி விளக்கு அமரர் திருமதி நாகரத்தினம் நடராசா அவர்களின் 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய நிகழ்வும் இன்று 14.08.2008 வியாழக்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளன. அத்தருணம் நிகழும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.


இல.9/1,இலந்தைக்குளம் வீதி,
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம். [77208]

குடும்பத்தினர்.

---

## மரண அறிவித்தல்

### வேலுப்பிள்ளை தம்பையா



வாதரவத்தையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை தம்பையா 12.08.2008 செவ்வாய்க்கிழமை இறைபதமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை (பூசாரியார்) - அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான அம்பலம் - முத்துப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் சிவக்கொழுந்துவின் அன்புக் கணவரும் யோகராணி, சந்திரமூர்த்தி (எழுதுவினைஞர், மருத்துவ பீடம், யாழ்.பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் இராசரத்தினம், துஷானி ஆகியோரின் அன்பு மாமனும் யதசாமினி, தயாளினி, பர்மினி, யதுர்சன் ஆகியோரின் அன்புப் பேரனும் பொன்னம்மா, காலஞ்சென்றவர்களான பாக்கியம், மகாலிங்கம், சின்னத்துரை (கிராமசேவை நிர்வாக உத்தியோகத்தர் - பிரதேச செயலகம், கோப்பாய், உடுவில்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்றவர்களான இராசம்மா சின்னத்தம்பி (ஆசிரியர்) மற்றும் சிவயோகம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.08.2008) வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு வாதரவத்தையிலுள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வாதரவத்தை, புத்தூர். (77214) ஆ.சந்திரமூர்த்தி (மகன்).

---

## மரண அறிவித்தல்கள்

### சின்னத்தம்பி சிதம்பரநாதன்

[ஓய்வுபெற்ற நில அளவையாளர் - மகாவலி அதிகாரசபை]



கரவெட்டி கிழக்கைப் பிறப்பிடமாகவும் வீரபத்திரர்கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி சிதம்பரநாதன் (12.08.2008) செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் அமரர்களான சின்னத்தம்பி - சின்னப்பிள்ளையின் அன்பு மகனும் புனிதவதியின் அன்புக் கணவரும் சொர்ணா (ஆசிரியர் - திருகோணமலை), இந்துமதி (U.K), யோகராஜ் (கொழும்பு), ஜெயநாதன் (T.O - Trinco NGO), ஜெயானந்தன் (Instructor - யாழ்.பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் மோகன் (I.P.W.திருகோணமலை), நம்பி (பொறியியலாளர் U.K), தபோதினி (U.K) ஆகியோரின் அன்பு மாமனும் திவ்வியா, பிரியங்கா, லக்ஸனா, லாவன்யா ஆகியோரின் அன்புப் பேரனும் சிவபாக்கியம், பரமேஸ்வரி, பார்வதிதேவி (அமரர்), யோகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (14.08.2008) வியாழக்கிழமை முற்பகல் 9 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக சோனப்பு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

வீரபத்திரர் கோயிலடி,
கரவெட்டி மத்தி. [சி/554140]

தகவல்:
குடும்பத்தினர்.

---

### நாகலிங்கம் நாகேந்திரம்

(Retired forest officer)



வட்டுக்கோட்டையை பிறப்பிடமாகவும், முருகன் கோயில் வீதி, காரைதீவு - 03 மட்டக்களப்பை வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் நாகேந்திரம் (12.08.2008) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஞானாம்பிகையின் பாசமிகு கணவரும் சந்திரகாந்தா, கமலாதேவி, விமலாதேவி, திருமதி செல்வராணி பாக்கியநாதன் (நூலகர் - பொது நூலகம் சங்கானை), சந்திரவதனி, சகுந்தலா(E.C.G.Technician), ராகினி (கணித ஆசிரியை), நாகபாலன் (கண்ணன், Water Supply, Trinco) ஆகியோரின் பாசமிகு தந்தையும் முத்துவேலு சண்முகநாதன் (தவம் J.P., முன்னாள் உடையார்) அவர்களின் மைத்துனரும் திரு.துரையப்பா பாக்கியநாதன் (சட்டத்தரணி) அவர்களின் அன்பு மாமனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (14.08.2008) வியாழக்கிழமை பி.ப.4 மணியளவில் அவரது மட்டக்களப்பு இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தீகவல்:
திருமதி பாக்கியநாதன் (மகள்)
நூலகர் - பொது நூலகம்
சங்கானை.

மூளாய் வீதி,
வட்டுக்கோட்டை. [77213]

---



### திருமதி சரோஜினி அமிர்தசிங்கம்

காரைநகர், விளானை களபூமியைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட சரோஜினி அமிர்தசிங்கம் 12.08.2008 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம் (புரொக்டர்) - இலட்சுமிப்பிள்ளை தம்பதியரின் புதல்வியும் காலஞ்சென்ற கந்தையா - தங்கமுத்து தம்பதியரின் மருமகளும் அமிர்தசிங்கத்தின் அன்பு மனைவியும் சுப்பிரமணியம் அன்னம்மா, அம்பலவாணர், ராஜரட்ணம் மனோன்மணி ஆகியோரின் அன்புச் சகோதரியும் மாலினி, குகதாசன், ரவிதாசன், திருரேஜினி ஆகியோரின் அன்புத் தாயும் பிரபாகரன், வத் சலா, ரோகினி, ராஜேஷ்கண்ணன் ஆகியோரின் அருமை மாமியும் பிரசாந்தி, சிவகாமி, பிரணவி, பிரணவன், சக்தி ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.08.2008) வியாழக்கிழமை மு.ப. 9 மணியளவில் அவரது இல்லத் தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கனத்தை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
அமிர்தசிங்கம் (கணவர்),
17/3, யோசப் லேன், பம்பலப்பிட்டி,
0771511813

(சி/554141)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாவகச்சேரி வைத்தியசாலைக்கு புதிய வைத்திய அதிகாரி

யாழ்ப்பாணம்,ஒக.14

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் புதிதாக வைத்திய அதிகாரி ஒருவர் கடமை களைப் பொறுப்பேற்றுள்ளார்.

யாழ்.போதனா வைத்தியசாலையில் கடமையாற்றிய வைத்தியக் கலாநிதி இ. பரமேஸ்வரன் கடந்த வாரம் தொடக்கம் இங்கு நியமிக்கப்பட்டு கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார். (202-207)

## வேலணை வடக்கில் சனசமூக நிலையமும் நூலகமும் அமைப்பு

யாழ்ப்பாணம்,ஒக.14

வேலணை வடக்கு- மைலப்புலம் பகுதியில் அறிவொளி சனசமூக நிலையமும் நூல் நிலையமும் புதிதாக உருவாக்கப்பட்டுள்ளன.

மேற்படி சனசமூக நிலையம் 'போரூட்' நிதியுதவியுடனும்- மக்கள் பங்களிப்புடனும் உருவாக்கப்பட்டுள்ளது. (202-95)

## சமூக நலத்துறைச் செயற்பாட்டு குறித்த கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஒக.14

சமூகநலத்துறைத் திணைக்களத்தின் மாகாணமட்டச் செயற்பாடுகள் தொடர்பான கலந்துரையாடல் இன்று வியாழக் கிழமை யாழ்.பிராந்திய ஆணையாளர் அலுவலகத்தில் இடம்பெறவுள்ளது.

பிரதேச செயலகங்களில் பணிபுரியும் சிறுவர் நன்னடத்தைப் பிரிவின் நிகழ்ச்சித் திட்ட உதவியாளர்களுக்கு முற்பகல் 10 மணிக்கும்-

சமூக சேவை உத்தியோகத்தர்கள் மற்றும் அத்துறை சார்ந்த நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்களுக்கு முற்பகல் 11 மணிக்கும்- இக்கலந்துரையாடல்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

இக்கலந்துரையாடல்களில் வடக்கு மாகாண சமூக நலத்துறை பணிப்பாளர் கே. எஸ்.அருள்ராஜ் கலந்துகொள்ளவிருக்கின்றார். (1)

## 'ஒலிம்பியாட்' செயற்றிட்ட மாணவர்களுக்குப் பரீட்சை

யாழ்ப்பாணம்,ஒக.14

ஒலிம்பியாட் செயற்றிட்ட மாணவர்களுக்கான மாகாணமட்டத் தெரிவுப் பரீட்சைகள் இன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.வலயக்கல்வி அலுவலகத்தில் இடம்பெறவுள்ளன.

கடந்த ஜூன் மாதம் 7ஆம் திகதி தொடக்கம் ஒகஸ்ட் 2ஆம் திகதிவரை யாழ்.இந்து மகளிர் கல்லூரியின் ஆசிரியர் நிலையத்தில் இடம்பெற்ற பயிற்சியில் பங்குபற்றிய தரம் 6 மாணவர்களுக்கே இந்தப் பரீட்சை இடம்பெறவுள்ளது.

இந்தப் பரீட்சையில் தெரிவு செய்யப்படுவோர் செப்ரெம்பர் மாதம் 11ஆம் திகதி தொடக்கம் 14ஆம் திகதிவரை நடைபெறவுள்ள தேசிய மட்டப் பரீட்சைக்குக் கொழும்புக்கு அழைத்துச் செல்லப்படவுள்ளனர் என வலயக்கல்விப் பணிப்பா ளர் திருமதி அ. வேதநாயகம் தெரிவித்துள்ளார். (203)

## வேலணைப் பிரதேச மத்தியஸ்தர்களுக்கு சின்னம் சூட்டப்பட்டது

வேலணைப் பிரதேச மத்தியஸ்தர் சபை உறுப்பினர்களுக்கு சின்னம் சூட்டும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

நீதி, சட்ட மறுசீரமைப்பு அமைச்சினால் வழங்கப்பட்ட சின்னங்களை அண்மையில் மத்தியஸ்தர் சபைக்கூட்டத்தில் தவிசாளர் எஸ்.கே.சண்முகலிங்கம் உறுப்பினர்களுக்குச் சூட்டினார். (202-267)

## மின்சாரம் தடைப்படும் நேரங்களில் வடமராட்சியில் திருடர் தொல்லை

உடுப்பிட்டி, ஒக.14

வடமராட்சியில் மின்சாரம் தடைப்படும் நேரங்களில் திருடர் தொல்லை அதிகரித்துள்ளது.

வடமராட்சியின் பல பாகங்களில் இரவு வேளைகளில் மின் தடைப்படும் நேரங்களில் வீடுகளிலும், வீட்டுக்கு வெளியேயும் உள்ள பொருள்கள், வாகனங்கள் திருடப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக வீடுகள், காணிகளில் அடுக்கப்பட்டுள்ள பனைமர சலாகை மரங்கள், மேசை, கதிரைகளும் இரவு வேளைகளில் வீட்டுக்கு வெளியே விடப்பட்டுள்ள சைக்கிள், மோட்டார் சைக்கிள்களும் அதன் உதிரிப்பாகங்களும் களவாடப்படுகின்றன.

களவாடப்பட்ட சில பொருள்கள் பொது மக்களின் ஒத்துழைப்புடன் கரவெட்டிப் பிரதேச எல்லைக்குட்பட்ட பகுதிகளில் மீட்கப்பட்டுள்ளதாகவும் தெரியவருகின்றது. (202-155)

## வடமாகாண சனசமூக நிலையங்களில் அபிவிருத்திச் செயற்பாடுகள் முன்னெடுப்பு

யாழ்ப்பாணம், ஒக.14

வடமாகாண உள்ளூராட்சித் திணைக்களம், மீள் எழுச்சித் திட்டத்தின் கீழ் சனசமூக அபிவிருத்திச் செயற்பாடுகளை முன்னெடுக்கவுள்ளது. இதற்கென உள்ளூராட்சி சபைகளில் பணியாற்றும் உத்தியோகத்தர்களின் சேவைகள் பெற்றுக் கொள்ளப்படவுள்ளன.

இதற்கான அறிவுறுத்தல்களை உள்ளூராட்சி ஆணையாளர் பி.ஜோன்சன் சகல உள்ளூராட்சி சபைகளுக்கும் விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

சனசமூக அபிவிருத்தி எண்ணக்கருவிற்கு செயல்வடிவம் அளிக்கும் செயற்பாடுகளை வெவ்வேறு செயற்றிட்டங்களினூடாக முன்னெடுத்து சமூக முன்னேற்றம் உறுதிப்படுத்த வேண்டும்.

இவ்வகைளில் மீள் எழுச்சித் திட்டம் நவீன முறையில் மக்கள் பங்களிப்புடன் பல்வேறு புதிய செயற்பாடுகளை கிராமிய ரீதியில் முன்னெடுத்து வருவதுடன்-

இச்செயற்பாட்டை பரவலாக்குவதற்கு சகல துறையினருடனும் ஒத்துழைப்பைக் கோரியுள்ளது.

எமது உள்ளூராட்சி மன்றங்களின் கீழ் இயங்கும் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மீள் எழுச்சித் திட்டத்தின் செயற்பாடுகளில் தமது பங்களிப்பை வழங்குவதுடன் இச்செயற்றிட்ட உத்தியோகத்தர்களின் நடவடிக்கைகளையும் எமது உள்ளூராட்சி மன்ற செயற்பாடுகளில் இணைவுத் தன்மையையும் உறுதிப்படுத்த வேண்டும்.

மேற்படி அபிவிருத்தி செயற்பாடுகளுடன் மக்கள் பங்கேற்பு, சமூக ஆற்றுப்படுத்தல், சமூக இயலுமையாக்கம் போன்றவற்றில் ஒருங்கிணைந்த செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட வேண்டும்- என்றுள்ளது. (202-95)

## நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,ஒக.14

வடமராட்சி வலய முன்பள்ளி ஆசிரியர்களுக்கான விசேட கலந்துரையாடல் இன்று வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு திரு இருதயக் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

அனைத்து முன்பள்ளிகளின் ஆசிரியர்களையும் கலந்து கொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராஜா கேட்டுள்ளார்.

(203)

* * *

யாழ்ப்பாணம்,ஒக.14

யாழ்.கல்விவலயத்திற்கு உட்பட்ட பாடசாலைகளில் பயிலும் விஷேட தேவையுடைய மாணவர்களுக்கான சிறுவர் பயிற்சிமுகாம் இன்று வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு வலயக் கல்வி அலுவலக முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் விஷேட தேவையுடைய மாணவர்களுக்குரிய விளையாட்டுப் போட்டிக்கான பயிற்சிகளும் வழங்கப்படவுள்ளன.

கடந்த வாரம் நடைபெற்ற சிறுவர் முகாமுக்கு வருகை தரத் தவறியவர்களை இந்தமுறை கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

(203-302)

### குடா நாட்டின் பிரதேசச் செய்திகள்

# இளைஞர், யுவதிகளுக்கு அதிக வருமானத்தை ஈட்டித் தரவல்லது 'பற்றிக்' தொழில் முயற்சி

## கண்காட்சி நிகழ்வில் மேலதிக அரச அதிபர் வலியுறுத்து



வடமராட்சி,ஒக.14

தென்பகுதியில் 'பற்றிக்' உடைகளுக்கு பெரிதும் வரவேற்பு இருப்பது போல எமது பகுதிகளில் இல்லை. ஆனாலும் 'பற்றிக்' ஆடைகள் குறித்து நாம் சிந்திக்க வேண்டும். பற்றிக் ஆடைகள் உற்பத்தி மூலம் இளைஞர், யுவதிகளுக்கு அதிக வருமானத்தைக் ஈட்டிக் கொள்ள வாய்ப்புகள் கிடைக்கும்.

இவ்வாறு யாழ்.மேலதிக அரசாங்க அதிபர் ஆ.சிவசுவாமி, நெல்லியடி, தடங்கன் புளியடி முருகமூர்த்தி ஆலய திருமண மண்டபத்தில் நடைபெற்ற 'பற்றிக் பிறின்றிங்' கண்காட்சி விற்பனை நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பேசுகையில் கூறினார்.

வடமாகாண தொழிற்றுறைத் திணைக்களத்தின் அனுசரணையுடன் வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச செயலகத்தினால் நடத்தப்பட்ட இந்நிகழ்வு பிரதேச செயலர் எஸ்.சத்தியசீலன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் மேலதிக அரசாங்க அதிபர் ஆ.சிவசுவாமி மேலும் பேசுகையில் கூறியதாவது:

தென்பகுதி மக்களால் பல வருடங்களாக 'பற்றிக்' ஆடை உற்பத்தி தொடர்ச்சியாகச் செய்யப்பட்டு வருகின்றது. அங்குள்ள மக்கள் 'பற்றிக்' ஆடைகளை மிக அதிகமாகப் பயன்படுத்துவதோடு அலங்கார நிகழ்வுகளுக்கும் அவற்றைப் பயன்படுத்துகிறார்கள். பற்றிக் ஆடை உற்பத்தி, பற்றிக் அலங்காரப் பொருள்கள் உற்பத்தி தென் பகுதியில் ஒரு பாரம்பரியமாக வேரூன்றியுள்ளது.

ஆனால் பற்றிக் ஆடைகளை நாம் பயன்படுத்துவதில்லை. இது குறித்து நாம் நன்றாக சிந்தனை செய்து இவற்றைப் பயன்படுத்த முன்வரவேண்டும். இப்படியான நடவடிக்கைகளை மேற்கொள்ளாமல் நாம் எல்லாவற்றையும் ஒளித்து வைத்துள்ளோம். எமது பாரம்பரிய ஆக்கங்கள் பலவற்றைக் கைவிட்டுள்ளோம். இதனால் எமது பிரதேச பண்பாடுகளைக் கூட இழந்து கொண்டு வருகின்றோம்.

### பன்ன வேலைப் பொருள்கள்

பன்னவேலைப் பொருள்களுக்கு தென் பகுதியில் நல்ல சந்தை வாய்ப்புகளுண்டு. அவற்றை எமது வீடுகளிலும் நாம் பயன்படுத்தி வந்தோம். ஆனால் இன்றைய கால ஓட்டத்தினால் பன்னவேலை உற்பத்திப் பொருள்கள் உற்பத்தி செய்வதையே நாம் கைவிட்டு வருகின்றோம். எதிர்காலத்தில் எமது வீட்டுக்குசினிகளில் அம்மி, குழவியைக் கூட காணமுடியாமல் போகும் நிலை உருவாகி வருகிறது. இந்நிலை ஏற்பட்டுக் கொண்டிருந்தால் எமது பண்பாடு, பாரம்பரியங்களை நாம் இழக்க வேண்டிவரும்.

எமது கலை, பண்பாடு, பாரம்பரியங்களைப் பாதுகாக்கும் வண்ணம் நாம் அனைவரும் செயல்பட வேண்டும். பற்றிக் ஆடை உற்பத்தியில் இளைஞர், யுவதிகள் ஈடுபட வேண்டும். இப்பணியில் விசேட தேவையுள்ளவர்களும் ஈடுபட்டு பற்றிக் ஆடை வகைகளில் பல்வேறு ஆக்கங்களை உருவாக்க முன்வரவேண்டும்.

பற்றிக் பிரின்றிங், ஆடை உற்பத்திக்கு நூல், சாயம் போன்ற மூலப் பொருள்களைப் பெற்றுக் கொள்வதில் சிரமங்கள் இருந்து வருகின்றன. ஆனாலும் இதற்கு சாக்குப் போக்குச் சொல்லாமல் இம்மூலப் பொருள்களை எடுத்துவர உரிய நடவடிக்கைகளை நாம் மேற்கொள்வோம்.

பற்றிக் பிரின்றிங், பற்றிக் ஆடைகளைச் சந்தைப்படுத்த வர்த்தகர்களும் முன்வர வேண்டும்.இதன் மூலம் இளையோருக்கு வேலைவாய்ப்புகள் கிடைப்பதுடன் சிறு கைத்தொழில் துறையும் வளர்ச்சியடையும். ஏற்றுமதிக்கும் வாய்ப்புகளுண்டு -என்றார்.

## மொழித் தேர்ச்சிப் பரீட்சை

யாழ்ப்பாணம்,ஒக.14

அரசகரும மொழிகள் திணைக்களத்தினால் செயற்படுத்தப்படும் அரச கரும மொழி நிகழ்ச்சித் திட்டத்திற்கு அமைய சிங்கள, ஆங்கில மொழித்தேர்ச்சிப் பரீட்சை விரைவில் நடைபெறவுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் கடமையாற்றும் உள்ளூராட்சி அரசசேவை அலுவலர்கள் மேற்படி பரீட்சைக்கு விண்ணப்பம் செய்யலாம்.

விண்ணப்பம் செய்வோர் நாளை வெள்ளிக்கிழமைக்கு முன்னர் 'அரசகரும மொழி ஆணையாளர், பாஷா மந்திரிய, 341/7, கோட்ட வீதி, ராஜகிரிய' என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கலாம்.

இப்பரீட்சைகள் எதிர்வரும் செப்ரெம்பர் 27ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

(202-95)







உடுவில் மகளிர் கல்லூரி முத்தமிழ் விழாவில் எடுக்கப்பட்ட படங்கள்.

விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை முதுநிலை விரிவுரையாளர் திருமதி நாச்சியார் செல்வநாயகத்தை கல்லூரி அதிபர் திருமதி ஷிராணி மில்ஸ் விழா மண்டபத்திற்கு அழைத்துச் செல்வதை முதலாவது படத்திலும்,

மாணவர்களின் கலைநிகழ்வுகளில் சில காட்சிகளை அடுத்துள்ள இரு படங்களிலும் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், ஒக 14

கொக்குவில், நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்மன் ஆலயத்தில் நாளை வெள்ளிக்கிழமை பி.ப. 3 மணிக்கு வரலட்சுமி விரத பூசைகள் இடம்பெறவுள்ளன. (203)

* * *

அளவெட்டி நாகேஸ்வரம் நாகவரத நாராயணர் ஆலய பெருந்திருவிழா நாளை வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது. எதிர்வரும் 24 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (203)

* * *

அச்செழு மத்தி மதுரை மீனாட்சி அம்மன் ஆலய அலங்காரத் திருவிழா நேற்று புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது. தொடர்ந்து 10 நாள்கள் இடம்பெறவுள்ளது. (203)

* * *

நாவற்குழி, ஒக 14

கைதடி மத்தி சச்சிதானந்த ஆச்சிரமத்தில் அமைந்துள்ள ஞானஒளி மாதாஜி லிங்கேஸ்வரர் ஆலயத்தில் எதிர்வரும் 16 ஆம் திகதி காலை 8.30 மணிக்கு காயத்ரீ மந்திர ஹோமம் இடம்பெறவுள்ளது. (203-288)

## பாதிக்கப்பட்ட சிறுவர்களின் விவரங்கள் சேகரிப்பு

யாழ்ப்பாணம், ஒக.14

தென்மராட்சி பிரதேசத்தில் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் விவரங்கள் அந்தந்த கிராம அலுவலர் அலுவலகங்களில் பதிவு செய்யப்படுகின்றன.

சாந்திகம் நிறுவனத்தினரால் இப்பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சிறுவயதிலிருந்து பாடசாலைக்குச் செல்லாத சிறுவர்கள், பாடசாலை கல்வியை இடையில் நிறுத்திய சிறுவர்கள், ஊனமுற்ற அங்கவீன சிறுவர்கள், உளநலன் பாதிக்கப்பட்ட சிறுவர்கள், தாய், தந்தையை இழந்த சிறுவர்கள், இல்லங்களில் தங்கியுள்ள சிறுவர்கள், பிறப்புச் சான்றிதழ் இல்லாத சிறுவர்கள், 18 வயதுக்கு உட்பட்ட திருமணமான சிறுவர்கள், ஆகியோரின் விவரங்கள் திரட்டப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது. (203-207)

## தேசியமட்ட தமிழ்த்தினப் போட்டி-2007 யாழ்.மத்திய கல்லூரிக்கு 3 முதலிடங்கள்

யாழ்ப்பாணம், ஒக.14

கடந்த ஆண்டு தேசிய மட்டத்தில் நடைபெற்ற தமிழ்த்தினப் போட்டியில் யாழ்.மத்திய கல்லூரி 3 முதலாம் இடங்களைப் பெற்றுள்ளது.


வெற்றியீட்டிய மாணவர்களும் அதிபர், ஆசிரியர்களும்

பிரிவு 5 பேச்சுப் போட்டியில் ச.கோபிநாத் முதலாம் இடத்தையும் பிரிவு 2 நடனப்போட்டியில் க.கௌதமன் முதலாம் இடத்தையும் பெற்றுள்ளனர்.

நடனம் குழு 1 திறந்த போட்டியிலும் முதலாம் இடத்தையும் இக்கல்லூரி பெற்றுள்ளது.

இக்குழுப் போட்டியில் கு.விதுர்ஷன், கி.கிருஷாந்தன், க.கிருஷாந்தன், செ.சனுஜன், ஜெ.சிந்தூரன், க.கணாதிபன், த.தயாநிஷன், ஜெ.யதுனயன், சூ.கோபிநாத், உ.அரிஞ்சயன், க.கௌதமன், கு.கபிலன் ஆகியோர் பங்குபற்றி வெற்றியீட்டியுள்ளனர். (202)

## மேற்பார்வையாளர்களுக்கான ஆவணங்களைப் பெற்றுக் கொள்ளலாம்

யாழ்ப்பாணம், ஒக.14

எதிர்வரும் 17ஆம் திகதி நடை பெறவுள்ள ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சை நிலையங்களில் பரீட்சை மேற்பார்வையாளர்களாக தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் கடமையாற்றுவோர் பரீட்சைக்குரிய ஆவணங்களை வலயக் கல்வி அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தன் அறிவித்துள்ளார். (203-207)




அளவெட்டி, நாகேஸ்வரம்

ஸ்ரீ நாகவரத நாராயணர் தேவஸ்தானம்

மஹோற்சவ விஞ்ஞாபனம்

15.08.2008– 26.08.2008

மெய்யன்புடையீர்!

மேற்படி மஹோற்சவம் (15.08.2008) வெள்ளிக்கிழமை மு.ப. 10.30 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும். அன்பர்கள் அனைவரும் வந்து தரிசனை செய்து நாகவரத நாராயணனின் திருவருளால் சுகவாழ்வு பெறுமாறு வேண்டுகின்றோம்.

விசேஷ விழாக்கள்

கொடியேற்றம் : 15.08.2008 வெள்ளி மு.ப.10.30 மணி
கைலாச வாகனம் : 22.08.2008 வெள்ளி மாலை 6 மணி
சப்பறம் : 23.08.2008 சனி மாலை 6.30 மணி
தேர் : 24.08.2008 ஞாயிறு மு.ப.11மணி
உறியடி : 24.08.2008 ஞாயிறு மாலை 6.30 மணி
ஸ்ரீ ரங்கநாதர் பாதபூஜை: 25.08.2008 திங்கள் மு.ப. 9மணி
தீர்த்தம் : 25.08.2008 திங்கள் மு.ப.11மணி
ஆஞ்சநேயர், வைரவர் பொங்கல்: 26.08.2008 செவ்வாய் மு.ப.8.30மணி
திருக்கல்யாணம் : 26.08.2008 செவ்வாய் பி.ப.3 மணி

நாகேஸ்வரம், அளவெட்டி. பொறுப்புரிமைப் பரிபாலனசபை.


## கசிப்பு வைத்திருந்த 7 பேருக்கு விளக்கமறியல்

யாழ்ப்பாணம், ஒக.14

சட்ட விரோத கசிப்பு வைத்திருந்த ஏழு பேர் 14 நாள்கள் விளக்க மறியலில் வைக்கப்பட்டனர்.

சாவகச்சேரி நீதிமன்றில் கடந்த திங்கட்கிழமை இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

சாவகச்சேரி பொலிஸார் மீசாலை மேற்கு (கொட்டாம்பிட்டி), மீசாலை வடக்கு ஆகிய பகுதிகளில் நடத்திய திடீர் பரிசோதனையின் போது சட்ட விரோத கசிப்பு விற்பனைக்கு வைத்திருந்த ஏழு பேரையும் கைது செய்தனர்.

இவர்களை கடந்த திங்கட்கிழமை நீதிமன்றில் தனித்தனி வழக்குகள் பதிவு செய்து ஆஜர் செய்தபோது இந்த ஏழு பேரையும் எதிர்வரும் 25ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (202-207)

## வீதி சேதத்தினால் மக்கள் பெரும் அவதி

நாவற்குழி, ஒக 14

கைதடி மத்தி வளர்மதி சனசமூக நிலையத்திற்கு முன்பாகவுள்ள வீதி கடந்த பல வருடங்களாக திருத்தப்படாமல் மிகவும் சேதமடைந்த நிலையில் குன்றும் குழியுமாகக் காணப்படுகிறது.

இதனால் இந்த வீதியால் செல்லும் பாதசாரிகளும் வாகன சாரதிகளும் பெரும் அவலங்களை எதிர்கொள்வதாகக் கூறப்படுகின்றது.

கைதடி விக்கினேஸ்வரா வித்தியாலயத்திலிருந்து மேற்குப் பக்கமாகச் செல்லும் இந்த வீதி ஒரு கிலோமீற்றர் தூரத்தைக் கொண்ட தார் வீதியாக முன்னர் இருந்தது.

தற்போது சேதமடைந்ததினால் மண் வீதியாக மாறியுள்ளது.

இது சம்பந்தமாக உரிய அதிகாரிகளிடம் பலமுறை முறையிட்ட போதும் அவர்கள் எதுவித நடவடிக்கையும் இது வரைஎடுக்கவில்லை என்று கூறப்படுகின்றது.

எனவே, இந்த விடயத்தில் மக்கள் நலனைக் கருத்திற்கொண்டுஇவ்வீதியை உடன் திருத்த நடவடிக்கைஎடுக்கவேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (203-288)


## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில் 22.04.1942

விண்ணில் 19.07.2005

திருமதி சிவபாலாம்பிகை சுந்தரலிங்கம்

திதி: ஆடி பூர்வபக்க திரயோதசி (14.08.2008)

மூன்று மாதங்கள் போலிருக்கின்றது மூன்றாண்டுகள் ஓடிவிட்டன
ஆண்டுகள் பல சென்றாலும் ஆறாது எம் துயரம்
அணையாது உன் நினைவு

ஒரே நாளில் ஓடி மறைந்தாய் பார்க்க யாருமில்லை என்றா?
பரிதவிக்க விட்டுச் சென்றாய்; பண்பான கணவரையும்
பல உடன்பிறப்புக்களையும். பிறவிப்பயனை முடித்துவிட்டாய்;
உறவினரை உதறிவிட்டு;

பிறந்தவர் இறப்பது நியதி எனினும்
குறுகிய காலத்தில் மறைந்து போனது
உறுத்துது எமது உள்ளங்களை. உருக்குது மனதை நாடோறும்
எங்கிருந்தாலும் ஏற்றமுடன் வாழ்க

85, கொழும்புத்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
தகவல்: ஆ.சுந்தரலிங்கம்
(ஒய்வுபெற்ற தபாலதிபர்)
தொலைபேசி:
00919940389082

உனது மறைவால் வாடும்:
கணவர், வளர்ப்பு மகன்,
சகோதரிகள்,
மைத்துனிமார், மைத்துனர்.



## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

15.07.2008 அன்று சிவபதமடைந்த, எமது திணைக்கள அலுவலக ஊழியர், திரு.சி.கணேசமூர்த்தி அவர்களின் அன்புத் தாய் திருமதி சின்னத்தம்பி இராசமணி அவர்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யாழ்ப்பாணம் கூட்டுறவுத் திணைக்கள ஊழியர் நலன்புரிக் கூட்டுறவுச் சங்கம் (வ–து), இல.857, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.



## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 16.07.1948

மறைவு 28.07.2007

திருமதி சின்னத்துரை செல்வநாயகி

எம்மை அரவணைத்துக் காத்து ஆதரவாய் வழிகாட்டி.
வையத்துள் வாழ்வாங்கு வாழவைத்த தெய்வமே!
உங்கள் நினைவுடனேயே எங்கள் வாழ்க்கைப் பயணம் தொடரும்.

கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
தாய், சகோதரர்கள்.

ஏழாலை கிழக்கு.



## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



மண்ணகம் 21.03.1934

விண்ணகம் 15.07.2008

திருமதி ஞானப்பிரகாசம் மேரி சொர்ணம்மா

பாசத்தின் இருப்பிடமாய் பண்பின் சிகரமாய்
பாசமுடன் இணைந்த
இனிய உங்கள் முகம் எங்கள்
நெஞ்சை விட்டகலாது.

எமது குடும்பத்தலைவியின் பிரிவுத்துயரில் பங்கு கொண்ட மற்றும் பலவழிகளிலும் உதவிகள், ஒத்தாசைகள், வழங்கிய உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவருக்கும் எமது குடும்பத்தின் மனமார்ந்த நன்றிகளையும் அன்பையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

பற்றிமா வீதி,
பண்டத்தரிப்பு.

தகவல்: குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# தெய்வத்துவத்தை அடைய ஆத்ம உணர்வு போதுமானது

நமது உடலே இயற்கையின் (பிரகிருதி) தன்மை கொண்டது. நமது உடலின் பண்புக்கு நாம் அடிபணிய வேண்டும். நமது உடலின் மேல் நாம் முழு ஆதிக்கம் செலுத்தவேண்டும். உடலை ஆதிக்கங்கொண்டால், மனதும் நம் வசப்படும். மனம் வசப்பட்ட பின், அங்கு ஆத்மாவை தரிசிக்கலாம். ஆத்மாவை மறந்து, மனதையும் மறந்து, உடலை மட்டும் பின்பற்றினால் அது அரக்கத் தன்மையாகிறது. ஆத்மாவை மறந்து, மனதையும் உடலையும் மட்டும் பின்பற்றினால் அது விலங்குத் தன்மையாகிறது. ஆத்மா மனது, உடல் இவை அனைத்தின் ஒன்றிணைந்த உணர் வுடன் இருந்தால், நீ மனிதனாகிறாய். மனதையும் உடலையும் தியாகம் செய்தால் அது தெய்வத்துவம் ஆகிறது. தெய்வத்துதை அடைய, ஆத்ம உணர்வு மட்டுமே போதுமானது. ஆத்மாவை மறந்து, மனது, உடல் உணர்வுகளுடன் இருந்தால் அது விலங்குத் தன்மையாகி றது. ஆத்மாவையும் உடலையும் மறந்து மனதை மட்டும் பிற்பற்றினால் அரக்கத் தன்மையாகிறது. மனித வாழ்க்கையில் அசுரத்தன்மை, விலங்குத்தன்மை, மனிதத் தன்மை மூன்றையும் காண்கிறோம். நாம் முழுமை யான மனிதனாக இருக்கவேண்டுமென்றால், உடல், மனது, ஆத்மா மூன்றும் ஒன்றிணைந்து இருத்தல்வேண்டும். சிறிது சிறிதாக நமது உடல் உணர்வை விலக்கி, மனது ஆத்ம உணர்வை வளர்த்துக்கொள்ளவேண்டும். அப்போது, விலங்குத் தன்மைகள் உன்னிடமிருந்து விலகி விடும். உடல் உணர்வையும் மனதின் உணர்வையும் விலக்கி, ஆத்ம தத்துவத்திலேயே லயித் திருந்தால் நீ தெய்வீகமாகிறாய்.



## சாயி சிந்தனை

# வாசகர் திருமுகம்

## இப்படிச் செய்யலாமா?

வடமராட்சி வலயத்திலுள்ள பாடசாலைகளில் கரவெட்டியில் உள்ள பாடசாலைகளில் ஒன்று மிகவும் பின்தங்கிய கஷ்டப் பிரதேசப் பாடசாலையாகும். இங்கு கற்கும் மாணவர்கள் மிகவும் ஏழ்மை நிலையில் உள்ளோர் ஆவர். இதனை அறிந்து பல தொண்டர் நிறுவனங்கள் இப்பாடசாலை மாணவர்களுக்கு உதவுவது வழக்கம். அந்தவகையில் கடந்த மாதம் 'சேவ் த சில்றன்' என்ற அமைப்பு இப்பாடசாலை மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப 106 பாடசாலைப் பைகளைக் கொடுத்திருந்தது. இப்பாடசாலைக்கு வருகை தரும் மாண வர்களின் எண்ணிக்கை 100இற்கு கூடுவது இல்லை என்பது கவனிக்கத்தக்கது. அந்த ஒவ்வொரு புத்தகப் பையினுள்ளேயும் கற்றல் உபகரணங்களும் இருந்தமை குறிப்பிடத்தக்கது. ஒவ்வொன்றினதும் பெறுமதி 1000 ரூபாவுக்கு அதிகம். இப்புத்தகப் பைகளை தரம் 1இல் இருந்து தரம் 10 வரை கொடுத்துவிட்டு தரம் 11 மாணவர்களுக்கு மட்டும் (தரம் 11 இல் உள்ள மாணவர் எண்ணிக்கை 11 ஆகும்) அவை வழங்கப்படவில்லை. தங்களுக்கும் புத்தகப் பைகள் கிடைக்கும் என ஆவலுடன் எதிர்பார்த்த அம்மாணவர்கள் இதுபற்றி கோட்டக்கல்வி அதிகாரியிடம் கூறியும் அவரும் இதுபற்றி எதுவித அக்கறையும் கொள்ளவில்லை. தரம் 11 மாணவர்கள் மீதான வேறு ஏதோ பழிவாங்கல் நடவடிக்கையாக இது உள்ளது என மாணவர் கூறுகின்றனர். மாணவரின் ஏழ்மை நிலை அறிந்து கிடைக்கும் உதவிகளை இவ்வாறு செய்வது நியாயமல்ல. இதைக் கல்விப் பகுதி கவனமெடுத்து பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு நியாயம் வழங்குமா?

பாதிக்கப்பட்ட ஒரு மாணவரின் தந்தை.

## பாதுகாப்புப் பிரிவினரும் வீட்டு வாடகையும்

பருத்தித்துறையில் 524ஆவது படையணி நிலை கொண்டுள்ளது. துறைமுகத்தை மையமாகக் கொண்டு இது உள்ளது.

வீட்டு உரிமையார்கள் பலர் இந்த உயர் பாதுகாப்பு வலயத்துக்கு வெளியே 'விதியை நொந்து' தாம் வாடகை கொடுத்துக் கொண்டு குடியிருக்கிறார்கள். ஆனால் பாதுகாப்பு துறையினரோ ஒழுங்காக வாடகை கொடுப்பதில்லை. பலருக்கு 2000 ஆண்டு வரையில் இருந்து ஐந்து ஆறு வருடங்களுக்கு நிலுவையுள்ளது. ஏன் இப்படி 'ஏனோ தானோ' என்று நடக்கிறார்களோ தெரியவில்லை. வாடகை கொடுப்பது அவர்கள் கருமமும் தருமமும் ஆகும். விலைவாசி உயர்வையும் அவர்கள் கருத்திற்கொள்வது நல்லது.

இந்த உயர் பாதுகாப்பு வலயத்துக்குள் வாழும் பொலிஸ் அதிகாரிகள் 'வாடகை ஒழுங்காக் கொடுக்கிறார்கள்' இராணுவ உத்தியோகத்தர்களும் வாடகை நேர்மையாகத் தருவார்கள் என எதிர்பார்க்கிறோம். இராணுவ உயர் அதிகாரிகளும் கௌரவ அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களும் கருணையுடன் உயர் பாதுகாப்பு வலயத்துள் உள்ள வீடுகளின் உரிமையாளர்களின் நன்மையைக் கருத்திற்கொள்வார்கள் என எதிர்பார்க்கிறோம்.

வாடகை கிடைக்காத ஒரு'வீட்டு உரிமையாளர்.

# இலங்கை வங்கியின் யாழ்.மாவட்டக் கிளை ஊழியர்களின் குருதிக் கொடையும் சிரமதானமும்



ஊழியர்கள் குருதிக்கொடையிலும் சிரமதானப் பணியிலும் ஈடுபட்டனர்.

யாழ்ப்பாணம்,ஓக.14

இலங்கை வங்கியின் யாழ். மாவட்டத்திலுள்ள கிளைகளின் கடந்த முதலாம் திகதி இலங்கை வங்கி தனது 69 ஆவது அகவையைப் பூர்த்தி செய்தமையை முன்னிட்டு கடந்த 9ஆம் திகதி வங்கியின் ஊழியர்கள் யாழ். போதனா வைத்தியசாலையில் இரத்த வங்கியில் இரத்ததானம் செய்தனர்.

தொடர்ந்து யாழ்.போதனா வைத்தியசாலையில் சிரமதானப் பணிகளிலும் ஈடுபட்டனர்.

இலங்கை வங்கியின் பிராந்திய அலுவலகத்தில், ஊர்காவற்றுறை, திருநெல்வேலி, மானிப்பாய், சுன்னாகம், யாழ்.இரண்டாம் கிளை, யாழ்.மேற்தரக் கிளை ஆகியவற்றில் இருந்து வந்து ஊழியர்கள் ஒன்றுகூடினர்.

அங்கிருந்து வடபிராந்திய உதவிப் பொதுமுகாமையார் பி.ஏ. அருமைநாயகம் தலைமையில் யாழ்.போதனா வைத்தியசாலைக்குச் சென்று குருதிக்கொடையிலும் சிரமதானப் பணிகளிலும் ஈடுபட்டனர்.

அத்துடன் வைத்தியசாலையின் இருதயநோய்ச் சிகிச்சைப் பிரிவுக்கு இலங்கை வங்கியின் வடபிராந்திய உதவிப் பொதுமுகாமையாளர் வைத்திய சாலைப் பணிப்பாளர் ஏ.ஈ.ஞானசோதியிடம் ஒரு லட்சத்து 50ஆயிரம் ரூபாவிற்கான காசோலையை கையளித்தார். (203)






## கும்பாபிஷேகம்

சுழிபுரம்,ஓக.14

சுழிபுரம் வடக்கு சிவன் ஆலய கும்பாபிஷேகம் அடுத்த மாதம் 4ஆம் திகதி நடைபெறவுள்ளது.

1995ஆம் ஆண்டு யுத்த சூழலின்போது முற்றாக சேதம் ஏற்பட்டு பூசைகள் யாவும் தடைபட்டிருந்தது. தற்போது ஆலயம் புனர [illegible]

(203-28)

# நல்லூர்ப் பெருந்திருவிழா பக்திப்பாக்கள்



தேரடியிற் சென்று தெரிசித்தாற் போதுமெனப்
பாரறியச் சொன்ன பழங்கதையை - நீரறிய
மாட்டீரோ நின்று மனங்கசிந்து பாடீரோ
நாட்டீரே கேளீர் நலம்.

- யோகர் சுவாமிகள்

## அருள்வாய் நல்லைக் குமரா...!

கதியற்றோர் கலங்கியே நின் காலடியில் - இன்று
மதியற்றோர் அடாவடி நீயறிவாயே!

மீதியெல்லாம் இனியும் இருக்குமன்றோ - இல்லை
மீட்டுடுவாய் என்றல்லோ உன்னடியில்

வீதியெங்கும் கேட்குதய்யா உன் நாமம் - அன்று
ஆதியிலும் உனைத்தானே நம்பி நின்றோம்

ஆழ்கடல் ஒற்றியே எம் அன்பானாய் - என்றும்
வாழ்வினை வளர்த்திட வழிகாட்டுடுவாய்

ஆற்றுவார் உன்முன் அருள்உரை - இனியும்
போற்றுவீர் எம்மவர் பிணிதீரவே

வல்லவர் வாழ்ந்திடப் போதுமா - இல்லை
அல்லவர் வாழவும் அருள் நல்லைக்குமரா.

ஆ.சந்திரநாதன், ஆவரங்கால்.

## தொடு மன்ற கேணியிற் சுரந்து நீர் நல்லூரிற் பாய....!

உலகை நொடிதனில் வலஞ்செய
உன்னு குன்றெலாம் உடனடுக்கி
சீரார் சிவன் உமை தந்து அருள்வேலா
சிறியேங்களை இறை சுற்றி
நீராடும் பொய்கையின் நெஞ்சே - நீ
நித்தலும் எம்பிரானுடைய கோயில்
கைத்தலம் தந்த என் கண்மணி தேரோட்டம்
காத்தருள் மக்கள் பேரோட்டம்
தரணியிலே சாந்தியும் சமாதானமும்
திருவடியே தஞ்சம் உட்டெளி வார்க்கே!

- எம்.பிருந்தா, கரவெட்டி.

## ஒருமுறை வரவேண்டும்

முருகா தினமும் உனைக்காண
நல்லைப் பதிக்கு வருகின்றேன்
உருக்கமுற நின்தடி தொழுகின்றேன்
ஒருநேர நோன்பும் இருக்கின்றேன்
தருபோ லுயரும் துயர்
எல்லாம் தீர்த்து வைத்திட
ஒருமுறை நீயும் வரவேண்டும்
வாழ்வும் வளமும் தரவேண்டும்.

- அரியாலையூர் சி.சிவதாசன்.

## வினைதீர்ப்பாய் வண்ணமயில் வாகனனே

நல்லூரின் நடுவினிலே நாலுதிக்கும் மண்டபங்கள்
நிலையான எழிலோடு நாளும்கலை நீர்வார்க்கும்
கல்விச் செல்வமொடு களிப்புறும் யாழினிலே
கரத்தினிலே வேலோடு காப்பவனே கந்தனே!
சொல்லினால் முடிவுறா சாய்கின்ற சேய்மனங்கள்
சிந்தையிலே அகலவழி செய்திடுவாய் வேல்கொண்டு
வல்லவனே! சூடமுடன் வந்தோமே உன்னடியில்
விடிவுதனை தாராயோ வண்ணமயில் வாகனனே.

- அல்வையூர் கே.ஆர்.திருத்துவராஜா.

## தொல்லைவினையறுப்பவன்!

நல்லூரான் சந்நிதிக்கு நாளும் வருபவரின்
தொல்லைவினை தீருமென்று சொன்னார்கள் மேலோர்கள்
சொல்லிவைத்த யாவருமே தூயவராம் ஞானியர்கள்
செல்லப்பர் உள்ளிட்ட சித்தர் பரம்பரையோர்
நல்ல மகான்கள் நடம்புரிந்த மண்ணுக்கு
நல்ல மகிமையுண்டு நாடுவோம் நல்லூரை
வல்வினைபோம் சென்று வழிபாடு செய்வதொன்றே
தொல்லை வினையறுக்கத் தூய வழியாகும்.

- சி.வெற்றிவேலு, வட்டுக்கோட்டை.

## தந்தைக்கு உபதேசித்த சுவாமிநாதனே...

ஈழநாட்டின் திருநகர் நல்லூர்ப் பதியில்
எழுந்தருளி யிருக்கும் எம்வல்ல முருகா!
பாழும் போரிங்கே பரந்துதான் போகுதையா
பாவி மக்கள் படுந்துயருக்கு எல்லையோ இல்லையோ
தாழுஞ் சிறைபோட்டுப் பிரமாவைத் தண்டித்தவரே
தரணியிலே கருணையில்லாக் கயவரைத் தண்டியுமையா
குருவாகி இருந்து தந்தைக்கு உபதேசித்த
சுவாமிநாதனே, சுந்தரனே, சரவணபவனே.

- அரியாலையூர் திருநாவு.ஈஸ்வரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொத்துக் கொத்தாகக் குண்டு போட்டு கொன்று குவிப்பதை உடன் நிறுத்துக!

## சபையில் சொலமன் சூ சிறில் எம். பி. காட்டம்

மொழி உரிமை, சமஉரிமை என்றும் பிரதேச சுயாட்சி, சமஷ்டி, கூட்டாட்சி என்றும் காலங்காலமாக நாம் பேச்சுகளை நடத்தி உடன்பாடுகள், ஒப்பந்தங்கள் செய்து அவை கிழித்தெறியப்பட்டு ஏமாற்றப்பட்டு- வஞ்சிக்கப் பட்ட அந்த வரலாறு பற்றி இங்கு பேசுவதற்கு நான் விரும்பவில்லை.

நிரந்தர தீர்வுமின்றி, இடைக்கால தீர்வுமின்றி, நிலையான அமைதியின்றி, நிரந்தர சமாதானமின்றி, நிம்மதியான வாழ்வின்றி அழிவுகளையும் அனர்த்தங்களையும் இடர்பாடுகளையும் இடம்பெயர்வுகளையும் தினம் தினம் சந்திக்கும் ஒரு சமூகத்தை பற்றியே இங்கு பேச விரும்புகிறேன்.

- இவ்வாறு யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சொலமன் சூ சிறில் சபையில் தெரிவித்தார்.

அவசரக்கால சட்ட நீடிப்பு மீதான விவாதம் நடைபெற்ற வேளை அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

தற்போது வடக்குப் பகுதியில் குறிப்பாக வன்னி பெரும் நிலப்பரப்பில் நடைபெறுகின்ற இராணுவ நடவடிக்கைகளையும் அதன் பின்புலங்களையும் பார்க்குமிடத்து நாட்டில் ஜனநாயகமும் மனித உரிமைகளும் மனித நேயமும் ஏன் மானிட நீதியும் முற்று முழுதாக செயலிழந்து செத்து விட்டன என்றே கூற வேண்டியுள்ளது.

அரசின் முப்படைகளும் தரை, கடல், ஆகாயம் மார்க்கமாக இரவு, பகல் பாராது மூர்க்கத்தனமான தாக்குதல்களை தமிழ் மக்கள் மீதும், மக்கள் குடியிருப்புகள் மீதும், பாடசாலைகள், பொது இடங்கள், வைத்திய சாலைகள் மீதும் மேற்கொண்டு இன ஒழிப்பு நடவடிக்கையையும் நில அபகரிப்பையும் தொடர்ந்து நடத்திக் கொண்டிருக்கின்றன.

**பொதுமக்களை இலக்கு வைத்துத் தாக்குதல்**

பெரும்பாலும் பொதுமக்களை இலக்காகக் கொண்டு நடத்தப்படுகின்ற இந்த பயங்கரமான மும்முனைத் தாக்குதல்களால் குடும்பம் குடும்பமாக, கொத்துக் கொத்தாக அப்பாவி மக்களும், பச்சிளம் குழந்தைகளும் பாடசாலை மாணவர்களும் துடிக்க துடிக்க கொல்லப்படுவது மனிதம் கண்கொண்டு பார்க்க முடியாத கொடூர நிகழ்வுகளாகும். இதை எப்படி இச்சமயங்களில் எடுத்துக் கூறுவதென்று எனக்கே புரியவில்லை. உள்ளம் பதறுகிறது - வார்த்தைகள் தடுமாறு கின்றன.

வன்னிப் பிரதேசத்தில் இடம்பெயர்ந்துள்ள பொது மக்கள் வீதிகளிலும் மரங்களின் நிழல்களிலும் அடிப்படை வசதிகளின்றி வாழ்ந்துக் கொண்டிருக்கிறார்கள்.

இந்த மக்களுக்கான உணவு,மருந்து குழந்தைகளுக்கான பால் மா, சுகாதாரம், குடிதண்ணீர், எரிபொருள் மற்றும் தங்குமிட வசதிகள் போன்ற தேவைகளை பூர்த்தி செய்ய முடியாது. இப்பகுதிகளிலுள்ள அரச அதிபர்கள் திண்டாடுகிறார்கள். கடைசியாக கிடைத்த தகவல்களின் படி ஒன்றரை லட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் கிளிநொச்சி மாவட்டத்தில் தஞ்சமடைந்துள்ளனர்.

இவர்கள் மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்களிலுள்ள மாந்தை கிழக்கு, துணுக்காய், மல்லாவி, முழங்காவில் மாந்தை மேற்கு ஆகிய பகுதிககளில் இருந்து வெளியேறியவர்கள். அவர்களுக்கு போதிய நிவாரண உதவிகள் வழங்கப்படாமையினால் பல்வேறு கஷ்டங்களுக்கு கஷ்டங்களுக்கும் அவலங்களுக்கும் தினம் முகம் கொடுத்து வருகிறார்கள்.

இராணுவ நடவடிக்கை காரணமாக வன்னி, கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்களின் 60 இற்கும் மேற்பட்ட பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன. இதனால் மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் முற்று முழுதாக பாதிக்கப்பட்டு சீர்குலைந்துள்ளன.

வடபகுதி மக்கள் பொருளாதாரம் என்ற வெறுமைக்குள் சிறைப்பட்டு எத்தனைக் காலங்கள் இப்படி வாழ முடியும். இந்த அநீதிகள், அநியாயங்கள், அவலங்கள் பற்றியும் கொலைகள், காணாமற் போதல் போன்ற மனித உயிர்களின் பெறுமதி பற்றியும் இச்சபையில் நாம் பல முறை புள்ளி விவரங்களுடன் எடுத்துக் கூறியும் பலன் கிட்டவில்லை. எந்த சட்டரீதியானதும், மனிதநேயமானதுமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை அவை தொடர்கதையாகவே உள்ளன.

**அவசரகாலச் சட்டத்தை நிறைவேற்றிப் பயனில்லை**

மனித உரிமை மீறல்கள் குறித்த ஆணைக் குழுக்களும் விசாரணை கமிஷன்களும் ஆக்கபூர்வமாக செயற்படவேண்டும். மனித உரிமை மீறல்களை மூடிமறைப்பதை அரசு உடன் நிறுத்த வேண்டும். எல்லா மக்களையும் மக்களாக மதிக்க வேண்டும். தவறும் பட்சத்தில் தோல்வியடைந்த நாடுகளின் பட்டியலில் இலங்கை இடம்பெற்று உலக அரங்கிலிருந்து வெகு விரைவில் தனிமைப் படுத்தப்படும் என்பதை இச்சபையிலே கூறி வைக்க விரும்புகிறேன்.

மாதா மாதம் இந்த அவசரக் காலச் சட்டத்தை இச்சபையிலே நிறைவேற்றி அரசு எதனையும் சாதிக் கப் போவ தில்லை. மாறாக இந்த கொடிய போருக்கு முடிவு கட்டிநல்லெண்ண சூழ் நிலையில் இன நெருக்கடிக்கான அரசியல் தீர்வை பேச்சின் ஊடாக மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும்.



செத்துப் போன 13 ஆவது திருத்தச் சட்ட மூலத்தை அரசு தூக்கிப்பிடித்து சர்வகட்சி மாநாடு என்று பாதிக்கப்பட்ட மக்களின் பிரதிநிதிகள் அழைக்கப்படாத அசாத்தியமான அர்த்தமற்ற மாநாட்டை கார ணம் காட்டி காலத்தை கடத்துவதும் உடன் நிறுத்தப்பட வேண்டும்.

தமிழர் பிரச்சினைகள் இன்று சர்வதேசமயப்பட்டுவிட்டது. எனவே சர்வதேச ஒழுங்கு பிரமாணங்களின் அடிப்படையில் இப்பிரச்சினைக்கு தீர்வு காணப்படவேண்டும்.

**நிபந்தனையின்றிப் பேச்சை ஆரம்பிக்குக**

எனவே இந்த நெருக்கடியான சூழ் நிலையில் அரசுக்கு நாம் அவசரமான அழைப்பை விடுகின்றோம். அதாவது தமிழர் தரப்பு முன்வைத்த இடைக்கால தன்னாட்சி அதிகார சபை திட்டத்தின் அடிப்படையில் நிபந்தனையற்ற முறையில் காலத்தை இழுத்தடிக்காது, பேசசுகளை உடன் ஆரம்பிக்கும் படி வேண்டுகோள் விடுக்கின்றோம்.

எமது வேண்டுகோளை நிராகரித்து காலத்தை இழுத்தடித்து, எமது மக்களின் துயர வாழ்வை நீடித்து செல்ல அரசு முற்படுமானால் நாம் எமது சுதந்திர போராட்டத்தை முன்னெடுத்து செல்வதைத் தவிர எமக்கு வேறு வழியில்லை என்பதையும் இதை உலக நாடுகளும் புரிந்துக் கொள்ள வேண்டுமெனவும் இங்கு வலியுறுத்த விரும்புகிறேன். - என்றார். (சி)

## உரு பிராய் தெற்கில் தங்கநகைகள் கண்டெடுப்பு

யாழ்ப்பாணம்,ஓக.14

உரும்பிராய் தெற்கு ஜே/265 கிராம அலுவலர் பிரிவில் பொதுமக்களால் கண்டெடுக்கப்பட்ட தங்க நகைகள் சில கிராம அலுவலரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

உரியவர்களைத் தகுந்த ஆதாரம் காட்டிப் பெற்றுக் கொள்ளுமாறு கிராம அலுவலர் செ.செல்வச்சந்திரன் கேட்டுள்ளார்.

உரும்பிராய் சந்திக்கும் கற்பகப் பிள்ளையார் கோயிலுக்குமிடையில் கண்டெடுக்கப் பட்ட நகைகளே கிராம சேவகரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. (202)

## பூரணை விழாவும் ஜெயந்தி விழாவும்

யாழ்ப்பாணம்,ஓக.14

கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண சமிதியினர் நடத்தும் பூரணை விழாவும் சுவாமி நிரஞ்சனானந்த ஜெயந்தி விழாவும் நாளை மறுதினம் சனிக்கிழமை மாலை 5.30 மணிக்கு சமிதி மண்டபத்தில் நடைபெறவுள்ளன. (202)

## கல்வியாளர்கள் கௌரவிப்பு

மானிப்பாய்,ஓக.14

வட்டு.யாழ்ப்பாணக் கல்லூரியில் 25 ஆண்டுகள் கல்விப் பணியாற்றிய 5 கல்வியியலாளர்கள் வட்ட மேசை கழகத்தினரால் கௌரவிக்கப்பட்டனர்.

வட்ட மேசை தலைவர் சிரேஷ்ட ஆசிரியர் ஏ.டி.அதிசயதாசன் தலைமையில் கௌரவிப்பு விழா அண்மையில் இடம் பெற்றது.

ஆரம்பக் கல்வி மேற்பார்வையாளர் வண.ஜி.நடராஜா, ஜெ.மித்திரரஞ்சன், திருமதி. எஸ்.ஜெ.தேவசகாயம், திருமதி எஸ்.யசோதரன், என்.யோகராஜா ஆகியோரே பாராட்டப்பட்டு பரிசில் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். (202-95)

# வெள்ளைக்கல் காட்டுப்பகுதிக்கு செல்லவேண்டாம் என்று அம்பாறை வாழ் தமிழர்களுக்குப் புலிகள் அறிவுறுத்து

அம்பாறை,ஓக13

அம்பாறை மாவட்டத்தில் காட்டுப் பகுதி எல்லையில் உள்ள வெள்ளைக்கல் என்ற பகுதிக்குள் அடங்கும் பல பகுதிகளுக்குச் செல்லவேண்டாம் என்றும் -

அப்பகுதிகளில் நிலைகொண் டுள்ள படையினர் தமிழர்களைப் பலிக்கடாக்கள் ஆக்க முயல்கின் றனர் என்றும் -

தமிழீழ விடுதலைப் புலிகளின் அம்பாறை மாவட்ட அரசியல் துறை அறிவுறுத்தியுள்ளது.

அம்பாறை மாவட்டத்தின் தமது பிரசன்னத்தையும் செயற் பாடுகளையும் விளக்கி விடுத்த நீண்ட அறிக் கையிலேயே அம்பாறைத் தமிழ் மக்களுக்கான மேற்கண்ட அறிவித்தலும் அடங்கியுள்ளது.

அந்த அறிக்கையின் சில பகுதி கள் வருமாறு:-

கடந்த ஒரு வருடத்துக்கும் மேலாக சிறிலங்கா அரச படைகள் இருபதுக்கும் மேற்பட்ட தடவைகள் பாரிய படைகளைக் குவித்து, பெருமெடுப்பிலான படை நடவடிக்கைகளை மேற்கொண்டு, பல நூற்றுக் கணக்கான பகுதி நடவடிக்கை அணிகளை களமிறக்கியும் விடுதலைப்புலிகளை அழித்து விடுவதற்காக மேற்கொள்ளப் பட்ட நடவடிக்கைகள் அனைத்தையும் பல்வேறு நெருக்கடிக ளுக்கு மத்தியிலும் புலிகள் எதிர்கொண்டு வந்தனர்.

படையினரை பொறிவெடிக ளில் சிக்க வைத்தும், அதிரடித் தாக்குதல்களை மேற்கொண்டும் பல சிறிலங்காப் படையினரை அழித்துமுள்ளனர். களமிறக்கப் பட்ட தமது படைகளால் எதையுமே சாதிக்க முடியாத நிலை கண்ட சிறிலங்கா படைத் தலைமை, படையியல் நோக் கத்தை மட்டுமே நோக்காகக் கொண்டு தமிழீழ மக்களை மனித கேடயமாக பயன் படுத்தி -

வன்னேரிக்குளம், வேப்பை யடிக் குளம், ரூபஸ் குளம், கஞ்சிக் குடிச்சாறு குளம், தங்க வேலாயுத புரம், உடும்பன் குளம் ஆகிய பகுதிகளில் படைகளை நிலை நிறுத்தி எமது நடவடிக்கைகளை கட்டுப் படுத்தி எம்மை அழித்துவிடலாம் என்ற நப்பாசையில் தமிழ் மக்களைப் பலிக்க டாக்கள் ஆகியுள்ளனர்.

ஆகையால் -

வெள்ளைக்கல் என அழைக் கப்படும் பகுதிக்கு உள்ளிருக்கும் வேட்டையடிக் குளம், வன்னேரிக்குளம் ஆகிய வனப்பகுதிகளுக்கோ வயல் பகுதிகளுக்கோ பெரிய தளவாகுளம், கூதைக்குளம் மற்றும் கஞ்சிக்குடிச்சாறு பாடசாலை, தங்கவேலாயுதபுரம், கேணிக்குளம், கோமாரி, ஆலங்குளம், ஊரணி, செம்மடுக்குளம், சொட்டைக் குளம், செங்காமக்குளம் ஆகியவற்றின் புறமாக உள்ள வனப்பகுதிக்கோ வயல்பகுதிக்கோ எத்தேவை கருதியும் அம்பாறை வாழ் பொதுமக்களை வர வேண்டாம் என்று உங்களின் பாதுகாப்புக் கருதிவேண்டிக் கொள்கிறோம்.

எமது தாக்குதல்களில் சிறப்பு அதிரடிப் படையினர் இழப்புக்களை சந்திக்கும் போதெல்லாம் பழி தீர்க்கும் நோக்குடன் - தழிழன் என்ற ஒரே காரணத்திற்காக- அப்பாவி தமிழ்மக்கள்மீது தாக் குதல்களை நடத்துவதுடன் அப்பாவி தமிழர்கள் தாக்கப்படுவ தும், கடத்தப்படுவதும், கொலை செய்யப்படுவதும் தொடர் கதையாக நடந்து வருகிறது.

ஆகவே, சிறிலங்கா அரச படைகளை நாம் இலக்கு வைக்கும் போது இப்பகுதிகளுக்குள் வந்து தாங்கள் சந்திக்கும் இழப்புகளுக்கு நாங்கள் பொறுப்பாளிகள் அல்ல என்பதையும் அறியத்தரு கிறோம்.

பேரினவாதப் படைகளுடன் இணைந்து நின்று களங்கப்படுத்தும் தேசத்துரோகிகளின் செயல்களுக்கு அடிபணிந்து போகாது உரிமை குரல் கொடுத்து தமிழீழ விடுதலைப் போருக்கு தோள் கொடுங்கள் – என்று உள்ளது. (அ)

## நேற்றைய (13.08.2008) உதயனில் வெளியான ஆசிரியர் அ.லோகநாதன் தயாரித்த இரசாயனவியல் பகுதி Iக்கான விடைகள்

| | | | | |
|---|---|---|---|---|
| (01) 4 | (02)5 | (03) 5 | (04) 4 | (05)5 |
| (06)2 | (07)3 | (08) 5 | (09)0.215g | (10)3 |
| (11)2 | (12)3 | (13) 5 | (14)3 | (15)5 |
| (16) 4 | (17)5 | (18)4 | (19) 3 | (20) 5 |
| (21) 4 | (22)4 | (23) 3 | (24)3 | (25) 3 |
| (26) 4 | (27)2 | (28) 4 | (29) 5 | (30)2 |
| (31) 4 | (32)3 | (33) 3 | (34) 4 | (35) $3 \times 10^5$ |
| (36)3 | (37) open | (38) 5 | (39) 2 | (40) 5 |
| (41) 5 | (42)1 | (43)5 | (44)5 | (45)5 |
| (46)1 | (47)5 | (48)3 | (49) 3 | (50)5 |
| (51)3 | (52)4 | (53)5 | (54) 4 | (55)3 |
| (56)5 | (57)3 | (58)1 | (59)3 | (60)1 |



யாழ்.பிரதேச செயலக கலாசார பேரவையின் ஏற்பாட்டில் பாவையூர் புலவர் அமரர் ஆ.தெ.[illegible]சிங்கத்தின் 'தண்டமிழ் தண்டலை' நூல் அறிமுகவிழா கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது. நிகழ்வில் யாழ்.பிரதேச செயலர் ம.ஜெகூ, எழுத்தாளர் செ.[illegible] ஆகியோர் உரையாற்றுவதை முதல் மூன்று படங்களிலும் காணலாம். நிகழ்வில் கலந்து கொண்டவர்களில் ஒரு பகுதியினரை நான்காவது படத்திலும் காணலாம்.

(படங்கள்: லக்ஸ்மன்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# இலங்கைத் தமிழர் விவகாரத்தில் ஆருடம் கூறும் நாராயணர்கள்

'அறப் படித்த பல்லி கூழ்ப் பானைக்குள் வீழ்ந்ததாம்!' என்றொரு பேச்சுமொழி நம் மத்தியில் உண்டு. கூரை விட்டத்திலிருந்தபடி பலருக்கும் எதிர்காலம் குறித்துச் சாத்திரம் சொல்லிக்கொண்டிருக்கும் பல்லி, தனது எதிர்காலம் குறித்து சிந்திக்காமல் இருந்துவிட்டு, விட்டத்திலிருந்து தவறுதலாகக் கூழ்ப் பானைக்குள் விழுந்து இறந்துபோனதாம் என்ற பேச்சு வழக்குக் கதைபோல இவ்வாறு கிண்டலாகக் கூறப்படுகின்றது.

இதுபோலவே இலங்கை விவகாரத்தில் இலங்கை அரசுக்குப் புரியாத விடயம் என்று குறிப்பிட்டு ஓர் ஆலோசனையை - போதனையை - வெளிப்படுத்தும் இந்தியத் தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே. நாராயணன், தாம் கூறும் அதே கருத்துத் தமக்கும் புரியாதமை போல நடந்து கொள்வதுதான் விநோதமாக இருக்கின்றது.

மற்றவர்களுக்கு ஆரூடம் கூறும் பல்லி, தனக்கு ஆரூடம் பார்க்க முடியாமல் - இயலாமல் - கூழ்ப்பானைக்குள் விழுந்து இறந்தமைபோல இருக்கின்றது ஈழத் தமிழர் பிரச்சினை தொடர்பாக இலங்கை அரசுக்கு ஆலோசனை கூறும் இந்தியா, அந்த ஆலோசனையின் தாற்பரியத்தைத் தானே புரிந்து கொள்ளாமல் செயற்படுவது.

இலங்கை இனப்பிரச்சினையோடு நீண்டகாலம் சம்பந்தப்பட்டவர் எம்.கே.நாராயணன்.

விடுதலைக்கான ஆயுதப் போராட்டம் ஒன்றுக்கு முழுத் தயாரான அரசியல் சூழ்நிலையை ஈழத் தமிழினம் எட்டுவதற்கு முன்னரே, தமிழ் இளைஞர்களை இந்தியாவுக்குத் வருவித்து, மறைமுகமாக அவர்களுக்கு ஆயுதப் பயிற்சி அளித்து, அவர்களைக் கொண்டு ஒருபுறம் கொழும்பு அரசுக்கு எதிராக வன்முறைச் செயற்பாடுகளுக்குத் தூண்டிவிட்டுக் கொழும்பைக் குழப்பிக் கொண்டு, மறுபுறம் தமிழ் இளைஞர்களைப் பல்வேறு இயக்கங்களாகத் துண்டுபட வைத்து, அவற்றுக்குள் முரண்பாடுகளை ஏற்படுத்தி, அவற்றில் ஒன்று கூட விஞ்சிய போராட்ட கட்டமைப்பாக மேலெழும்ப விடாமல் குழப்புகின்ற செயற்பாட்டுத் திட்டத்தையே 1980 களின் நடுப்பகுதியில் புதுடில்லி கைக்கொண்டது. அச்சமயம் இந்தத் திருகுதாளப் பணிக்குப் பொறுப்பான - உளவு அமைப்பின் - தலைவராகச் செயற்பட்டவர் இந்த நாராயணன்தான்.

இப்படி இலங்கை இனப்பிரச்சினை ஆயுதப் போராட்ட வடிவத்தை நோக்கித் திரும்பிய காலகட்டம் முதல் இவ்விடயத்துடன் நேரடியாகவும், மறைமுகமாகவும் சம்பந்தப்பட்ட அவர், இந்தப் போராட்டத்தின் போக்குக் குறித்தும், தாற்பரியம் குறித்தும் கருத்தும் ஆரூடமும் கூற முற்றிலும் பொருத்தமானவரே. ஆனால் தாம் கூறும் தாற்பரியத்தின் - உண்மையின் - யதார்த்தத்தைத் தாமே புரியாதவராக அவர் செயற்படுவதுதான் குளறுபடித்தனமாகும்.

"புலிகளுக்கு எதிரான மோதல்களில் இலங்கை அரசபடைகள் வெற்றி பெறலாம். எனினும், ஈழத் தமிழர்கள் அரசுப் பக்கம் இல்லாததால் அரசினால் யுத்தத்தில் வெல்ல முடியாது" - என்று கூறியிருக்கின்றார் இந்தியத் தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் நாராயணன்.

அவரின் அந்தப் பேட்டியின் வாசகங்கள் இரண்டு விடயங்களில் தீர்க்கமான - முடிவான - கருத்து நிலைப்பாட்டில் அவர் இருக்கின்றமையை வெளிப்படுத்துகின்றன.

ஒன்று - இலங்கை இனப்பிரச்சினை தொடர்பாக நியாயமான அரசியல் தீர்வு ஒன்றைத் தரும் எண்ணப்பாடோ, பற்றுறுதியோ, திடசங்கற்பமோ சிங்கள அரசுத் தலைமைக்கு இல்லை என்பதில் தமிழர்கள் தெளிவாக இருக்கின்றார்கள். அதனால் அவர்கள் இலங்கை அரசுப் பக்கத்தில் இல்லை.

மற்றது - ஈழத் தமிழர்கள் இலங்கை அரசுப் பக்கத்தில் இல்லாத காரணத்தினால் அரச துருப்புகள் மோதல்களில் வெற்றி பெற்றாலும் யுத்தத்தில் வெற்றி பெறமுடியாது.

இலங்கை நிலைவரத்தை மதிப்பாய்வு செய்து, இந்த இரண்டு கருத்து நிலைப்பாட்டையும் தெரிவிக்கும் தகுதியும் தரமும் உடையவர் நாராயணன் என்பதில் கருத்து வேறுபாடு இருக்க முடியாது.

ஆனால் -

தமக்கு நீதியான அதிகாரப் பகிர்வு ஒன்றை இலங்கை அரசுத் தலைமை தரமாட்டாது என்ற கருத்து நிலையில் ஈழத் தமிழர்கள் உள்ளனர் என்ற யதார்த்தத்தை அப்பட்டமாக வெளிப்படுத்திப் போட்டுடைக்கும் அவர், தமிழர்களுக்கு நீதியான அரசியல் தீர்வு ஒன்றை மஹிந் தரின் தற்போதைய அரசுத் தலைமை வழங்கும் அல்லது வழங்காது என்ற நம்பிக்கை தமது புதுடில்லி அரசுக்கு உள்ளதா அல்லது இல்லையா என்பதை மட்டும் பகிரங்கமாக வெளிப்படுத்தவேயில்லை என்பது கவனிக்கத்தக்கது.

ஈழத் தமிழர்களை ஆயுத ரீதியில் - பலாத்காரம் மூலம் - அடக்கி, ஒடுக்கி, அடிமைப்படுத்தும் பேரினவாத ஆக் கிரமிப்பும் மேலாதிக்கச் சிந்தனைத் திட்டமும் மட்டுமே தற்போதைய சிங்கள அரசுத் தலைமையிடம் உள்ளது என்றும்-

நீதி, நியாயமான அரசியல் தீர்வு ஒன்றைத் தமிழர்களுக்கு வழங்கும் சிந்தனைப் போக்கே கொழும்பு அரசுக்குக் கிஞ்சித்தும் கிடையாது என்றும் -

ஈழத் தமிழினத்தின் பிரதிநிதிகள், நாராயணன் உட்பட்ட இந்திய அரசுத் தலைமையிடம் தொடர்ந்து வற்புறுத்தலாகச் சுட்டிக்காட்டி வருகின்றனர்.

கொழும்பின் அத்தகைய ஆக்கிரமிப்பு, அராஜக அத்துமீறல் போக்குக் குறித்து ஈழத் தமிழர்கள் தொடர்ந்து முறைப்பாடு செய்யும்போது, அதை செவிமடுத்துக் கொண்டு, உருப்படியான பதில் நடவடிக்கை எதுவும் எடுக்காமல் வாளாவிருந்துவிட்டு, இப்போது ஈழத் தமிழினம் சுட்டிக்காட்டிய உண்மைகளைத் தாமும் (நாராயணனும்) ஒருதரம் மந்திரம் போல திருப்பி உரக்கக் கூறுவதில் அர்த்தமில்லை.

ஈழத் தமிழினத்துக்கு நியாயம் செய்ய முடியாத - விரும்பாத - தலைமையே கொழும்பு அரசு என்பதை உணர்ந்த பின்னரும், அந்த விடயத்தில் கொழும்பைச் சரியான வழியில் வழிப்படுத்தும் தார்மீக ரீதியான பொறுப்பிலும், கடமையிலும், அதிகாரத்திலும் இருக்கும் ஒருவர், இப்படி வெளியாளாக நின்று வெறும் 'ஆரூடம்' கூறுவதும் அபத்தமே. அதையும் விட இவ்விடயத்தில் இலங்கையைச் சரியாகச் செயற்பட வைக்கும் வழிக்கு நெட்டித்தள்ள நடவடிக்கை எடுப்பதே இந்தியாவின் நியாயமான செயற்பாடாக இருக்க முடியும். புதுடில்லி நாராயணர்களுக்கு இது புரியுமா?

## வலி. கிழக்குப் பிரதேச முன்பள்ளி ஆசிரியர்களுக்கு பயிற்சிநெறி இன்று

கோப்பாய், ஓக.14

நனதீபனி முன்பள்ளிஆசிரியர் பயிற்சி வேலைத்திட்டத்தின் அடிப்படையில் வலி.கிழக்குப் பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட முன்பள்ளி ஆசிரியர்களுக்கான பயிற்சி நெறி இன்று வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு சிறுப்பிட்டி பொதுநோக்கு மண்டபத்தில் வலி. கிழக்கு உதவிப் பிரதேச செயலர் செல்வி.எஸ். பிரேமினி தலைமையில் இடம்பெறவுள்ளது. (202-70)

## வலி.கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் 'நியாப்' திட்டத்திற்கு 3 கிராமங்கள் தெரிவு

கோப்பாய், ஓக.14

வலி.கிழக்கு பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட பகுதியில் 'நியாப்' மீள் எழுச்சி திட்டத்தின் கீழ் 3 கிராமங்கள் தெரிவு செய்யப்பட்டு பல்வேறு வேலைத்திட்டங்கள் நேற்று முதல் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்தில் ஆவரங்கால் கிழக்கு பொக்கணைமணல் பகுதி கிராமம், இருபாலை கிழக்கு மடத்தடி வசந்தபுரம் கிராமம், உரும்பிராய் கிழக்கு யூலன் கிராமம் ஆகியன தெரிவு செய்யப்பட்டுள்ளன.

ஒவ்வொரு கிராமத்திற்கும் தலா 60 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

30 இலட்சம் ரூபா உட்கட்டுமான வசதிகளான வீதிப் புனரமைப்பு, கிணறு போன்ற திட்டங்களுக்கும் மிகுதி 30 இலட்சம் ரூபா பல்வேறு சுயதொழில் முயற்சிக்கான கடன் திட்டங்களுக்கும் ஒதுக்கப்பட் டுள்ளதாக பிரதேச செயலக உதவித்திட்டப் பணிப்பாளர் தெரிவித்தார். (202-72)

## கொக்குவில் ஆடியபாதம் வீதியில் மின்மாற்றி எரிந்து சேதம்

யாழ்ப்பாணம், ஓக.14

கொக்குவில் ஆடியபாதம் வீதியில் அம்மன் வீதிச் சந்திக்கு அருகாமையில் பொருத்தப்பட்டு இருந்த மின்மாற்றி எரிந்து சேதமடைந்தது.

இதனால் கொக்குவில் பகுதி கடந்த செவ்வாய்க்கிழமை இரவு இருளில் மூழ்கியது.

இச் சம்பவத்திற்கு விசமச் செயல் காரணமாக இருக்கலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

மின்மாற்றியின் கீழ்பகுதியில் ரயர்கள் எரிந்த நிலையில் காணப்பட்ட தடயங்கள் இருந்ததாகப் பொது மக்கள் தெரிவித்தனர்.

எரிந்த மின் மாற்றியை திருத்தும் பணியில் மின்சார சபையினர் ஈடு பட்டனர்.படையினர் பொதுமக்களின் உதவியுடன் அந்தப் பகுயில் துப்புரவுப் பணியை மேற்கொண்டனர்.

மின் மாற்றியின் வடக்குப் பகுதியில் பற்றைகள் நிறைந்த வளவுகள் இளைஞர்களின் உதவியுடன் துப்பரவு செய்யப்பட்டு வருகிறது. (202-302)

## விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஓக.14

வலிகாமம் மேற்கு பிரதேச சபை, உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு நடத்தும் விளையாட்டுப்போட்டி இன்று வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு தொல்புரம், வழக்கம்பரை திறந்தவெளி அரங்கில் நடைபெறவுள்ளது.

பிரதேச சபைச் செயலாளர் சு. புத்திசிகாமணி தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி மதுமதி வசந்தகுமார் கலந்து கொள்வார். (202)

* * *

யாழ்ப்பாணம், ஓக.14

யாழ்.எவர்சைன் சிறுவர் உலகத்தின் விளையாட்டு விழா நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

நிறுவன இயக்குநர் திருமதி ச. ஜெயபாலசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்விற்குப் பிரதம விருந்தினராக யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் கலந்து கொள்வார். (202)

* * *

வலி.வடக்கு, ஓக.14

யாழ்.மாவட்ட தாச்சி விளையாட்டுச் சங்கம் யாழ்ப்பாணம் வர்த்தக வங்கி, இலங்கை வங்கி என்பவற்றின் அனுசரணையுடன் 13 ஆவது ஆண்டாக நடத்திவரும் லீக் முறையிலான தாச்சி சுற்றுப் போட்டியில் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு தாவடி காளியம்பாள் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெறும் ஆட்டத்தில் மோதவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:-

* அளவெட்டி பாரதி வி.க. எதிர் தாவடி காளியம்பாள் வி.கழகம். (86)

* * *

வலி.வடக்கு, ஓக.14

வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் அராலி வடக்கு ஐக்கிய விளையாட்டுக் கழகம் நடத்தும் 07 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு அராலி ஐக்கிய விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் கலந்து கொள்ளவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு:-

* அராலி செனிஸ்ரார் வி.க.'எ' அணி எதிர் அராலி திருமகள் வி.க. 'பி' அணி.

* அராலி ஜேம்ஸ் வி.க 'எ' அணி எதிர் நவாலி சென்.பீற்றர்ஸ் வி.க .'பி' அணி. (202-86)

## மீசாலை கிழக்கு கிராம சேவகர் பிரிவில் நிரந்தர கிராம சேவையாளரை நியமிக்குக

### அப்பகுதி மக்கள் அரச அதிபரிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஓக.14

மீசாலை கிழக்கு ஜே/318 கிராம சேவகர் பிரிவுக்கு நிரந்தரமாக கிராம சேவையாளர் ஒருவரை நியமிக்குமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மகஜர் மூலம் அரச அதிபரிடம் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளனர்.

அதில் கூறப்பட்டுள்ளதாவது:-

இந்தப் பிரிவில் கடமையாற்றி வந்த கிராம சேவையாளர் ஓய்வுபெற் றதை அடுத்து தற்போது தற்காலிக மாக ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

750 க்கும் மேற்பட்ட குடும்பங் கள் உள்ள இக் கிராமத்திற்கென நிரந்தரமாக கிராம சேவையாளர் இல்லாமை பெரும் நெருக்களுக்கு ஏற்ப டுத்துவதாகக் கூறப்படுகிறது.

எனவே இந்த விடயத்தை உரியவர்கள் கவனத்தில் எடுத்து இதற்கான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தற்காலிகமாக நியமிக்கப்பட்டுள்ளவர் வெளியிடத்தை சேர்ந்தவர் எனவும் இதனால் முழு நேரமும் அவரால் கடமைபுரிய முடியாதுள்ளது- என்றுள்ளது (203)

## கோப்பாயில் பல்வேறு அபிவிருத்திப் பணிகளுக்கு நாற்பத்திரண்டு லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு

கோப்பாய், ஓக.14

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவின் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களுக்கு நாடாளுமன்ற உறுப்பினர்களின் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் 42 லட்சத்து 25 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக பிரதேச செயலர் தெரிவித்தார்.

இதனடிப்படையில் 39 திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. தற்போது பெண்களுக்கான சுயதொழில் முயற்சிக்கென இப்பிரதேசத்தின் மகளிர் கிராம அபிவிருத்திச் சங்கத்திற்கு 14 தையல் இயந்திரங்கள் கொள்வனவு செய்யப்பட்டு வழங்கப்பட்டுள்ளன.

மேலும் சனசமூக நிலையத்திற்கு நூல் கொள்வனவு, விளையாட்டு உபகரணக் கொள்வனவு, தளபாட திருத்தம் போன்ற வேலைத்திட்டங்களுக்கும் நிதி வழங்கப்பட்டுள்ளதாகவும் பிரதேச செயலர் மேலும் தெரிவித்தார். (202-72)

## மோட்டார் சைக்கிள் விபத்தில் ஆசிரியை உட்பட இருவர் படுகாயம்

வலி.வடக்கு, ஓக.14

மோட்டார் சைக்கிள்கள் நேருக்கு நேர் மோதிக் கொண்டதில் இளம் ஆசிரியை படுகாயமுற்று ஆபத்தான நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று நண்பகல் 11 மணியளவில் நல்லூர், செம்மணி வீதியில் அமைந்துள்ள யாழ்ப்பாணம் கல்வி வலய அலுவலகத்தின் முன்னால் இந்த விபத்து இடம்பெற்றது.

திருநெல்வேலி செங்குந்தா இந்துக் கல்லூரி ஆசிரியையும் இருபாலையில் வசிப்பவருமான க. முருகேஸ்வரி(வயது 34) என்பவரே படுகாய முற்ற நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ஆசிரியையின் மோட்டார் சைக்கிளுடன் மோதுண்ட மற்றைய மோட்டார் சைக்கிளில் சென்றவரும் படுகாயங்களுடன் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளார். (202-86)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஓக.14

யாழ்.பல்கலைக்கழக விளையாட்டு விஞ்ஞான மாணவர் ஒன்றியத்தின் கலந்துரையாடல் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு விரிவுரை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (202)

## நாளை

| | |
|---|---|
| ஆடி31 | 15.08.2008 வெள்ளிக்கிழமை |
| திதி: | சதுர்த்தசி பின்னிரவு 02.43 |
| நட்சத்திரம் : | உத்தராடம் |
| [illegible] | பி.ப. 01.21 வரை |
| [illegible] | 06.35 - 07.35 |
| ராகுகாலம் : | 10.35 - 12.05 |

## 20 மாதங்களாக மீன்பிடிக்க அனுமதியின்றி செட்டிபுலம் மீனவர்கள் பெரும் அவலத்தில்

மானிப்பாய், ஓக.14

கடந்த 20 மாதங்களுக்கு மேலாக செட்டிபுலம் கடற் பகுதியில் மீனவர்கள் மீன்பிடிக்க அனுமதிக்கப்படவில்லை.

இதனால் செட்டிபுலத்தை சேர்ந்த மீனவர்கள் வருமானம் இன்றிப் பொருளாதார ரீதியில் பாதிப்புற்று நலிவுற்றுள்ளனர். இவர்களுக்கு உதவ அரச மற்றும் சர்வதேச தொண்டு நிறுவனங்கள் முன்வர வேண்டும்.

இவ்வாறு செட்டிபுலம் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க தலைவர் மார்க்கண்டுதாசன் கோரியுள்ளார்.

அவர் மேலும் இது தொடர்பாகத் தெரிவிக்கையில்:

எமது பிரதேச அபிவிருத்தி தொடர்பான பிரதேச செயலர், அரசாங்க அதிபர்வரை கொண்டு சென்றுள்ளோம்.

ஆனால் முழுமையான அபிவிருத்திக்கு உதவிகள், கடற்றொழில் செய்யக் கூடிய ஏனைய பகுதிகளுக்கு சென்று கடற்றொழில் செய்வதற்கும் கடற் றொழில் வள்ளங்கள், வலைகள், படகு இயந்திரங்கள் என்பன எமக்கு வழங்க வேண்டும்-என்றார்.

இதேவேளை செட்டிபுலம் கிராம அபிவிருத்தி தொடர்பாகவும் கடற்றொழில் பாதிப்பு குறித்தும் இதுவரை 3 மகஜர்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (202-95)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூடுவிழாக் கண்ட பின்னும் முளைத்தெழுந்த மாரீசன்கூடல் சுப்பிரமணிய வித்தியாசாலை


பாடசாலையின் அதிபர் திருமதி ஸ்ரீபத்மாவதி விக்னேஸ்வரராசா

இப்பாடசாலை 1992ஆம் ஆண்டு இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகள் காரணமாக இடம்பெயர்ந்து சென்று மானிப்பாயில் இயங்கியது. இக்காலகட்டத்தில் இப்பாடசாலை பல பாடசாலைகளுடனும் இணைக்கப்பட்டே செயற்படுத்தப்பட்டது.

1995ஆம் ஆண்டு வலிகாமத்தில் நிகழ்ந்த இடப்பெயர்வின்போது இடம் பெயர்ந்து சென்று, ஒருங்கிணைக்கப்பட்டு, ஏனைய பாடசாலைகளுடன் இணைந்து இயங்கி வந்தது.



பாடசாலை முகப்புத் தோற்றம்

1997ஆம் ஆண்டில் இடம்பெயர்ந்த மக்கள் வலிகாமம் பகுதியில் மீண்டும் குடியேறத் தொடங்கியபோது இப்பாடசாலை முழுமையாக மூடப்பட்டது. பின்னர் இப் பிரதேச மக்கள் எடுத்த தொடர்ச்சியான நடவடிக்ஷைகள் காரணமாக இப்பாடசாலை




2001ஆம் ஆண்டு முதல் மீளவும் இயங்கத் தொடங்கியுள்ளது.

இளவாலை மாரீசன்கூடல் சுப்பிரமணியம் வித்தியாசாலை 1930ஆம் ஆண்டு சைவ வித்தியாவிருத்திச் சங்கமும், சூழலில் இருந்த அயலவர்களும் இணைந்து உரு வாக்கிய பாடசாலையாகும்

1961ஆம் ஆண்டு அரசாங்கத்தினால் பொறுப்பேற்கப்பட்டு தற்போது அரச பாடசாலையாக இயங்கி வருகின்றது. மிகவும் பின்தங்கிய கஷ்டப் பிரதேசத்தில் இயங்கி வரும் இப்பாடசாலை இன்றுவரை பாரிய பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருகின்றபோதிலும் கற்றல் செயற்பாட்டில் ஆக்கபூர்வமான பங்களிப்பை வழங்கி வருகின்றது.

பாடசாலையின் அதிபர் திருமதி ஸ்ரீபத்மாவதி விக்னேஸ்வரராசாவுடன் உரையாடியபோது பாடசாலை தொடர்பான பல விடயங்களை அறியமுடிந்தது.

தரம் ஒன்று முதல் தரம் ஐந்து வரையான வகுப்புகளைக் கொண்டுள்ள இப்பாடசாலையில் 116 மாணவர்களும், அதிபருடன் சேர்த்து ஆறு ஆசிரியர்களும் காணப்படுகிறார்கள்.

தற்போது தரம் 5 வரையே வகுப்புகள் இடம்பெற்று வருகின்றன.

இப்பாடசாலையில் தரம் 5இல் கல்வி கற்று இடைநிலைக் கல்விக்காக வேறு பாடசாலைக்குச் செல்லும் மாணவர்கள் பாடசாலைக் கல்வியில் இருந்து இடைவிலகும் துர்ப்பாக்கிய நிலைமை காணப்படுகின்றது. இந்நிலைக்கு பல்வேறு காரணங்கள் சுட்டிக்காட்டப்படுகின்றன.

இடைநிலைக் கல்வியை கற்கவேண்டுமாக இருந்தால் சுமார் மூன்று கிலோமீற்றர் தூரத்திற்கு அப்பால் சென்றே பாடசாலையில் கல்வி கற்க வேண்டும். இந்தப் பகுதிகளிலிருந்து மாணவர்கள்தூர இடங்களுக்கு கல்வி பயிலச் செல்வதற்கான போக்குவரத்து வசதிகள் இப்பிரதேசத்தில் இல்லையென்றே கூறலாம். இலங்கை போக்குவரத்துச் சபையின் பஸ் சேவை அறவே இடம்பெறுவதில்லை.

தனியார் மினிபஸ் சேவையே இப்பகுதி மாணவர்களுக்குக் கிட்டுகின்றது. அதுவும் கூட குறிப்பிட்ட நேரங்களுக்கு மட்டுமே. இந்தப் பாடசாலையின் சுற்றாடலிலும் அயல் கிராமங்களிலும் வாழும் மக்கள் பொருளாதார ரீதியாகப் பின்தங்கியவர்களாகக் காணப்படுகிறார்கள்.

ஆகையினால் மீண்டும் இப்பாடசாலையில் தரம் எட்டு வரையான வகுப்புகளை நடத்த கல்வித்திணைக்களம் நடவடிக்கை எடுக்கவேண்டுமெனப் பாடசாலைச் சமூகத்தினரும் பிரதேச மக்களும் எதிர்பார்க்கின்றனர். இதன்மூலம் இடைநிலை வகுப்புகளுக்கு செல்லாமல் இடைவிலகும் நிலை மாணவர்களுக்கு ஏற்படாத நிலையை உருவாக்க முடியும்.

2001ஆம் ஆண்டு 10 பிள்ளைகளுடன், அதிபரோடு ஏழு தொண்டர் ஆசிரியர்களுமே பாடசாலை மீள ஆரம்பிக்கப்பட்டபோது இருந்தனர். 2002, 2003ஆம் ஆண்டு வரை அதிபரும் அந்த ஓர் ஆசிரியருமே எல்லா வகுப்புப் பிள்ளைகளினதும் கல்வித் தேவையை நிவர்த்தி செய்துவந்தனர்.

2004ஆம் ஆண்டில் பாடசாலைக்கு பிள்ளைகளின் எண்ணிக்கை அதிகரிப்பினைக் கருத்தில்கொண்டு மேலும் சில ஆசிரியர்கள் நியமனம் செய்யப்பட்டார்கள்.

2004ஆம் ஆண்டிலிருந்து கல்வித் திணைக்களம் பாடசாலைக்கு வேண்டிய அனைத்து உதவிகளையும் முழுமையாக வழங்கி வருகின்றது.

2004ஆம் ஆண்டில் சா.தேனுஜா என்ற மாணவி தமிழ்த்தினப் போட்டிகளில் மாகாண மட்டப் போட்டிவரை கலந்து கொண்டு பாடசாலையின் புகழை உயர்த்தியுள்ளார்.

விளையாட்டுப்போட்டிகள் வருடா வருடம் இடம்பெறுகின்றபோதிலும், பாடசா லைக்கென ஒரு நிரந்தர விளையாட்டு மைதானம் இல்லை. ஆனாலும் மாணவர்கள் விளையாட்டிலும் அக்கறை காட்டியே வருகின்றனர்.

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கு மாணவர்கள் ஒழுங்கமைக்கப்பட்ட ஆசிரியர் குழு ஒன்றினால் தயார் செய்யப்பட்டு வருகின்றார்கள். இதன் பயனாக 2005ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் ரவீந்திரா துரந்தரனும், 2006ஆம் ஆண்டு சாந்தகுமார் தேனுகாவும், 2007ஆம் ஆண்டு சச்சிதானந்தம் ஸ்ரீசண்முகாவும் கூடிய புள்ளிகளைப் பெற்றுச் சித்தி அடைந்துள்ளார்கள்.

இந்த வருடம் வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளுக்கு இடையே இடம்பெற்ற சித்திரப் போட்டியில் தரம் 4இல் கல்வி கற்கும் தவராசா ஜான்சி 2 ஆம் இடத்தைப் பாடசாலைக்குப் பெற்றுக்கொடுத்துள்ளார்.

பாடசாலைக்கு வேண்டிய குடிதண்ணீர் வசதியை அருகில் உள்ள முருகமூர்த்தி ஆலயத்தினர் தமது நீர்த்தாங்கியில் இருந்து குழாய்களைப் பொருத்தி செய்து கொடுத்துள்ளது. அத்தோடு உலக உணவுத் திட்டத்திற்கான சமயலறையாக பயன்படுத்த ஒரு மண்டபத்தையும் ஆலயத்தினர் வழங்கியுள்ளனர்.

பாடசாலை இரண்டு திறந்த மண்டபங்களில் இயங்கி வருகின்றது. ஒரு மண்டபத்தில் வகுப்பறைகளுக்குத் தற்காலிக தடுப்புகள் போடப்பட்டுள்ளன. மற்றைய மண்டபத்தில் திறந்தவெளியிலேயே வகுப்புகள் நடத்தப்படுகின்றன.

பெற்றோர்கள் கஷ்டப்பட்டவர்கள் என்பதால் பிள்ளைகளின் தேவையை முழுமையாகப் பூர்த்திசெய்யக்கூடிய வசதி வாய்ப்புகள் குறைவாகவே காணப்படுகின்றது.



தவராசா ஜான்சி

பாடசாலை அபிவிருத்திச் சங்கம் சிறப்பாக இயங்குகின்றது எனினும் பழைய மாணவர் சங்கம் இதுவரை ஏற்படுத்தப்படவில்லை. அதனை அமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பாடசாலைக்கு வேண்டிய சிறுவர் நூல்களை கொள்வனவு செய்வதற்காக சுமார் 75 ஆயிரம் ரூபா வரை இளவாலைப் பொலிஸார் வழங்கியுள்ளனர்.

பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்களுக்கான காலணிகள், பயிற்சிப் புத்தகங் கள் அதிகமாகத் தேவைப்படுகின்றன. இதனை ஈடுசெய்வதில் அரச சார்பற்ற நிறுவனங்களின் உத்வி பாடசாலைக்கு கிடைக்க வேண்டும் எனவும் அதிபரும், ஏனைய ஆசிரியர்களும், மாணவர்களும், பாடசாலைச் சமூகத்தினரும் எதிர்பார்த்திருக்கின்றனர்.

## நெருக்கடிகள், சவால்களுக்கு மத்தியிலும் கல்வியில் சாதனை புரியும் மாணவர்கள்

பவித்திரன்


நவாலி மகாவித்தியாலயத்தில் மாணவர்களுக்குச் சின்னம் சூட்டும் நிகழ்வு பாடசாலை அதிபர் இரா.வசந்தகுமார் தலைமையில் இடம்பெற்றது.

பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட சண்டிலிப்பாய் கோட்டக் கலவி அதிகாரி சி.கந்தசாமி மாணவி ஒருவருக்கு சின்னம் சூட்டுவதைப் படத்தில் காணலாம். (95)


நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட முன்பள்ளிகளுக்கிடையிலான பேச்சுத்திறன் காண் போட்டி - 2008இல் திருநெல்வேலி சிவசக்தி பாலர் பாடசாலை மாணவர்கள் நால்வர் இடங்களைப் பெற்றுள்ளனர்.

ஆங்கிலத்தில் 3ஆம் இடத்தைப் பெற்ற தக்ஷிகுமரன், 2ஆம் இடம்பெற்ற மகாதேவசிவம் சிவசங்கா, தமிழில் 2ஆம் இடம்பெற்ற மதுஷா சிவலிங்கம் 3 ஆம் இடத்தைப் பெற்ற பேரின்பநாயகம் சிவசங்கர் ஆகியோரைப் படத்தில் காணலாம்.


மக்கள் வங்கியின் 47 ஆவது வருட நிறைவையொட்டி சங்கானை மக்கள் வங்கி யினால் மாதகல் சென.ஜோசப் மகாவித்தியாலயத்தில் 'மாணவர் வளர்ச்சிக்கான சிசு உதான அலகு' ஒன்று திறந்துவைக்கப்பட்டபோது அதிபர், ஆசிரியர்கள், மாணவர்களுடன் வங்கி முகாமையாளர் ந.துரைராஜாவும் வங்கி ஊழியர்களும் காணப்படுகின்றனர். (படம்: மு.சந்திரகுமார்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காஷ்மீரில் வன்செயல்கள் உக்கிரம்

## பொலிஸ் வாகனங்கள், கட்டடங்களுக்கு தீ வைப்பு

ஜம்மு, ஓக. 14

காஷ்மீரில் நேற்றுமுன்தினம் பெரியளவில் வன்முறை வெடித்தது. இதனால் கலவரத்தில் ஈடுபட்ட போராட்டக்காரர்கள் மீது பொலிஸார் துப்பாக்கிச் சூடு நடத்தினர். இதில் பெண் ஒருவர் உட்பட 13 பேர் பலியாகினர். 80 பேர் வரை படுகாயமடைந்தனர்.

இதையடுத்து, காஷ்மீர் முழுவதும் பெரும் பதற்றம் நிலவியதால் அப்பகுதி முழுவதுமே ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. காஷ்மீர் பள்ளத்தாக்கு முழுவதும் ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டமை இதுவே முதல்முறை எனத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் இதுதொடர்பாக வெளியான தகவல்கள் வருமாறு-

ஜம்முவில் கடந்த 42 நாள்களாக போராட்டம் நடந்து வருகிறது. போராட்டத்தை எதிர்த்து, ஸ்ரீ நகரில் முஸ்லிம் அமைப்புகள் களத்தில் இறங்கியிருக்கின்றன. இதைத் தொடர்ந்து மாநிலம் முழுவதும் ஊரடங்கு உத்தரவு நேற்றுமுன்தினம் 2ஆவது நாளாக அமுல் படுத்தப்பட்டது.

கடந்த திங்களன்று ஸ்ரீநகரில் நடந்த துப்பாக்கிச் சூட்டில், ஹூரியத் மாநாட்டு கட்சித் தலைவர் ஷேக் அப்துல் அஜீஸ் உள்பட 4 பேர் உயிர் இறந்தனர். இந்தத் துப்பாக்கிச் சூட்டுக்குச் கண்டனம் தெரிவித்து நேற்றுமுன்தினம் முஸ்லிம் அமைப்பினர் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதில் பந்திபுரா மாவட்டம் வாட்லாப் சகர் அருகேயுள்ள அரிபால் என்ற இடத்தில் பொலிஸார் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 3 பேர் அதே இடத்தில் இறந்தனர். மேலும் 8 பேர் காயமடைந்தனர்.

காஷ்மீரில் நேற்றுமுன்தினம் நடந்த வன்முறை. மற்றும் கலவரத்தை அடக்க நடந்த முயற்சியில் 105 பொலிஸார் காயமடைந்தனர். 28 பொலிஸ் வாகனங்கள் எரிக்கப்பட்டன. பொதுமக்கள் தரப்பில் 80 பேர் காயமடைந்தனர்.

போராட்டக்காரர்கள், லக்கன்பூர், ஜோரியான் ஆகிய இடங்களிலுள்ள அரசு கட்டடங்களுக்குத் தீவைத்தனர். 47 அரச வாகனங்கள் எரிக்கப்பட்டுள்ளன. கானசாக், ஆர்.எஸ்.புரா, சம்பா ஆகிய இடங்களிலுள்ள தற்காலிக முகாம்களுக்கு போராட்டக்காரர்கள் தீவைத்து விட்டனர் அந்தப் பகுதியில் உள்ள 9 அரச கட்டடங்களும் எரிந்து நாசமாகின.

காஷ்மீரில் அமைதி ஏற்படாத நிலையில் 14 ஆம் திகதி வரை கல்லூரிகள், பாடசாலைகள் மற்றும் கல்வி நிலையங்களுக்கு விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது. காஷ்மீர் பல்கலைக்கழகப் பரீட்சைகளும் தள்ளி வைக்கப்பட்டுள்ளன.

கடந்த 13 ஆண்டுகளில் காஷ்மீரில் இது போன்ற வன்முறை சம்பவங்கள் நடந்ததில்லை.

இதேவேளை நேற்றுமுன்தினம் பா.ஜ.க. சார்பில் இந்தியா முழுவதும் போராட்டம் நடந்தது. டில்லியில் உள்துறை அமைச்சர் சிவராஜ் பட்டீலின் வீடு நோக்கி பா.ஜ.க. தொண்டர்கள் ஊர்வலமாகச் செல்ல முயன்றனர். இதில் கலந்து கொண்ட பா.ஜ.க. தலைவர்கள் விஜய் கோயல் ஹர்ஷ்வர்தன் உட்பட ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் கைது செய்யப்பட்டனர்.

# உடனடி யுத்த நிறுத்தத்துக்கு ரஷ்ய ஜனாதிபதி உத்தரவு

## மீறப்படுவதாக பரஸ்பரம் குற்றச்சாட்டு

வாஷிங்டன், ஓக.14

"ஜோர்ஜியாவில் உடனடி யுத்த நிறுத்தத்திற்கு, ரஷ்ய ஜனாதிபதி செவ்வாய்க்கிழமை உத்தரவிட்டார். எனினும் சண்டை நிறுத்தப்பட்டு விட்டதா என்பதை ஊர்ஜிதப்படுத்த முடியாதுள்ளது" என்று அமெரிக்க அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளதாக றொய்டர் செய்திச் சேவை தெரிவித்துள்ளது.

"ரஷ்யாவுடன் இணைந்து அமெரிக்கா கடற்படை பயிற்சியில் ஈடுபடவிருந்தது. எனினும் ஜோர்ஜியா மீது இராணுவ நடவடிக்கை எடுத்தமைக்காக, ரஷ்யா மீது அமெரிக்கா அதிருப்தி கொண்டுள்ளது. அதன் வெளிப்பாடாக, அமெரிக்கா தற்போது கூட்டுக்கடற்படைப் பயிற்சியை நிராகரித்து விட்டது" என்றும் தெரிவித்துள்ளார்கள்.

ரஷ்யாவின் தற்போதைய நிலைப்பாடு அமைதிக்கு சாதகமாகவுள்ளது என, இப்பிராந்தியத்துக்கான, வாஷிங்டன் தூதுவர் மெத்தியூ பிரைஷா தெரிவித்துள்ளார். எனினும் இதனை அதிகாரிகள் முற்றும் முழுதாக ஏற்கவில்லை. ரஷ்யாவும் ஜோர்ஜியாவும் யுத்த நிறுத்தப் பிரகடனம் செய்துள்ளன. ஆனால் வாக்குறுதி மீறப்பட்டு வரு வதாக பரஸ்பர குற்றச்சாட்டுக்கள் எழுந் துள்ளன வென அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளார்கள்.

# மினி உலகக் கிண்ணச் சுற்றுப்போட்டி: ஆஸி. - இந்தியா முதல் ஆட்டத்தில்

கராச்சி, ஓக. 14

அடுத்தமாதம் பாகிஸ்தானில் தொடங்க விருக்கும் 'மினி' உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டியில் இந்திய அணி தனது முதலாவது போட்டியிலேயே உலக சாம்பியன் ஆஸ்திரேலியாவை எதிர்கொள்கிறது. இலங்கை அணி இங்கிலாந்துடன் முதல் போட்டியில் மோதுகிறது.

செப்ரெம்பர் 11 ஆம் திகதி இப்போட்டிகள் ஆரம்பமாகும் என முன்னர் அறிவிக் கப்பட்டிருந்தது. எனினும், ஒருநாள் தாமதமாகி 12 ஆம் திகதியே போட்டி தொடங்கும் என்று தற்போது அறிவிக்கப்பட்டிருக்கிறது.

8 நாடுகள் பங்கேற்கும் இதில் 'ஏ' பிரி வில் இந்தியா, ஆஸ்திரேலியா, பாகிஸ்தான், மேற்கிந்தியத்தீவுகள் ஆகிய அணிகளும் 'பி' பிரிவில் தென்னாபிரிக்கா, நியூஸிலாந்து, இலங்கை, இங்கிலாந்து ஆகிய அணிக ளும் இடம்பெற்றுள்ளன. ஒவ்வொரு அணி யும் தத் தமது பிரிவில் உள்ள அணிகளுடன் தலா ஒருமுறை மோதும். இதன் அடிப்படையில் ஒவ்வொரு பிரிவில் இருந்தும் முதல் 2 இடங்களைப் பிடிக்கும் அணிகள் அரை இறுதிக்கு முன்னேறும்.

# சமாதானத்துக்கான ஈடுபாட்டை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செயற்பாடுகள் மூலம் நாங்கள் இதனை நிரூபித்து விட்டோம். துரதிஷ்டவசமாக பிரசார விடயத்தில் நாங்கள் சிறந்த நிலை யில் இல்லை. தமிழ்மக்கள் எம்முடன் இல்லையென்றால் அது எமது பலவீனமே.

**விடுதலைப் புலிகளுடன் பேசவேண்டும் என்று அவர் கூறவில்லை**

நாராயணன் எதிர்மறையாக எதனையும் தெரிவிக்கவில்லை. பயங்கரவாதத்தைத் தோற்கடிக்க வேண்டும். எனினும் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வையே காணவேண்டும் என எமது ஜனாதிபதி தெரிவிப்பதையே நாராயணன் வேறு விதத்தில் தெரிவித்திருக்கிறார் எனத் தாம் கருது கின்றார் என்றும் கோத்தபாய குறிப்பிட்டுள்ளார்.

நாராயணன் இலங்கைக்கு எதிராக எதனையும் தெரிவிக்கவில்லை.

இராணுவம் வெற்றி பெறுகின்றது என அவர் தெரிவித்துள்ளமை முக்கியமானது. இலங்கை அரசு விடுதலைப் புலிகளுடன் பேச்சுகளை மேற்கொள்ளவேண்டும் என அவர் ஒருபோதும் தெரி விக்கவில்லை என் பதும் கவனிக்கத் தக்கது.

இவை மிகவும் சாதகமான விடயங்கள் என்றும் கோத்தபாய குறிப்பிட்டார்.

ஒட்டுமொத்தமாக பார்க்கின்றபோது அரசினாலும் ஜனாதிபதியினாலும் வெளி உலகிற்கு தமது நேர்மையை வெளிப்படுத்த முடியாதமையையே நாராயணனின் கருத்து வெளிப்படுத்துகின்றது என்று சுட்டிக்காட்டிய அவர் இதில் முன்னேற்றம் காணவேண்டும் எனவும் இதற்கு சிறிது காலம் எடுக்கும் எனவும் குறிப்பிட்டார்.

நாராயணனைத் தான் நன்கு புரிந்து கொண்டுள்ளார் எனவும் அவரது தொலை நோக்கு தமக்கு தெரியுமெனவும் கோத்தபாய மேலும் குறிப்பிட்டுள்ளார்.

கிழக்கு மாகாணத்தை கைப்பற்றியுள்ள அரசு தமிழர்கள் பெரும்பான்மையாகவுள்ள வடக்கையும் கைப்பற்ற முனைகின்றது. அரசு ஒருபோதும் விடுதலைப் புலிகளுடன் பேச்சு மேற்கொள்ளாது - என்றும் கோத்தபாய தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளுக்கான சகல முன்னைய பேச்சுகளும் பிரச்சினைக்குத் தீர்வை காண தவறிவிட்டன.

**புலிகளுடன் பேசுவது அர்த்தமற்றது**

விடுதலைப் புலிகள் பேச்சு மூலமான தீர்வு குறித்து நேர்மையாக இல்லாதமையால் அவர்களுடன் பேசுவது அர்த்தமற்றது என்பது தெளிவு என்றும் குறிப்பிட்டுள்ள பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், எனினும் இறுதியாக நிரந்தரத் தீர்வாக அரசியல் தீர்வொன்றே ஏற்பட வேண்டுமெனவும், தனது எண்ணமும் அரசியல் தீர்வே எனவும் குறிப்பிட்டார்.

கடந்த 25 - 30 வருட காலப்பகுதியில் தமிழர்களுக்கு வழங்கப்பட்ட வாக்குறுதிகளை கொழும்பு நிறைவேற்றவில்லை என்பதை கோத்தபாய ஏற்றுக்கொண்டுள்ளார்.

அதேவேளை, கிழக்கில் இடம்பெற்ற தேர்தலை சுட்டிக் காட்டியுள்ள அவர் கிழக்கில் செய்ததை வடக்கிலும் மேற்கொள்வதற்கு ஜனாதிபதி உறுதியாகவுள்ளார் எனவும் கூறினார்.

கிழக்கைப் போன்று வடக்கை இலகுவாக கைப்பற்ற முடியுமா என்ற கேள்விக்கு "விடுதலைப் புலிகள்" தாமாக விரும்பி முல்லைத்தீவுக் காடுகளுக்குள் செல்லவில்லை. அவர்கள் அங்கு துரத்தப்பட்டனர். அவர்கள் யாழ்.குடாநாட்டையோ அல்லது திருகோணமலையையோ விரும்பியிருப்பார்கள். அப்பகுதிகள் அவர்களிற்கு சாதகமாக விளங்கியிருக்கும். எனினும் அவர்கள் அங்கிருந்து துரத்தப்பட்டனர். எனினும், வடபகுதி பாரிய நிலப்பரப்பு [illegible] - என்று பதிலளித்தார் கோத்தபாய.(அ-சி)

### யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி தரம்-11 மாணவர்களுக்கான அவசரச் சந்திப்பு

தரம் - 11 இல் கற்கும் அனைத்து மாணவர்களும் தரம் - 11 கற்பிக்கும் ஆசிரியர்களும் நாளை (15.08.2008) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கல்லூரியின் குமாரசாமி மண்டபத்துக்கு வருகை தருமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

யாழ்.இந்துக் கல்லூரி.

வீ.கணேசராசா
(அதிபர்).

### மரண அறிவித்தல்

**இராயப்பு யோன்பிள்ளை**



எழுவைதீவு, 5ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராயப்பு யோன்பிள்ளை நேற்று(13.08.2008) புதன்கிழமை காலமானார்.

அன்னார் லூர்து திரேஸ்சின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான நீக்கிலாப்பிள்ளை இராயப்பு - எலிசபெத் அம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான தொம்மைப்பிள்ளை-விக்கிரோரியாப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், கொன்சி (பிரான்ஸ்), வின்சி, ஜன்சி, ஜான்சன், குயின்சி, குயின்சன், காலஞ்சென்றவர்களான றஞ்சி, ஜொய்சி மற்றும் நிக்சன், நெல்சன் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஞானம் (பிரான்ஸ்), ஜேசுரத்தினம், கோகுலபாலன் , நிர்மலா, சீலன், ஆஞ்சலா, றெஜினா ஆகியோரின் அன்பு மாமனாரும் அஞ்சலின் அம்மா, பெனடிற் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் அந்தோனிக்குருசு (செல்வரத்தினம் - பிரான்ஸ்), அமலோற்பவநாயகி, அருட்சகோதரி ஜடா, ஜெயரத்தினம், ஜெயமணி, காலஞ்சென்ற றோகினி மற்றும் நவம் ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதி ஆராதனைகள் 16.08.2008 சனிக்கிழமை மு.ப. 10 மணிக்கு எழுவைதீவு புனித தோமையார் ஆலயத்தில் நடைபெற்று, பூதவுடல் புனித தோமையார் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

*5ஆம் வட்டாரம்,*
*எழுவைதீவு.* (77225)

### மரண அறிவித்தல்கள்

*திருமதி*

**பாலசௌந்தரி அருணாசலக்குருக்கள்**

கோப்பாயைப் பிறப்பிடமாகவும் வடலியடைப்பை வதிவிடமாகவும் கொண்ட திருமதி பாலசௌந்தரி அருணாசலக்குருக்கள் நேற்று (13.08.2008) புதன்கிழமை இறைபதம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற அருணாசலக்குருக்கள் அவர்களின் அன்பு மனைவியும், லாகினி, மாலினி, உஷா ஆகியோரின் பாசமிகு தாயும், சோதிரத்தினக்குருக்கள், யசோதரக்குருக்கள், பிரதாபசர்மா ஆகியோரின் அன்பு மாமியும், ஆரபி, அமுதபி, வைஷ்ணவி, அஷரன், வத்ஷரன், விக்ஷரன், யக்ஷரன், பிருகஸ்பதி, வாசவி, மதுவந்தி ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.08.2008) வியாழக்கிழமை பி.ப. 2 மணிக்கு அவரது இல்லத்தில் நடை பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக விளாவெளி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பிள்ளையார் கோவிலடி,*
*வடலியடைப்பு,*
*பண்டத்தரிப்பு.* (77221)

தகவல்:
R.P.சர்மா (மருமகன் - யா/ அருணோதயாக் கல்லூரி).

**இராமு ஜெகநாதன்**



ஸ்ரான்லிக் கல்லூரி முன் ஒழுங்கை, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகக் கொண்ட இராமு ஜெகநாதன் (கருப்பையா - சாரதி) நேற்று (13.08.2008) புதன்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி இராமு தம்பதியினரின் புதல்வரும், அமரர் சிவபாக்கியவதியின் அன்புக் கணவரும், ஜெகதீஸ்வரன் (ஈசன்), சியாமளா, ஜெயக்குமார், ஜெயராஜ், ஜெயகாந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும், மேரியூஜின் (வசந்தி), சோதிக்குமார், காந்திமதி, வக்சலா, கிருஸ்ணா ஆகியோரின் மாமனாரும், திருமதி நாகமுத்து, திருமதி தையல்நாயகி, மருதலிங்கம், அமிர்தலிங்கம், சிவராசா, இந்திரராசா ஆகியோரின் மைத்துனரும், இளமாறன், தாரங்கினி, பவித்திரா, ஷதுசன், சைத்திரியா, ஸ்ரீபன்ராஜ், பிரியங்கா, சோபிகா, இந்துஷா, சரேன், துஷாந், டக்சனா, பிரவீனா, சயந் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (14.08.2008) வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெற்று பூதவுடல் செம்மணி இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*63/3, ஸ்ரான்லிக் கல்லூரி*
*முன் ஒழுங்கை,*
*யாழ்ப்பாணம்.* (77218)

தகவல்:
ஜெ.ஜெகதீஸ்வரன் (ஈசன் - மகன்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கு விஞ்ஞான உபகரணங்கள் கொண்டுவர ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஒக. 14

யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கான விஞ்ஞான ஆய்வுகூட உபகரணங்கள் மற்றும் இரசாயன பொருள்களை வழங்க சமூக சேவைகள் மற்றும் சமூகநலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நடவடிக்கை எடுத்துள்ளார்.

யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கு சுமார் நான்கு வருடகாலமாக மேற்படி பொருள்கள் வழங்கப்படாதிருந்த நிலையில் அமைச்சர் அண்மையில் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்தவை நேரில் சந்தித்து கலந்துரையாடியதை அடுத்து இந்தப் பொருள்கள் யாழ். கொண்டு வரப்படவுள் என என்று அமைச்சு வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பயணிகள் பஸ் 'ரயர்' வெடித்ததால் புறக்கோட்டையில் நேற்றுப் பதற்றம்!

கொழும்பு, ஒக. 14

பயணிகள் பஸ் ஒன்றின் 'ரயர்' வெடித்த சத்தத்தால் நேற்றுமாலை புறக்கோட்டை ரயில் நிலையத்திற்கு முன்னால் பதற்றம் ஏற்பட்டது.

குறித்த பஸ்ஸில் பயணிகள் நெருக்கமாக நின்றவேளை பஸ்ஸின் 'ரயர்' ஒன்று திடீர் என்று பாரிய சத்தத்துடன் வெடித்தது. அப்போது அந்தச் சத்தம் வெடிகுண்டினது எனக் சத்தம் என நினைத்து பஸ்ஸிலிருந்து இறங்கி வெவ்வேறு திக்குகளில் சிதறி ஓடினர்.

பொலிஸாருக்கு கிடைத்த தொலைபேசி அழைப்புகளையடுத்து அவர்கள் சம்பவ இடத்துக்கு வந்தபோது - அது பஸ்ஸின் ரயர் வெடித்ததால் ஏற்பட்ட சத்தம் எனக் கண்டறிந்தனர் எனவும் கூறப்பட்டது.

பின்னர் பதற்றம் தணிந்து நிலைமை வழமைக்குத் திரும்பியது. (அ-சி)

# பிள்ளையான் குழுவினர் அடாவடியாம்

## தேர்தலைக் கண்காணிக்கும் அமைப்பு குற்றச்சாட்டு

கொழும்பு, ஒக.14

பிள்ளையான் குழுவினர் பொலன்னறுவை மாவட்டத்தில் 18 முகாம்களை அமைத்து அங்கு ஐ.தே.கட்சியினரும் ஜே.வி.பியினரும் தேர்தல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதைத் தடுத்து அடாவடி செயற்பாடுகளில் ஈடுபடுகின்றார்கள் என்று தேர்தல் நடவடிக்கைகளைக் கண்காணிக்கும் 'கபே' அமைப்பு வெளிப்படையாகக் குற்றஞ்சாட்டியிருக்கிறது.

அந்த அமைப்பு நேற்றுக் கொழும்பில் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய அந்த அமைப்பின் ஊடகப் பேச்சாளர் ரஞ்சித் கீர்த்தி தென்னகோனே மேற்படி தகவலைத் தெரிவித்தார், அவர் தொடர்ந்து கூறியவை வருமாறு:-

வடமத்திய மாகாணத்தில் தேர்தல் வன்முறைகள் அதிகரித்துள்ளன. குறிப்பாக பொலன்னறுவை மாவட்டத்தில் பிள்ளையான் குழுவினர் 18 முகாம்களை அமைத்து தேர்தல் நடவடிக்கைகளுக்கு இடையூறு விளைவித்து வருகின்றனர்.

குறிப்பாக ஜே.வி.பி. மற்றும் ஐ.தே.கட்சி ஆகிய கட்சிகளின் அரசியல் செயற்பாடுகளுக்கு அவர்கள் தடையேற்படுத்தி வருகின்றனர்.

திம்புலாகலவில் சுவரொட்டிகளை ஒட்டிக்கொண்டிருந்த ஐ.தே.கட்சி ஆதரவாளர்களைப் பிள்ளையான் குழுவினர் இரண்டு தினங்களுக்கு முன்னர் மிரட்டியிருக்கின்றனர்.

அதேபோல் ஜே.வி.பியினர் தேர்தல் கூட்டங்களை நடத்துவதற்கும் அவர்கள் தடை விதித்து வருகின்றனர்.

அதேபோல் வடமத்திய மற்றும் சப்ரகமுவ மாகாணங்களில் இலக்கத் தகடுகள் அற்ற வாகனங்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

சில வாகனங்கள் இலக்கத் தகடுகளுக்குப் பதிலாக 'பொலிஸ்' என்ற தகட்டைப் பொருத்திக்கொண்டு பயணிக்கின்றன.

சில வாகனங்களில் முன் பக்கத்தில் மாத்திரம் இலக்கத்தகடு உண்டு. பின் பக்கத்தில் இல்லை.

இந்த வாகனங்கள் ஒரே மாவட்டத்தில் தொடர்ச்சியாகப் பாவிக்கப்படுவதில்லை. மாவட்டத்திற்கு மாவட்டம் ஓரிரு நாள்களுள் இவை மாற்றப்படுகின்றன.

அரச வாகனங்களும் அதிகளவு தேர்தல் பணிக்காகப் பயன்படுத்தப்படுகின்றன. அவையும் இடத்திற்கிடம் மாற்றி மாற்றியே பயன்படுத்தப்படுகின்றன - என்றார். (சி)

# ஊர்காவற்றுறையில் எலும்புக் கூடு மீட்பு

யாழ்ப்பாணம், ஒக. 14

ஊர்காவற்றுறை சாட்டி கடற்கரையில் எலும்புக் கூடு ஒன்று நேற்றுப் பிற்பகல் கரையொதுங்கியது.

இந்த எலும்புக் கூட்டை மீட்ட ஊர்காவற்றுறைப் பொலிஸார் நேற்றுப் பிற்பகல் யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைத்தனர்.(1-78)

# இரத்தினபுரியில் ரஞ்சன் ராமநாயக்க குண்டர் குழுவால் தாக்கப்பட்டார்

கொழும்பு, ஒக. 14

ஐ.தே.க.வின் சப்பிரகமுவ மாகாண முதன்மை வேட்பாளர் ரஞ்சன் ராமநாயக்க நேற்றுமாலை இரத்தினபுரி மாவட்டம் பெல்மதுல்லப் பகுதியில் வைத்து இனந்தெரியாத குண்டர்களினால் தாக்கப்பட்டார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரஞ்சன் ராமநாயக்கா பயணித்த வாகனம் உட்பட அவரின் ஆதரவாளர்கள் பயணம் செய்த வாகனங்களை 200 பேர் கொண்ட குண்டர் குழு ஒன்று வழி மறித்து பொல்லுகளாலும், கற்களாலும் கடுமையான தாக்குதல் நடத்தினர் என்றும், இதில் ரஞ்சன் ராமநாயக்கா காயமடைந்ததுடன், அவருக்கு சொந்தமான 8 வாகனங்கள் சேதமடைந்துள்ளன எனவும் கூறப்பட்டுள்ளது.

அரசு தரப்பு ஆதரவாளர்களே இந்தத் தாக்குதலை நடத்தினர் என்று ஐ.தே.கவின் தேசிய அமைப்பாளரும் சப்பிரகமுவ மாகாணத் தேர்தல் நடவடிக்கைக் குழுத் தலைவருமான எஸ்.பி.திஸநாயக்கா குற்றம் சுட்டியுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் இரத்தினபுரிப் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது என்று கூறப்பட்டது.

## மாகாண மட்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிகழ்ச்சி நிரலுடன் மாகாணக் கல்வித் திணைக்களத்தால் வலயக் கல்விப்பணிப்பாளர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

நேற்று மாலை யாழ்ப்பாணத்துக்குக் கிடைத்த நிகழ்ச்சிநிரலின் பிரகாரம் போட்டி இடம்பெறும் திகதிகள் வருமாறு:-

- 18.08.2008 - எல்லே - ஆண்கள், பெண் கள்.
- 20.08.2008 - கபடி - ஆண்கள், பெண் கள்.
- 21, 22 - 08.2008 - உதைபந்தாட்டம் (ஆண்கள்), வலைப்பந்தாட்டம் (பெண்கள்).
- 23.08.2008 - உடற்பயிற்சி (ஆண்கள், பெண்கள்), மென்பந்தாட்டம் (ஆண்கள்).
- 24.08.2008 - கரப்பந்தாட்டம் - (ஆண் கள், பெண்கள்).
- 25, 26 - 08.2008 - பூப்பந்தாட்டம் - (ஆண்கள், பெண்கள்), சதுரங்கம் (ஆண்கள், பெண்கள்), மேசைப்பந்தாட்டம் (ஆண்கள், பெண்கள்), கூடைப்பந்தாட்டம் (ஆண்கள், பெண்கள்).
- 28, 29 - 08.2008 - மெய்வன்மைப் போட்டிகள் - 11, 13, 15, 17 பிரிவுகள் - ஆண்கள், பெண்கள்.

19 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான மெய்வன்மைப் போட்டிகள் இடம்பெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்தப் பிரிவு மாணவர்கள் ஜி.சீ.ஈ. (உயர்தர) பரீட்சைக்கு தோற்றுவதால் இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக மாகாண கல்வித் திணைக் கள வட்டாரங்கள் தெரிவித்தன. (அ-1)

## பூந்தோட்டம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முயற்சி எடுத்தனர். எனினும் தீ வேகமாகப் பரவியதால் குடிசைகள் எரிந்து நாசமாகின. இத் தீ விபத்தில் நிர்க்கதியான மக்கள் பாடசாலைகளில் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என்று வவுனியா மாவட்ட அரச அதிபர் தெரிவித்தார்.

தீப்பற்றியபோது அநேகமான வீடுகளில் ஆள்கள் இருக்கவில்லை. சிறு பிள்ளைகள் வெளியில் விளையாடிக் கொண்டிருந்தனர். அநேகமான ஆண்களும் பெண்களும் வேலைக்குச் சென்றிருந்தனர். வேலைத் தலங்களில் இருந்தபோது பூந்தோட்டம் நலன்புரி நிலையப் பகுதியில் இருந்து வானளாவ எழுந்த புகை மண்டலத்தைக் கண்டும், தீப்பற்றியமை குறித்துக் கேள்வியுற்றும் நலன்புரி நிலையத்திற்கு ஓடிவந்து பார்த்தபோது அனைத்தும் எரிந்து சாம் பலாகிவிட்டிருந்ததாகப் பலரும் தெரிவித்தனர்.

பூந்தோட்டம் நலன்புரி நிலையத்தில் கடந்த மாதம் 17 ஆம் திகதி ஏற்பட்ட தீ விபத்தொன்றில் 11 மண்டபங்கள் எரிந்து தரைமட்டமாகியிருந்தன. அதனால் சுமார் 125 குடும்பங்கள் வாழ்விடங்களை இழந்து பாதிக்கப்பட்டன (அ-சி)

## கஞ்சிகுடிச்சாற்றில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விசேட அதிரடிப் படையினர் தேடுதல் மேற் கொண்டிருந்தனர் என்றும் - அதை அறிந்த புலிகள் அவர்கள் வரும் வழியில் பொறிவெடி களைப் புதைத்தனர் என்றும் - அதிலேயே அவர்களில் மூவர் படுகாயமடைந்தனர் என்றும் - தகவல்கள் வெளியாகியுள்ளன.

எனினும், இந்தத் தகவல் சுயாதீனமாக உறுதிப்படுத்த வில்லை.

## முழங்காவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வில் மோதல்கள் தொடர்வதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

கிளிநொச்சி மாவட்டத்தில், விடுதலைப்புலிகளின் நிர்வாகப் பிரிவின் இரண்டாவது கேந்திர இடமாக விளங்கும் முழங்காவில் பகுதியை படையினர் தமது கட்டுப்பாட்டில் நேற்று மாலை கொண்டுவந்தனர். அங்கு தேடுதல்களை நடத்துவதுடன் தமது நிலைகளைப் பலப்படுத்தும் பணியில் அவர்கள் ஈடுபட்டுள்ளனர் என தேசிய பாதுகாப்பு தகவல் நிலையம் அறிவித்தது.

முழங்காவிலில் அமைந்திருந்த விடுதலைப்புலிகளின் தொலைத் தொடர்பு கோபுரத்தையும் படையினர் தமது கட்டுப்பாட்டில் கொண்டு வந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (அ-1)

## பசி தாங்காது..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தற்போது புதுமுறிப்பில் தங்கியுள்ளது. புவனேந்திரனின் பிள்ளைகளான கல்கி (வயது மூன்றரை), தயானந்தராசா (வயது 4), பவித்திராஜா (வயது 7), கோணேஸ்வரி (வயது 12) ஆகியோரே ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ள சிறுவர்கள் ஆவர்.

பசிக்கொடுமையால் பழைய உணவை உண்டதால் மயக்கமடைந்த நிலையில் கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் அனுமதிக் கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. அந்த உணவில் நஞ்சுறி இருக்கலாம்மென்மைத் தெரிய வட்டாரங்கள் முற் கொண்டு தெரிவித்தன. (அ-1)

## பஸ்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அநுராதபுரம் திறப்பனை என்ற இடத்தில் உள்ள அலிஸ்பன வீதி வளைவில்வைத்தே இந்த விபத்து நேற்று பிற்பகல் 1.45 மணியளவில் இடம்பெற்றது என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ரஞ்சித் குணசேகர தெரிவித்தார்.

கொழும்பில் இருந்து அநுராதபுரம் நோக்கிச் சென்ற தனியார் பஸ்ஸும் அநுராதபுரத்தில் இருந்து பொலன்னறுவை நோக்கி வந்த இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பஸ்ஸுமே இவ்வாறு நேருக்கு நேர் மோதிக்கொண்டன. (அ-சி)

## குடாநாட்டில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தரப்பு ஏற்பாடு செய்துள்ளது.

மின்மாற்றிகளைச் சுற்றிவர மண்மூடைகள் அடுக்கப்பட்டு நாள் முழுவதும் - 24 மணி நேரமும் இராணுவத்தினர் காவல் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இரவு - பகலாகப் படையினர் பாதுகாப்புப் பணியிலும் ரோந்துப்பணியிலும் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். (அ-1-70-207)


விமான சேவைகள் Ram Communication ல்

விசேட விலை கழிவுகளுடன்

01) உள்நாட்டு,வெளிநாடுகளுக்கான கடிதங்கள், பொதிகள், V.C.Dக்கள் என்பவற்றை விரைவாகவும், பாதுகாப்பாகவும் அனுப்பிவைக்கப்படும்.

02) 16ஆம், 22 ஆம் திகதிகளுக்கான பயண ரிக்கற்றுகளுக்கு உடன் தொடர்பு கொள்ளவும்.

மற்றும்

Internet, E-mail, Browsing, Photocopy, Typing, Laminating, Scaning இன்னும் பல உங்கள் தேவைகளுக்கு.

Ram Communication

இல.06,Hospital Road, Jaffna.

Fax:- 021 222 2007, 021 222 8428.

E-mail:- n.ram com @ yahoo.com

வந்து விட்டது

"ஏஞ்சல்"

புலமைப் பரிசில் வழிகாட்டி

தரம் - 5

கிடைக்குமிடம்

ஆல்சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்

212, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

எமது நல்லூர் விசேட காட்சியறையிலும் பெற்றுக் கொள்ளலாம்.

A/L வணிகக்கல்வி

விசாகா கல்லூரி

வினாத்தாள் விடைகளுடன்

பூபாலசிங்கம் புத்தகசாலை

A/L இரசாயனவியல் 2009/2010 PERSONAL CLASS

Pass Paper

M.Sc.(Cey) Chemistry

T.P:- 0776038913

09-Paper Class இந்த (சனி, ஞாயிறு 11-12) இலவசம்

பிரதிக்கு முந்துங்கள்

வெற்றி வழி O/L,A/L தமிழ்

நாக.தமிழிந்திரனின் இலக்கணப் பயிற்சி நூல்

BEACON கல்வி நிறுவனத்தில் இதற்கான

விடுமுறை வகுப்புகளும் நடைபெறுகின்றன.

பூபாலசிங்கம் யாழ். | ஸ்ரீலங்கா யாழ். | துர்க்கா சுன்னாகம்

விக்னா கல்வி நிறுவனம்

நல்லையம் 52,ஸ்ரான்லி வீதி, யாழ்.

தமிழ் - குழந்தை

A/L 2009 (8-9) Sat, Sun

A/L 2010 (10-11) Sat, Sun

புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

PAPER CLASS இந்து நாகரிகம்

ஆரம்பம் 15.08.2008 வெள். 8a.m.

By S.ஜெயக்குமார் (B.A.Hons)

யூனிவேர்சல்


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 14.08.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# கல்விச் சுடர் 09

விசேட பரீட்சை வெளியீடு - 09

ஆசிரியர்:-
திரு.கி.தவகுலரெட்ணம்,
மேல்மாகாண கல்விவள ஆலோசகர்.



Model Examination For Grade Five Students for Selection to School and for the Award of Bursaries, August 2008

மாணவர்களைப் பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும், மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாக தரம்-05 மாணவர்களுக்கு நடத்தப்படும் புலமைப்பரிசில் மாதிரிப் பரீட்சை, ஓகஸ்ட் 2008


## வினாத்தாள் - I

மாணவர் சுட்டெண்:- .............................. நேரம் ... நிமிடங்கள்


**இலக்கம் 1 இலிருந்து 5 வரையான வினாக்களுக்கு சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

வெற்றுக் கூட்டுக்குள் வரவேண்டியதை தெரிவு செய்க.


01.




02.




03. வரிப்படத்தின் முதல் மூன்று நிலைகளையும் அவதானித்து அடுத்து வரவேண்டியதை தெரிவுசெய்க.




04. இவ்வுருவின் அடுத்த நிலை ... இதுவானால், ... இவ் உருவின் முதல் நிலை எதுவாக இருக்கும்?



05. இவ்வடிவங்களை அடுத்து வரவேண்டியது யாது?



06. இவ்வுருவின் சுற்றளவுக்கு சமனான உரு




07. பின்வரும் ஒவ்வொரு வினாவிலும் உள்ள சரியான விடையின் கீழ்க் கோடிடுக. ஒவ்வொரு வாகனங்களினதும், நீளத்துக்கு அமைய முறையே நீளம் அதிகரிக்கும் ஒழுங்கில் எழுதப்பட்டிருப்பது,

1) புகையிரதம், பஸ்வண்டி, கார், சைக்கிள்.
2) சைக்கிள், கார், பஸ்வண்டி, புகையிரதம்.
3) பஸ்வண்டி, புகையிரதம், கார், சைக்கிள்.
4) கார், பஸ்வண்டி, புகையிரதம், சைக்கிள்.

08. காலம் முறையே குறைகின்ற ஒழுங்கில் எழுதப்பட்டிருப்பது,

1) செக்கன், நிமிடம், மணித்தியாலம்.
2) நாள், வாரம், மாதம், வருடம்.
3) மாதம், வாரம், நிமிடம், மணித்தியாலம்.
4) வருடம், மாதம், மணித்தியாலம், செக்கன்.

ஒரு வியாபாரி ரூபா 426.70, ரூபா 985.30, ரூபா 1706.50 பெறுமதியுள்ள பொருட்களை HBK.ym,ACN.DM,LYMK.NM என எழுதியிருந்தார். அதற்கமைய பின்வரும் இரகசியக் குறியீடுகளினால்எழுதப்பட்டுள்ள பொருட்களின் உரிய விலைகளை இலக்கத்தில் எழுதுக.

09. சட்டை :- HNM.NM = ..............................

10. தொலைக்காட்சிப் பெட்டி :- BYNBN.MM = ..............................




11. சைக்கிள் :- NCMB.KN = ..............................

12. மேசை :- BNM.MM = ..............................

13. புத்தகம் :- HBN.MM = ..............................

14. செருப்பு :- KBA.AA = ..............................

பழவகைகள் பலவற்றின் நிறைகள் கீழே தரப்பட்டுள்ளன. கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்குப் புள்ளிக்கோட்டில் விடை எழுதுக.



| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாம்பழம் 200g | மாம்பழம்/ அன்னாசி 350g | பப்பாசி/ வாழை 100g | தோடை/ தோடை 100g | பப்பாசி/ பப்பாசி 150g | பலாப்பழம்/ பப்பாசி 150g |

15. 75 கிராம் நிறையுடைய இரண்டு பழவகைகளும் எவை?
..............................

16. மாம்பழத்தை விட அன்னாசிப்பழம் எவ்வளவு கிராம் நிறை கூடியது?
..............................

17. பப்பாசிப் பழத்தின் நிறை யாது?
..............................

18. தோடம்பழத்தின் நிறையின் இரண்டு மடங்கு நிறையுடைய பழம் எது?
..............................

19. இவ்வுருவில் உள்ள பழங்களின் நிறையை ஏறுவரிசையின்படி குறிப்பிடுக.
..............................

இலக்கம் 20-24 வரையான வினாக்களுக்கு சரியான விடையைத் தெரிந்து அதன் கீழ்க் கோடிடுக.

20. விமலன் விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்றுவதில் ஆர்வம் காட்டுவதில்லை.

1) விளையாட்டு முறைகள் பற்றிய விளக்கம் இன்மை.
2) பெற்றோரின் விருப்பமின்மை.
3) பாடசாலையின் விளையாட்டுக்குழு பயிற்சியில் ஈடுபாடு இல்லாமல் இருந்தமை.

21. நாட்டின் அரிசித் தட்டுப்பாட்டை உடனடியாக நிவர்த்திசெய்ய உதவும் திட்டங்களில் முக்கியமான ஒன்று,

1) காடுகளை வயல் நிலங்களாக மாற்றியமைத்தல்.
2) வயல் நிலங்களில் நெற்பயிர்ச்செய்கையை மேற்கொள்ளல்.
3) நெல் உத்தரவாத விலைத்திட்டம்.

22. காட்டிலுள்ள மரவகைகளை அழிப்பதனால் ஏற்படக்கூடிய பாதிப்பு,

1) மழை இல்லாமல் போய் வறட்சி உண்டாகும்.
2) பறவைகள் இருக்க இடம் இல்லாமல் போகும்.
3) விறகுத் தட்டுப்பாடு நிலவும்.

23. விமலா தான் புலமைப் பரிசிற் பரீட்சையில் கூடிய புள்ளிகளைப்பெற்று மாவட்டரீதியில் முதலிடம் பெறுவேன் என்றாள். அதற்கான காரணமாக இருக்கக்கூடியது,

1) விமலாவின் பெற்றோரின் விருப்பம்.
2) விமலாவின் விடாமுயற்சியும் கல்விசார்ந்த பயிற்சிகளும்.
3) தன்னிலும் விட ஏனையோர்கள் படிப்பில் ஆர்வம் இல்லை.

24. "தினை விதைத்தவன் தினை அறுப்பான்; வினை விதைத்தவன் வினை அறுப்பான்" இதற்குப் பொருத்தமான கூற்று,

1) முயற்சி திருவினையாக்கும் என்பதனால்.
2) ஒருவர் தான் செய்த செயலின் பயனை அனுபவிப்பான் என்பதாகும்.
3) தினை அறுப்பது இலகுவானது என்பதாகும்.

மூன்று பிள்ளைகளின் பிறந்ததினம் ஒழுங்கு முறையில் கீழே தரப்பட்டுள்ளது.

*பாத்திமா- 1991 ஜூலை 12. *சிஸ்வானா - 1995 செப்டெம்பர் 19.
*பத்மா - 1996 ஒக்டோபர் 10.

25. இதன்படி தற்போது ஏழாம் தரத்தில் கல்விகற்கும் பிள்ளையாக இருக்கக்கூடியவர் யார்?
..............................



26. 100 நூறு மீற்றர் ஓட்டப் போட்டியில் நான் பங்கு பற்றினேன். இருந்தும் நான் அப்போட்டியில் இறுதி ஆளாகவே வந்தேன். இதற்குரிய முக்கிய காரணமாக இருக்கக்கூடியது,

1) நான் மெதுவாக ஓடியதனால்.
2) என்னுடன் ஓடியவர்கள் என்னைவிட வேகமாக ஓடியதனால்.
3) நான் திரும்பித் திரும்பிப் பார்த்து ஓடியதனால்.

27. ஒரு பாடசாலையில் உள்ள ஆண் பிள்ளைகளிலும் பார்க்கப் பெண் பிள்ளைகளின் எண்ணிக்கை மூன்று மடங்காகும். பாடசாலையிலுள்ள பெண்பிள்ளைகளின் எண்ணிக்கை 150 ஆயின், ஆண் பிள்ளைகளின் எண்ணிக்கை யாது?

இலக்கம் 28-30 வரையுள்ள வினாக்களுக்கு தரப்பட்டுள்ள உரோமன் எண்கள் ஒவ்வொன்றிற்கும் பயன்படுத்தக் கூடிய எண் எதுவென அடைப்புக்குள் தரப்பட்டிருக்கும் எண்களிலிருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

28. XC - (115, 90, 50)

29. CD - (400, 300, 200)

30. CC - (100, 200, 400)

31-32 வரையிலான வினாக்களுக்கு தமிழ் எழுத்துக்கள் சிலவற்றை கூட்டும்போது பெறப்பட்ட விடைகள் கீழே தரப்பட்டுள்ளன. அவற்றினைக்கொண்டு சரியான விடையின் கீழ்க் கோடிடுக.

| | | |
|---|---|---|
| க | த | சி |
| சி | ர | சி |
| 5 | 7 | 6 |
| ம | க | சி |
| சி | ட | ந |
| 7 | 5 | 9 |

31. 'க' வின் பெறுமதி என்ன?

1) 6  2) 2  3) 3

32. 'ந' வின் பெறுமதி 4 ஆயின் "ம்" வின் பெறுமதி யாது?

1) 5  2) 4  3) 2

பின்வரும் சொற்களில் பொருத்தமான சொற்களை வைத்து கீழுள்ள இடைவெளிகளை நிரப்புக.

**பாம்பு, திருக்குறள், நூலகம், சிங்கம், எறும்பு, கொக்கு, திருவாசகம், பாடசாலை**


33. இது ஊரக்கற்குழியும் ஏற்படும் என்பார்கள் ..............................

34. திருவள்ளுவர் இயற்றிய நூல் ..............................

35. அமைதியை அவசியம் பேண வேண்டிய இடம் ..............................


பின்வரும் கோவைகளை அறிந்து இடைவெளிகளை நிரப்புக.

36.





( .......... )

37.





( .......... )

38.





( .......... )

39.




( .......... )

40.




( .......... )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வினாத்தாள் - II

மாணவர் சுட்டெண்:- ..............................  நேரம்:- 1 மணித்தியாலம் 15 நிமிடங்கள்

01. கீழேயுள்ள பந்தியை வாசித்து அதன் கீழ் உள்ள வினாக்களுக்கு உரிய விடைகளைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

அன்பு என்பது கொடுக்கக் கொடுக்கக் குறையாத அருஞ் செல்வமாகும். பெற்றோர்-பிள்ளைகள், கணவன்-மனைவி, சகோதரர்கள், நண்பர்கள், உறவினர்கள், அயலவர்கள் எனத் தம்முடன் உறவு கொண்டவர்கள் மீது மனிதர்கள் அன்பு வைக்கின்றார்கள். குடும்பத்தினர் உற்றார் உறவினர் ஏனையோர் மீது வைக்கின்ற அன்பு காலப்போக்கில் உயிர்கள் எல்லாவற்றையும் நேசிக்கச் செய்கின்றது. மனிதன் உயிர்களிடத்தில் காட்டுகின்ற கருணையே "ஜீவகாருண்யம்" எனப்படும். தம்முயிர் போல் பிற உயிர்களையும் மதிக்க வேண்டும். அத்தகையவர்கள் "மனிதருள் மாணிக்கம்" ஆவார்.

1) "அருஞ்" என்பதன் ஒத்த கருத்துச் சொல் யாது? ..............................
2) உறவு என்பதன் எதிர்க்கருத்துச் சொல் யாது? ..............................
3) இப்பந்தியில் இடம்பெற்ற பெண்பாற் சொல் யாது? ..............................
4) இங்கு இடம்பெற்ற இணைமொழி ஒன்றை எழுதுக. ..............................
5) உயர்திணை, எதிர்கால வினைச் சொல் ஒன்று தருக. ..............................
6) சீவகாருண்யம் என்றால் என்ன? ..............................
7) நேசித்தல் என்பதனால் கருதப்படுவது யாது? ..............................
8) மனிதருள் மாணிக்கம் எனப்படுவோர் யார்? ..............................
9) பிள்ளைகள் என்பதை ஒருமையாக குறிப்பிட்டால் ..............................
10) இறைவன் எம்மை நேசிப்பது போல நாம் யாரை நேசிக்க வேண்டும்?
..............................


02. சொற்களைப் பொருத்தமானதாக ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியமாக்கி எழுதுக.
1) பாடசாலை / எழுந்து / காலையில் / செல்வோம் / நாங்கள்
..............................
2) நடத்தல் / பெரியோரை / வேண்டும் / மதித்து / நாம்
..............................

03. பின்வரும் தொடர்புகளால் உணர்த்தப்படும் கருத்தை எழுதுக.
1) நகமும் சதையும் போல
..............................
2) இளமையில் கல்வி சிலையில் எழுத்து
..............................

**4-7 வரையான வினாக்களுக்குரிய பழமொழியினது கருத்தை எழுதுக.**

04. "மின்னுவதெல்லாம் பொன்னல்ல" - ..............................
05. "காகத்திற்கு தன் குஞ்சு பொன் குஞ்சு" - ..............................
06. "உப்பிட்டவரை உள்ளளவு நினை" - ..............................
07. "காற்றுள்ள போதே தூற்றிக் கொள்" - ..............................

**தரப்பட்டுள்ளது ஒரு பால் பைக்கற் ஆகும். அதனை அடிப்படையாகக்கொண்டு பின்வரும் வினாக்களுக்குரிய விடைகளைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**




08. இதன் உற்பத்தி திகதி யாது? ..............................
09. இதில் உள்ள உற்பத்தி குறியீட்டு இலச்சினை யாது?
..............................
10. பால் பைக்கற் ஒன்றின் விலை யாது? ..............................
11. இப்பால்மா பைக்கற்றுக்கள் எத்திகதி வரை பாவனைக்குட்படுத்தலாம்?
.......... ..............................
12. இதன் உச்சிகளின் எண்ணிக்கை யாது? ..............................
13. இத்தகைய 7 பால் பக்கற்றுக்களின் நிறையினை கிராமில் தருக.
..............................

14. வெற்றிடத்திற்கு பொருத்தமான விடையை ஆங்கிலத்தில் கீழே தரப்பட்டுள்ளவற்றிலிருந்து தெரிவு செய்து எழுதுக.
No parking, Smoking is Prohibited, Hospital




15. அதிபர் என்பதன் ஆங்கிலச் சொல்லை எழுதுக. ..............................
16. பின்வரும் வாக்கியத்தின் கருத்தை ஆங்கிலத்தில் எழுதுக.
எனது ஊர் அழகானது. ..............................
17. பின்வரும் சிங்களச் சொற்களின் கருத்தைத் தமிழில் எழுதுக.
அய்யா .............................. பத் .............................. நங்கி ..............................

**18 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் உரிய விடையின் கீழ்க் கோடிடுக.**

18. தாவரம் ஒன்று நீரை உறுஞ்சிக் கொள்வது
1) வேர்களினால். 2) தண்டினால். 3) இலைகளினால். 4) பூக்களினால்.
19. நீதியை குறிப்பதற்கான சின்னம்
1) செஞ்சிலுவை. 2) துப்பாக்கி. 3) சமநிலையான தராசு. 4) விளக்கு.
20. இரண்டு வர்ணங்களைக் கலப்பதனால் உண்டாகக்கூடிய வர்ணம்,
1) நீலம். 2) சிவப்பு. 3) மஞ்சள். 4) ஊதா.
21. வீட்டுத் தோட்டத்தில் உள்ள எச்சங்களை, கழிவுகளை
1) ஒன்று சேர்த்துத் தீயிட்டு எரிக்க வேண்டும்.
2) கூட்டுப்பசளை தயாரிப்பதில் பயன்படுத்த வேண்டும்.



3) பெருவீதிக்கு அருகில் குவிக்க வேண்டும்.
4) நதிகளில் அல்லது குளங்குட்டைகளில் போட வேண்டும்.
22. பாலூட்டி இனத்தைச் சார்ந்த ஒரு பறவையினம்,
1) காகம். 2) கழுகு. 3) வௌவால். 4) மீன்கொத்தி.
23. வானவில்லில் காணத்தக்க வர்ணங்களின் எண்ணிக்கை,
1) 5. 2) 7. 3) 4 4) 6.
24. துருப்பிடித்த கம்பி ஆணி ஒன்று காலில் குத்தினால் எமக்கு ஏற்படக்கூடிய நோய்,
1) டெங்குக் காய்ச்சல். 2) ஈர்ப்பு வலி. 3) சின்னமுத்து. 4) கொப்பளிப்பான்.
25. ஜோன் லொஜி பெயாட் மூலம் கண்டுபிடிக்கப்பட்டது,
1) தொலைபேசி. 2) தொலைக்காட்சி. 3) விமானம். 4) வானொலி.
26. நஞ்சு அருந்திய ஒருவருக்கு வழங்கக்கூடிய முதலுதவி,
1) நித்திரை செய்யவிடல். 2) பால் பருகக் கொடுத்தல்.
3) வெந்நீரினால் குளிப்பாட்டுதல். 3) வாந்தி எடுக்கச் செய்தல்.
27. வாக்காளர் இடாப்பின் பிரதியொன்றினைப் பெற்றுக்கொள்ளச் செல்லவேண்டியது,
1) கிராம சேவகர் அலுவலகம். 2) பொலிஸ் நிலையம்.
3) மாவட்டச் செயலகம். 4) மாவட்ட தேர்தல் ஆணையாளர் அலுவலகம்.
28. பின்வரும் படங்களுள் நாகமரத்தினைக் காட்டும் படம் எது?




29.




இந்த வடிவத்தில் உள்ள தாவர இலை,
1) வேப்பிலை. 2) வெற்றிலை.
3) அரசிலை. 4) பலா இலை.
30. எதிரி வாலைப் பிடிக்க முயலும்போது தனது வாலைப் பிடித்துக் கொண்டு செல்வது,
1) உடும்பு. 2) கபறகொயா. 3) பல்லி. 4) ஓணான்.
31. மாணிக்க கங்கைக்கு அருகில் அமைந்துள்ள சரித்திரப் புகழ்வாய்ந்த நகரம் யாது?
1) சிலாபம். 2) கதிர்காமம். 3) களுத்துறை. 4) திருகோணமலை.
32. நீரைக் கொண்டுள்ள கண்ணாடிக் குவளையில் சிறிதளவு தேங்காயெண்ணெய்யை இட்டுச் சிறிது நேரத்தின் பின்னர் அவதானிக்கக் கூடியது,
1) நீரும் தேங்காயெண்ணெய்யும் கலந்து இருக்கும். 2) நீரின் மேல் தேங்காயெண்ணெய் மிதக்கும்.
3) தேங்காய் எண்ணெய்யின் மேல் நீர் மிதக்கும். 4) சற்று நேரத்தில் நீர் ஆவியாகிவிடும்.
33.




இதன் மூலம் கருதப்படுவது,
1) ஒரு வைத்தியசாலை. 2) முன்னே ஒரு கிறிஸ்தவ ஆலயம்.
3) வாகனம் செல்லத் தடை. 4) முன்னே ஒரு நாற்சந்தி உண்டு.
34. கடித உறையில் சரியாக முத்திரை ஒட்டப்படவேண்டிய இடம்,
1) இடது பக்க மூலை. 2) வலது பக்க மூலை. 3) வடமேல் மூலை. 4) கடிதத்தின் பின்புறம்.
35. C.W.W. கன்னங்கர அவர்கள்,
1) இலவசக் கல்வியின் தந்தை. 2) பொருளியலின் தந்தை.
3) தேசத்தின் தந்தை. 4) விஞ்ஞானத்தின் தந்தை.
36. ஆபத்து என்பதைப் புலப்படுத்தப் பாவிக்கப்படும் நிறம்,
1) மஞ்சள். 2) பச்சை. 3) சிவப்பு. 4) கறுப்பு.
37. பால் தன்மையுடைய தாவரம் ஒன்று,
1) கொய்யா. 2) பூவரசு. 3) இறப்பர். 4) தென்னை.
38. சமாதானத்தின் குறியீடாக அறிமுகப்படுத்தப்பட்டிருப்பது,
1) வெண்புறா. 2) சமவலுவான தராசு. 3) சிவப்புக் கொடி. 4) அரச இலை.
39. வளி அதிர்வதினால் ஒலி எழுப்பப்படும் சங்கீத உபகரணம்,
1) வீணை. 2) உடுக்கு. 3) தாளம். 4) புல்லாங்குழல்.
40. அம்பலாங்கொடை நகரம் எக்கலைக்குப் பிரசித்தி பெற்றது?
1) முகமூடிப் பொம்மைகளுக்கு. 2) நடனத்திற்கு. 3) மிருதங்கத்திற்கு. 4) சித்திரத்திற்கு.

கீழே தரப்பட்டுள்ள உருவை அவதானித்து 41 - 44 வரையிலான வினாக்களுக்கு விடை தருக.




41. சதுரத்திற்கு மட்டும் உரிய இலக்கம் யாது? ..............................
42. வட்டத்திற்கும் சதுரத்திற்கும் மட்டும் உரிய இலக்கங்கள் யாவை?
..............................
43. வட்டம், சதுரம், முக்கோணி ஆகிய மூன்றுக்கும் பொதுவான இலக்கம் யாது?
..............................
44. வட்டத்திற்கு மட்டும் உரிய இலக்கம் யாது? ..............................
45. உலர் மின்கலத்தைப் பயன்படுத்தி இரு மின்குமிழ்களை ஒரே தடவையில் ஒளிரச் செய்வதற்கு மூன்று கம்பித்துண்டுகள் தொடுக்கப்படும் விதத்தைப் பின்வரும் வரிப்படத்தில் வரைந்து காட்டுக.





**பின்வரும் உபகரணங்கள் எக்கைத்தொழில்களின் பயன்பாட்டிற்கு உதவுகின்றன.**

46. வனைச் சில்லு - ..............................
47. மணிபாக - ..............................
48. பட்டடை - ..............................



49. உருவில் காணப்படும் திண்மத்தில் உள்ள விளிம்புகளின் எண்ணிக்கை யாது?
..............................



50.




இக்கருவியின் பெயர் யாது?
..............................

**தேநீர் கடையொன்றின் விலைப்பட்டியல் கீழே தரப்பட்டுள்ளது. அதை அவதானித்து பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

| | | |
|---|---|---|
| தேநீர் | - | 10.00 ரூபா |
| பால் தேநீர் | - | 20.00 ரூபா |
| மோதகம் | - | 25.00 ரூபா |
| வடை | - | 25.00 ரூபா |

| | | |
|---|---|---|
| வாழைப்பழம் ஒன்று | - | 07.00 ரூபா |
| சோடா ஒன்று | - | 27.00 ரூபா |
| யோகட் ஒன்று | - | 18.00 ரூபா |
| கேக் | - | 15.00 ரூபா |

51. தேநீரொன்றும், மோதகம் இரண்டும் வாங்க எவ்வளவு பணம் வேண்டும்? ..............................
52. வடையும் கேக்கும் சாப்பிட்ட ஒருவர் கடைக்காரனிடம் 100 ரூபா கொடுத்தால், அவர் மிகுதியாகக் கொடுக்கவேண்டிய பணம் யாது? ..............................
53. ஒருவர் 3 மோதகமும், 3 வடையும், 7 வாழைப்பழமும் வாங்கிய பின்னர் 509 ரூபா காசு கொடுத்தால், மிகுதியாக எவ்வளவு பணம் பெற்றிருப்பார்? ..............................
54. பி.ப 10.50 இற்குப் புகையிரத நிலையத்திற்கு வந்தடைய இருந்த புகையிரதம் 15 நிமிடம் பிந்தி வருவதாக அறிவிக்கப்பட்டது. அவ்வாறெனில், இப்புகையிரதம் வந்தடையும் நேரத்தை நியம நேரத்தில் தருக.
..............................
55. ஒரு பாத்திரத்தில் நீரை நிரப்புவதற்கு 6 லீற்றர் அளவு பாத்திரம் பயன்படுத்தப்பட்டது. இவ் அளவு பாத்திரத்தினால் 12 தடவை நீரை ஊற்றியபோது பாத்திரம் நிரம்பியதாயின், நிரப்பப்பட்ட பாத்திரத்தில் இப்போது உள்ள நீரின் அளவு யாது? ..............................
56. கீழே தரப்பட்டுள்ள எண்களை ஏறுவரிசையில் ஒழுங்குபடுத்தி மீண்டும் எழுதுக. ..............................
0.8, 0.5, 1.1, 1.5
57. ஒரு பாடசாலையில் உள்ள தரம் 10 மாணவர்கள் விரும்பும் பாடவிவரங்கள் பின்வருமாறு:-




1) விவசாய பாடத்தினை விரும்பும் மாணவர்களின் தொகை யாது? ..............................
2) சமனாக விரும்புகின்ற இரு பாடங்கள் எவை? ..............................
3) வணிக பாடத்தை விட புவியியல் பாடத்தை எத்தனை பேர் கூடுதலாக விரும்புகின்றனர்?
..............................
4) எல்லாப் பாடங்களையும் விரும்பும் மாணவர்கள் தொகை யாது? ..............................
58. ஒரு பேருந்து வண்டியில் 40 பேர் பிரயாணம் செய்ய முடியும். கல்விச் சுற்றுலா செல்வதற்காக 250 பேர் ஆயத்தமானால் எல்லோரும் பிரயாணம்செய்ய எத்தனை பேருந்து வண்டிகள் தேவை? ..............................
59. ஒரு வியாபாரி 5 கி.கி 300 கி. தரமான தேயிலையுடன் 1 கிலோ 960 கிராம் தரம் குறைந்த தேயிலையைக் கலந்தான். அதிலிருந்து 850 கி. தேயிலையை விற்றான். எனில், அவனிடத்தில் எஞ்சியுள்ள தேயிலையின் நிறையைக் கிராமில் தருக. ..............................
60. உம்மிடம் 25 சத நாணயங்கள் நான்கும் (4), 50 சத நாணயங்கள் இரண்டும் (2), 1 ரூபா நாணயங்கள் எட்டும் (8), இரண்டு இருபது ரூபா தாள்காசும் இருந்தால், உம்மிடம் உள்ள பணம் யாது? ..............................

**ஒரு கட்டுரையின் முற்பகுதி கீழே தரப்பட்டுள்ளது. நிறுத்திய இடத்திலிருந்து ஆறு ஆக்கபூர்வமான வாக்கியங்களை எழுதுக.**

மாலை நேரம் நூல் நிலையத்தில் புத்தகம் வாசித்துவிட்டு வீடு திரும்பிவரும் நேரத்தில் தெருவோரமாக உள்ள கடையொன்றின் வானொலியில் விசேட செய்தி ஒன்று ஒலிபரப்பப்பட்டது. அந்தச்செய்தி யாதெனில், இன்று இரவு 9 மணி அளவில் சுனாமிப்பேரலை வரக்கூடிய சாத்தியக்கூறுகள் உண்டு என ஒலிபரப்பியது. அதைக் கேள்வியுற்றேன்.

(ஒவ்வொரு வாக்கியத்திலும் நான்கு சொற்களேனும் இடம்பெறவேண்டும். அவ்வாக்கியங்களில் எழுவாய், பயனிலைத் தொடர்பு சரியாக இருக்க வேண்டும்)

1) ..............................
2) ..............................
3) ..............................
4) ..............................
5) ..............................
6) ..............................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org